எங்கெங்கு காணினும் சக்தியடா

# சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 06 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | பிப்ரவரி 2026

காதலர் தினச் சிறப்பிதழ்

எங்கெங்கு காணினும் சக்தியடா!
சக்தி பெண்ணிதழ்

மலர் -2 இதழ் - 06 பிப்ரவரி 2026

**நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :**
முனைவர் செ.ராஜேஸ்வரி

**சிறப்பாசிரியர் :**
முனைவர் தேமொழி (USA)

**பொறுப்பாசிரியர் :**
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

**துணை ஆசிரியர் :**
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

## உள்ளடக்கம்

1. **கா தலர் தினச் சிறப்பிதழ் கவிதைகள்** 2

2. **காதல் அறிவியல்** 3
முனைவர். செ. இராஜேஸ்வரி

3. **கிளியே! (கவிதை)** 15
-இரம்யாநடராஜன்

4. **சீதையின் வளர்ப்புத் தாய் சுனைனா** 16
எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி,

5. **காதல் கணவர் (கவிதை)** 19
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்

6. **பூப்புக் குருதியின் தீட்டும் புனிதமும்** 20
சோஃபியா சாக்ரட்டீஸ், சென்னை

7. **ஐயப்படாது அது அகத்து உணர்ந்து வாழ்க!** 31
முனைவர் இல. ஜெயந்தி

8. **ஆசை மனைவிக்கு அன்புக் கணவனின் இரங்கல்** 38

9. **கவிதை** 40
ரிஸ்கா முக்தார்

10. **மங்களா வர்ஷினி (கதை)** 41
சசிகலா விஸ்வநாதன்

11. **தமிழாசியர்களுக்கு சம ஊதியம் பெற போராடிய பெண் போராளி** 46

12. **அம்மா (கவிதை)** 53
கேள்விக்காரன்...

13. **வாழ்க்கைத்தடம் (கதை)** 54
கவிஞர் மாலதி இராமலிங்கம்,

14. **புறாக்கள் மறைந்த இரவு** 64
வித்யா மனோகர்

15. **நூலாய்வு – கவிதையில் காதல்** 67
முனைவர் தே. ஞானசேகரன்

16. **இஸ்லாமியப் பெண் ஆளுமைகள் - கதீஜா அம்மையார்** 73
சம்சுல் ஹுதா பானு

17. **வரலாற்றுத் தொல்லெச்சமான நீலிக்கண்ணீர்!** 76
தமிழ்மாமணி, புலவர். பூங்கொடி பராங்குசம்

18. **வரமான சுகந்தங்கள்** 80
~கவிஞர் நளினி சுந்தரராஜன்.

19. **மருத்துவர் திலகம் பதம்பூஷன் பத்மாவதி** 81

20. **ஆத்திச்சூடி கதை -- அரனை மறவேல் (கதை)** 83
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

21. **விழியோரம் ஒரு வானவில் (கவிதை)** 84
மு.செந்தாமரை

22. ***ARANYANI* (கதை)** 85
*VIJENI*

23. **கார்ல் சாகனின் வெளிர் நீலப் புள்ளி** 88
தேமொழி

***Shakthi Pennithazh***

*Printed and Published by :*
*E.Satish Rajkumar (Advocate)*

*3/422, Dinamani Nagar, Madhurai,*
*Tamil Nadu - 625 018.*
*Ph : +91 7871123226, +91 7010997630*

**கட்டுரைகள் அனுப்ப..**
*sakthipennithazh@gmail.com*
*rajetamiljuly1@gmail.com*

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

# காதலர் தினச் சிறப்பிதழ்

## *கவியின் காதல்*

முன்பெல்லாம்
நான் ஆடவர் மகளிருடன் சேராமல்
என் கனவுகளுடன் மட்டும் வசித்தேன்

கனவுகள் தாம் என் இனிய உறவுகள்
அவை பாடிய இன்னிசை தவிர
வேறு நல்லிசை நான் கேட்டறியேன்
இவ்வுலகின் மாசு தூசில் இருந்து
அவற்றின் செல்வம், செல்வாக்கு விடுபடவில்லை
குழலிசையும் மௌன மொழி பேசிற்று

கண்களில் இருந்து கனவுகள் மறைந்ததும்
எனக்குக் கண் இருண்டது
மதி மயங்கியது

பின்பு என் நேசரே
நீங்கள் வந்தீர்கள்
தொடர்ந்து வந்தது அன்பின் இசை
ஆடம்பரம் அலங்காரம் எல்லாமே

இன்னும் இன்னும் சிறப்பாக வந்து
பள்ளத்துள் புகுந்த நதிநீர் போல
அனைத்தும் உமக்குள் சங்கமம்

என் ஆத்மாவின் அனைத்து தேவையையும்
நீரல்லவா நிறைவேற்றினீர்
ஆண்டவரின் அருட்சித்தமும் தயவும்
மனிதனின் பெரும் கனவுகளை அவமதிக்குமே!

காதலாகி காதலாகி
கரைந்து
உன்னுள் இறங்கிடும்
அருவி நானே
- முத்தமிழ் விரும்பி

The love with my man
Of the land of quality honey
Collected from Kurinji flowers
With black colour stalks
In the mountain slopes afar,
Is larger than the earth
Higher than the sky
And deeper than the oceans.

(Kurinji Song-3)-Devakulathaar

# காதல் அறிவியல்

**முனைவர். செ. இராஜேஸ்வரி**
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

காதல் என்பது ஆண் பெண் இருவருக்கு இடையே ஏற்படும் ஈர்ப்பு ஆகும் இதற்கு தொல்காப்பியர் இலக்கணம் கூறும்போது ஒன்றிணைக்கும் விதியின் ஆணையால் ஒத்த கிழவனும் கிழத்தியும் ஒருவரை ஒருவர் கண்டு உள்ளத்தால் கவரப்படுவதை காதல் அல்லது களவு என்கிறார். இன்னொரு நூற்பாவில் காமத்திணை (தொல்.1054) என்றும் குறிப்பிடுவார். இவ்விருவரில் ஆண் தகுதியால் உயர்ந்தவனாக இருந்தால் குற்றம் இல்லை என்றும் கருதுகிறார். அடுத்து

> இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
> காமக் கூட்டம் காணும் காலை (1038)

என்ற நூற்பாவில் இருவரும் ஒருவர்பால் ஒருவர் கொள்ளும் அன்பினால் இல்லற வாழ்வில் இணைவதை காதல் என்கிறார்.

காதல் கொள்ளும் ஆண் குலப் பெருமையும் உடல் உரமும் பெற்றவனாக விளங்க வேண்டும். (1044) பெண் அச்சம் நாணம் மடம் ஆகிய உயரிய பண்புகளைப் (1045) பெற்றிருக்க வேண்டும், என்பதும் தொல்காப்பியத் தமிழ் இலக்கண மரபு ஆகும்.

## தொல்காப்பியக் காதல்

தொல்காப்பியத்தில் திருமணத்திற்கு முந்தைய காதல் களவியல் என்ற அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது. திருமணத்துக்குப் பிந்தைய கணவன்-மனைவி உறவின் இலக்கணம் கற்பியல் என்ற அதிகாரத்தில் உள்ளது. பொதுவாகக் கணவனும் மனைவியும் இணைந்து வாழும் குடும்ப வாழ்க்கை காதல் வாழ்க்கையாக விளங்கும் என்று கொள்ள இயலாது. காதல் இல்லாமலும் குடும்பம் சிறப்பாக நடப்பதுண்டு. அவரவர் கடமையை சிறப்பாகச் செய்யும்போது குடும்ப வாழ்க்கை சீராக அமையும். ஆனால் காதல் என்பது கடமைகளைச் செய்வதற்காக ஏற்பட்ட உள்ளப் பிணைப்பு அன்று. காதல் ஒருவர்பால் ஒருவர் கொள்ளும் இனம்புரியாத ஈர்ப்பு ஆகும். எல்லோருக்கும் குடும்பம் அமையும் ஆனால் எல்லோருக்கும் காதல் அமைவதில்லை.

## காதல் - அறிவியல் விளக்கம்

இலக்கிய இலக்கணங்கள் காதல் என்பதற்கு வெவ்வேறு வரையறைகளை எடுத்துரைப்பது போல அறிவியலும் காதல் என்ற உணர்வு எப்படி தோன்றுகிறது என தன் துறை சார்ந்த விளக்கத்தைத் தருகின்றது.

அறிவியலாளர் காதலை மூன்று படிநிலைகளாக ஆராய்கின்றனர்

### 1. வேட்கை (lust)

ஆணுக்கு டெஸ்ட்டோஸ்டெரோன் என்ற சுரப்பும் பெண்ணுக்கு ஈஸ்ட்ரோஜென் என்ற சுரப்பும் அவர்களுக்குள் வேட்கையை உருவாக்குகிறது. இதனால் ஒருவர்பால் ஒருவர் ஈடுபாடு கொள்கின்றனர். சங்க இலக்கியத்தில் தலைவனைக் காண வேண்டும் என்ற வேட்கை கொண்ட காதலியின் நிலை மரத்தின் சிறு காம்பில் தொற்றிக் கொண்டிருக்கும் கனிந்த பழத்துக்கு ஒப்பிடப்படுகிறது.

சிறு கோட்டுப் பெரும் பழம்
தூங்கி யாங்கு இவள்
உயிர் தவச் சிறிது, காமமோ பெரிதே.

என்ற வரிகளில் வரும் காமம் உடற்கவர்ச்சி அன்று. இங்கு காமம் என்ற சொல் கனிந்த காதலைக் குறிக்கின்றது.

கமம் நிறைந்து இயலும் (838)

என்று செய்யுளியலில் தொல்காப்பியர் இச் சொல்லுக்குரிய பொருளை வரையறுக்கிறார். முத்தமிழ் விரும்பி தன் கவிதைகளில் அவன் அவளிடம் கொண்ட வேட்கையை அவள் உணராமல் இருப்பதை எண்ணிக் கலங்கி

தன்னை வதைத்தல்
தகாதடி பெண்ணே (காவியமொன்று உன் பெயரில்,
**தேனடையும் வரலாறு)**

என்றும்

நீ ஏன்
வதை முகாம் நடத்துகிறாய் (மனசறியும் வித்தை, உன்னோடு உரையாடுதல்)

என்று வேட்கையை கவித்துவமாக உணர்த்துகிறார்.

### 2. ஈர்ப்பு (attraction)

ஆணும் பெண்ணும் ஒருவர் பால் ஒருவருக்கு அவர்தம் உடலில் தோன்றும் மூன்று சுரப்புகளின் காரணமாக ஈர்க்கப்படுகின்றனர். அவை கிளர்ச்சியூட்டும் டோபோமின், அட்ரீனலின் மற்றும் நொரிப்பினேபிரின் ஆகியன. இச் சுரப்புகளால்

அவனும் அவளும் ஒருவரை விட்டு ஒருவர் கண நேரமும் பிரியாமல் இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வருகின்றனர். இருவரின் உள்ளங்களும் இரண்டறக் கலந்துவிட்ட இவ்வியல்பை

செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்தொகை 40)

என்கிறது சங்கப் பாடல்.

இம்மூன்று சுரப்பிகளில் அட்ரீனலின் சுரக்கும்போது பெண்ணின் கன்னம் சிவக்கிறது. இதனை நாம் நாணம் என்கிறோம். அவளது உள்ளங்கை வியர்க்கிறது. இதயத்துடிப்பு அதிகமாகின்றது. படபடப்புடன் காணப்படுகிறாள். காதலினால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் அவள் ஒருவனைக் காதலிக்க ஆரம்பித்து விட்டாள் என்ற எண்ணத்தை உறுதி செய்கின்றது.

தொல்காப்பியர் உவகைக்குரிய மெய்ப்பாட்டுக் களங்களைக் குறிப்பிடும் போது செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்.1205) என்கிறார். இவற்றில் புணர்வு என்பது உள்ளங்களின் இணைப்பைக் குறிக்கின்றது. காதலின் காரணமாக தோன்றும் மெய்ப்பாடுகளை இருபத்து நான்காக தொல்காப்பியர் வரிசையிடுகிறார்.

சில காதலருக்குத் தம்முள் ஒருவருடைய படத்தைப் பார்த்ததும் அல்லது பயன்படுத்தும் ஏதேனும் ஒரு பொருளைப் பார்த்ததும் மூளையில் டோபோமைன் சுரக்க ஆரம்பிக்கும். இதனால் அவர்களுக்குள் அதீத உள்ளக் கிளர்ச்சி ஏற்படும். பேருவகை தோன்றும். அளவிலா மகிழ்ச்சி ஏற்படும். இத்தகு செயல்பாடுகளை கவிஞர்கள் தங்களுடைய பாடுபொருளாக்கி கவிதை வரைந்துள்ளனர். முத்தமிழ் விரும்பி தன் கவிதையில் காதலியின் கடிதத்தைப் பார்த்த காதலன் அடையும் மகிழ்ச்சி,

தபால்காரன்
கையில் தரும்போதே
நேரில்
நீ வந்ததாய்
நினைக்கத் தோன்றும்

நிகழ்வின் புழுக்கம்
நெருக்கும் போது
தென்றலாய் வந்து
வீசும்
பேசும்

உன் முகவரி சொல்லும்
கையெழுத்து
முகம் மலர்த்தி
செலவான காலத்தின்
நினைவுகளுக்கு
எண்ணெயூற்றும் (பூ மர நிழல்)

என்று விவரிக்கிறார்.

## 3. பிணைப்பு (attachment)

ஆண் பெண் இருவரும் காதலிக்க ஆரம்பித்ததும் ஆக்சிடோஸின் சுரக்க தொடங்கும். அப்போது பிணைப்பு உண்டாகும். அப்போது இருவருக்கும் எப்போதும் உள்ளத்தாலும் உடலாலும் இணைந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். ஈருடல் ஒரு உயிராக வாழும் முடிவுக்கு இருவரும் வருவர். தங்களுக்குள் ஏற்படும் இப்பிணைப்பு வாழ்நாள் முழுக்கத் தொடரும் வகையில் நீண்டகாலத் திட்டங்களை உருவாக்குவர். ஆக்ஸிடோசின் சுரப்பு காரணமாக தழுவுதல், முத்தமிடுதல் போன்ற எண்ணங்களும் உருவாகும். உலகெங்கும் கவிஞர்கள் முத்தம் என்பதைத் தமது காதல் கவிதைகளின் முக்கியப் பாடுபொருளாய்க் கொண்டனர்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர் (காதற்சிறப்பு உரைத்தல், குறள் எண்:1121)
என்றார் வள்ளுவர்.
மூத்தவர் சம்மதியில் - வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப் பேனோடீ - இதுபார்
கன்னத்து முத்தமொன்று (கண்ணம்மா – என் காதலி கண்ணன் பாட்டு)

என்றார் பாரதியார்.

காதோரம் சூடேற
கட்டி
முத்தங்கள் பிழிவேன் (தேனடையும் வரலாறு)
என்கிறான் முத்தமிழ் விரும்பியின் கவிதை நாயகன்.

மேற்குறிப்பிட்ட சுரப்பிகள் இசை, நடனம், விளையாட்டு போன்ற நிலையிலும் சுரந்து மன மகிழ்ச்சியை உருவாக்கும்.

## காதலுக்கான காரணிகள்

ஒருவர் பால் மற்றொருவருக்கு ஈர்ப்பு உண்டாவதற்கான காரணிகளை அறிவியலார் ஆராய்ந்து தெரிவித்துள்ளனர்.

### 1. உடம்பின் வாசனை

சில பெண்களுக்கு ஆணின் உடம்பு வாசனை பிடிக்கும். இதற்கு அந்த ஆணின் உடம்பில் சுரக்கும் வியர்வை முதலான சுரப்பிகளின் மணம் காரணமாக அமையும். இந்த வாசனையால் கவரப்பட்டு அவனுடன் இருக்க அவள் விரும்புகின்றாள். விலங்குகளின் இணை விழைச்சுக் காலத்தில் ஆண் விலங்கின் உடம்பில் தனித்த ஒரு வாசனை தோன்றும் அந்த வாசனையால் பெண் விலங்குகள் கவரப்படும். யானைக்குக் கவுள் பகுதியில் இருந்து மத நீர் ஒழுகும். மத நீர் மணத்தை கவுள்ச்சி என்பர். இதைக் கவுச்சி என்று பேச்சு வழக்கில் சொல்வதுண்டு. ஆனால் மத நீர் வாசனை வண்டினங்களையும் தன் பால் ஈர்க்கும். பிடி எனப்படும் பெண் யானைகளைக் கவரும். தன்னை நாடி வரும் பெண் யானையை களிறு விரும்பும். எனவே,

களிறுக்குப் பிடிக்கும்
இளமை ததும்பும் பிடி (பிடி - தேனடையும் வரலாறு)
என்பார் முத்தமிழ் விரும்பி.

### 2. கருத்து ஒற்றுமை

காதல் தோன்றுவதற்கான இன்னொரு முக்கிய காரணி கருத்து ஒற்றுமை ஆகும். இருவருக்கும் இடையே கருத்து உடன்பாடு இருந்தால் அவர்கள் வாழ்வில் ஒன்று சேர்வதற்குக் காரணமான காதல் உருவாகும்.

காதல் இருவர் கருத்து ஒருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்

என்பது ஔவையார் வாக்கு. காதலில் வெற்றி பெற்றவர்களில் 80% பேர் இந்த அடிப்படையில் இணைந்தவர்கள் ஆவர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

### 3. வடிவழகு

மூன்றாவதாக ஒருவரின் தோற்றத்தால் கவரப்பட்டு காதலிக்கலாம். இக்கருத்தின் படி பெண்ணின் உடல் வனப்பு ஆணுக்குள் ஏற்படுத்தும் சிலிர்ப்பைப் போல ஆணின் உடல் அமைப்பு பெண்ணுக்கு அவன் மீது ஈர்ப்பை ஏற்படுத்துவது கிடையாது. இது மனித சமுதாயத்தின் இயற்கை. ஒரு பெண் ஆணின் செயல்திறன், பேச்சுத்திறன், அவனோடு இருப்பதால் கிடைக்கும் பாதுகாப்புணர்வு போன்றவற்றால் கவரப்படுகிறாள். வடிவத்தால் அல்ல, வண்ணத்தாலும் அல்ல. இதுவே உலக இயற்கை. இதன் காரணமாகவே உலகெங்கும் கவிஞர்கள்

பெண்ணின் உடல் அழகைப் பாடுபொருளாக்கிக் கவிதை புனைந்துள்ளனர். சங்க காலத்தில் எழுதப்பட்ட ஆற்றுப்படையில் விறலியை அங்கம் அங்கமாக வருணித்த புலவர் அவளது உள்ளங்காலின் சிவப்பை ஓடிக் களைத்த நாயின் நாவுக்கு உவமையாக்கினார் பாரதியார்

சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா
சூரிய சந்திரரோ
வட்ட கரிய விழி கண்ணம்மா
வானக்கருமை கொலோ (கண்ணம்மா என் காதலி, கண்ணன் பாட்டு)

என்று நலம் பாராட்டினார். இதனை பழந்தமிழிலக்கியத்தில் நலம் புனைந்துரைத்தல் என்றனர்.

வெண் தோள் தொட்டு விளையாடும்
நெளி பனைக்கூந்தல்
மலர் மணம்
நாகப் படமெடுத்தாட
மகுடியான
எனதிரு கண்கள்

நீயும் நோக்க
யாழ் வண்டுகள்

விழும் பாதவிரல் தொட்டு (முட்டித்தழுவும் இளவேனில், **உன்னோடு உரையாடுதல்)**

என்று நலம் புனைந்துரைக்கிறார் முத்தமிழ் விரும்பி. பெண்ணின் அழகைப் புனைந்துரைப்பது அனைத்துலக ஆண்களிடமும் அனைத்துக் காலத்திலும் காணப்படும் இயல்பாகும். ஆனால் பெண்கள் ஆண்களின் உடலை வர்ணிப்பது கிடையாது. பெண்கள் ஆணின் உடலை கண்டு மோகம் கொள்வதில்லை. அவனது விரிந்த தோளும் பரந்த மார்பும் அவன் வீரத்தின் அடையாளமாகவே காட்டப்படுகிறது. பெண்பாற் புலவர்களும் பெண்களின் காதல் உணர்வுகளை மட்டுமே பாடினர். காதலைப்பற்றி சாஃபோ என்ற கிரேக்க பெண் கவிஞரின் கிரேக்கப்பாடலின் ஆங்கில வடிவம் வருமாறு

*Peer of the Gods is that man, who*
*Face to face, sits listening*
*To your sweet speech and*
*Lovely laughter.*

*It is this that rouses a tumult*

*In my breath,*
*At the mere sight of you*
*My voice falters,*
*My tongue is broken*

*Straight away, a delicate fire*
*Find in my limbs*
*My eyes blinded*
*And my ears thundered*

*Sweat pours out,*
*A trembling hunts me down*
*I grow pale than dry grass*
*And lack little of dying*

*(ஆங்கிலத்தில் William Carlos William)*

சாஃபோவின் இக்கவிதையில் அவனைக் கண்டதும் அவளுக்குள் ஏற்படும் மாற்றங்கள் உடலியல் மற்றும் உளவியல் மாற்றங்கள் உணர்தப்பட்டுள்ளன. பெண்கள் தமது கலைப்படைப்புகளில் விரும்புவதும் விளக்குவதும் இதைத் தான். பாரதியாரும் கண்ணன் என் காதலன் கவிதையில் பெண்ணின் உள்ளக் கிடக்கையை அவள் வாயிலாக விளக்கும்போது பெண்ணின் உளவியல் தெற்றென விளங்குகிறது.

வடிவமைப்பு என்று விளக்கும்போது பெண்ணின் இடுப்புக்கும் தோளுக்கும் இருக்கும் அளவு *7:10* என்றும் ஆணுக்கு இதே அளவு *9:10* என்றும் மேலைநாட்டில் வரையறுத்துள்ளனர் இத்தகைய வடிவமைப்பு ஒருவர் பால் மற்றவருக்கு ஈர்ப்பு ஏற்படுத்துகிறது என்பது பொதுவான கணிப்பு ஆகும். மேலும் ஒரு ஆணுக்கு டெஸ்டோஸ்டிரோன் அதிகமாக சுரந்தால், விந்து எண்ணிக்கை கூடுதலாக இருக்கும், அவரது மரபுக் கூறுகள் ஆரோக்கியமாக விளங்கும்.

## காதலின் வகைகள்

மேலைநாட்டில் காதலை ஏழு வகையாகப் பிரிக்கின்றனர். அவற்றை கிரேக்கச் சொற்களால் விளக்குகின்றனர்.

1. ஈராஸ் *(eros)* - பாலுறவு சார்ந்த ஈர்ப்பு,
2. ஃபிலியா *(philiea)* - மனம் சார்ந்த ஈர்ப்பு
3. லூடுஸ் *(ludus)* - விளையாட்டுக் காதல்

4. ப்ராக்மா *(pragma)* - நீண்ட காலம் நிலைத்திருக்கும் உறவு

5. அகபே *(agape]-* ஆத்மாக்களின் இணைப்பு

6. ஃபிலவ்டியா *(philautia)* - தன்னைத்தானே காதலிக்கும் நிலை.

7. ஸ்டோர்கே *(storge)* - குழந்தைக் காதல்

இந்த ஏழு வகை காதலில் மூன்றை மட்டும் மிகச்சிறப்பானதாகக் கருதுகின்றனர். அவை *eros, phileo, agape* என்ற மூன்றும் ஆகும். இம்மூன்றனுள் அகபே எனப்படும் வகை, தமிழ்க் காதலோடு ஒப்பு நோக்கத்தக்கது. காதலர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதில் அளவுகடந்த ஆசை கொண்டிருப்பதைக் குறிக்கிறது. இவர்களுக்கு இடையிலான காதல் எவ்வித இடையூறு ஏற்பட்டாலும் மாறாதது. ஒருவர் பால் ஒருவர் கொண்டுள்ள ஈர்ப்பு உறுதியானதாகவும் ஆழமானதாகவும் இருக்கும்

*நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பே*
*என்ற குறுந்தொகை(3) காட்டும் காதலை ஒத்தது.*

மேலும் *'அகபே'* என்ற காதல் வகை ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியை ஊட்டிக்கொண்டே இருக்கும். திருமறையிலும் அகபே விருந்து பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அகபே வகைக் காதலை மேலைநாட்டார் சிறப்பான காதலாகக் கொண்டாடுகின்றனர்.

## முத்தமிழ் விரும்பியின் 'அகபே' காதல் கவிதைகள்

அகபே எனப்படும் சிறப்பான காதல் வகையைச் சேர்ந்தவை முத்தமிழ் விரும்பியின் காதல் கவிதைகள் ஆகும். இவரது கவிதைகளில் கோபம், வெறுப்பு, பகைமை, துரோகம் போன்ற எதிர்மறை உணர்வு பிரதிலிப்புகளைக் காண இயலாது. காதலின் உன்னதம் எடுத்துரைக்கப்படும் கவிதைகளையே காணலாம்.

*தேனான பெண்ணவள்*
*தெவிட்டாத சொல்லவள்*
*காய்ச்சல் தரும் கதிரின் ஒளி*
*மாலை காலத்தில் வரும்*
*சிறு மழையில்*
*மேனி முழுவதும்*
*பரவிச் சிலிர்க்கும்*
*மெல்லிய ஈரம்*

அவளது குறும்புச் சொல் (தேனான பெண், **உன்னோடு உரையாடுதல்**)

என்பன போன்ற கவிதைகள் ஏராளம். காதலுக்கு வரைவிலக்கணம் தரும் மற்றொரு கவிதை,

உன்னில்
என்னில் விதைத்தால்
என்னில்
உன்னில் விளையும்
பூ( பூ மர நிழல்])

என்ற இக்கவிதை மனதுக்குள் காதலை விளைத்தால் மகிழ்ச்சி என்ற பூ பூக்கும் என்கிறது.

## அன்பின் ஐந்திணை

சங்க இலக்கியத்தில் காணும் அகப்பாடல்களில் அன்பின் ஐந்திணை என்று குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலைத் திணைகள் பிரிக்கப்பட்டு முதல் உரி, கரு என்று பாடுபொருள்களும் வகைப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு நிலப் பின்புலத்துக்கும் சிறப்பான உரிப்பொருள் (பாடுபொருள்) தெரிவு செய்யப்பட்டது. எல்லா நிலத்திலும் எல்லாம் உரிப் பொருளும் காணப்படும் என்றாலும் புலவர்கள் பாடும்போது அந்நிலத்தின் பின்புலத்தையும் உரிப்பொருளுடன் இணைத்துக் காட்டுவதால் அதற்கேற்ப உரிப்பொருள் வரையறுக்கப்பட்டது. திருமணம் முடிந்து தேனிலவு செல்பவர்கள் ஊட்டி, கொடைக்கானல், சிம்லா, காஷ்மீர், என்று மலைப்பகுதியைத் தேடிச் செல்கின்றனர். மலையும் மலை சார்ந்த இடமும் காதலுறவுக்கு ஏற்றது. குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் கூடலும் கூடல் நிமித்தமும் ஆகும். ஆக 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியத்தின் உரிப்பொருள் தெரிவு இன்றைக்கும் பொருந்தி அமைவதைக் காணலாம். காதல் தோன்றும் இடமாக குறிஞ்சித்திணை காட்டப்படுகிறது.

## தொழிற் புரட்சியும் புனைவிலக்கியமும்

ஐரோப்பாவில் தொழிற்புரட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் காதலை மிகைப்படுத்தி பாடுகின்ற கவிதைகள் அதிகமாகத் தோன்றின. கீட்ஸ், ஷெல்லி போன்ற கவிஞர்கள் காதலைப் பற்றி அழியாக் கவிதைகளை இயற்றினர். ரொமாண்ட்டிசிஸம் என்ற அமைப்பு தோன்றியது ரொமான்ஸ் என்றால் பெரும் கூட்டத்தைப் பார்த்து 'ஒ மக்களே' [Ro mans] என்று அழைப்பதாகப் பொருள்படும். ஆக 'ரொமாண்ட்டிக்' என்ற சொல் மக்களுக்கான என்ற பொருளில் பயன்பட்டது. அதற்கும் றோம் நாட்டுக்கும் மக்களுக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. மக்களுக்கான புனைந்துரை படைப்புகள் என்றே கொள்ளவேண்டும். ஆனால்

அதன்பேரில் பெரும்பாலும் காதல் கவிதைகளே இயற்றப்பட்டதனால் அச்சொல் காதல் உணர்ச்சியைக் குறிப்பதாக பொருள் பெறலாயிற்று.

## காதலின் வகைகள்

காதல், இலட்சியக் காதல், ஆன்மீகக் காதல், புலன் உணர்ச்சிக் காதல் என்று மூவகைப்பட்டது, எனப்பார் முனைவர் ஜான் சாமுவேல்.. பெரும்பாலும் புனைவு இலக்கியக் காலத்துக் கவிஞர்கள் ஆங்கிலத்தில் இலட்சியக் காதல் *[ideal love]* பற்றி பல கவிதைகளை எழுதினர். அக்காலகட்டத்தில் உலகெங்கும் பல மொழிகளிலும் வந்த திரைப்படங்களும் நாடகங்களும் இலட்சியக் காதலைத் தமது கருப்பொருளாகக் கொண்டிருந்தன. கிப்ரான், ரூமி போன்ற சூஃபி *(sufi)* கவிஞர்கள் ஆன்மீகக் காதல் *[mystic love]* பாடல்களைப் பாடினர். இவற்றையும் பலர் இலட்சியக் காதலோடு இணைத்து நோக்கினர். புலன் நுகர்ச்சி காதல் *[Sensual love]* சற்று மதிப்பு குறைந்ததாகக் கருதப்பட்டாலும் அதே காலக்கட்டத்தில் இக்காதல் பாடல்களுக்கும் வரவேற்பு இருந்ததாக அறிகிறோம்.

## ஆத்தும நேசர் *(soul mates)*

ஆத்தும நேசர் என்பது கிறிஸ்தவர்களின் மொழி வழக்கில் காணப்பட்டாலும் அது தெய்வீகக் காதலை மட்டும் குறிப்பதன்று. காணவோ பேசவோ பழகவோ வாய்ப்பில்லாத நிலையிலும் ஒருவரை ஒருவர் காதலிப்பதே ஆத்தும நேசம் எனப்படுகிறது. இவர்கள் தமக்குள் டெலிபதி காரணமாக எதிர்வினை ஆற்றுவதாகவும் நம்பப்படுகிறது. உடல் கவர்ச்சி இல்லாத காதல், ஆத்தும நேசம் எனப்படும். இக் காதலர்களை ஆங்கிலத்தில் *soul mates* என்பர்.

தெய்வீகக் காதல் என்பது ஆண்டாள், ராதை, மீரா போன்றோர் கண்ணனுடன் கொள்ளும் காதலைப் போன்றது. மதுரைப் பகுதியில் பெண்களைப் பாண்டி சாமி பிடிப்பதும், அவர்கள் பாண்டிசாமியோடு கற்பனையில் வாழ்வதும் இவ் வகையைச் சேர்ந்ததாகும். ஆண்டவரைத் தமது மணவாளனாகக் கருதுவதை கிறிஸ்துவத்திலும் காண்கிறோம். கிறிஸ்துவத் திருமறையின் உன்னதப் பாடலில் இக்காதலை வெளிப்படுத்தும் பாடல்களும் உள்ளன. இவற்றில் காதலர் ஒருவர் மீது மற்றவர் கொண்டுள்ள பிரமிப்பும் அன்பும் மிக உயர்ந்ததாகும். சான்றாக, உன்னதப் பாட்டில் 'உன் நேசர் மற்றவரை விடச் சிறப்பானவரா?' எனக் கேட்ட போது அவள்

> என் நேசர் சிவப்பானவர்,
> அவரது தலை சுத்தமான தங்கத்தைப் போலிருக்கும்,
> அவரது கன்னங்கள் மணம் மிகுந்த வாசனை பூக்கள் நிறைந்த தோட்டம் போலிருக்கும்

என்று புகழ்ந்து கொண்டே போகிறாள். நேசரரும் தன் பிரியத்துக்குரிய பெண்ணை பின்வருமாறு வருணிக்கிறார்,

*என் அன்பே என் மணமகளே*
*உன் அன்பு மிக அழகானது*
*உன் அன்பு திராட்சை ரசத்தை விட சிறந்தது,*
*என் அன்பே நீ எருசலேமை போன்று இனிமையானவள்*

*இவ்வருணனைகளுக்கு இறையியல் நோக்கில் விளக்கம் அளிக்கப்படுகிறது. இஸ்லாத்திலும் இறைவனை நேசிக்கும் மங்கையர் வாழ்க்கை பற்றி இஸ்லாமிய எழுத்தாளர் அர்ஷியாவின் நூல்களில் வாசிக்கிறோம். பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆகியன திருமங்கை ஆழ்வார் தம்மைப் பெண்ணாகப் பாவித்துப் பெருமாளை நேசித்த பாங்கை எடுத்தியம்புகிறது.*

## *இலட்சியக் காதல் (Ideal love)*

*இலட்சியக் காதல் என்பது கண்டவுடன் காதல், காதலன் தீயவன் என்று அறிந்த பின்பும் அவனை மணந்துகொண்டு திருத்தமுயல்வது, காதலனைத் திருமணம் முடிக்க இயலாத சூழ்நிலையில் இருவரும் மரணத்தைத் தழுவுவது, அல்லது வேறொருவரைத் திருமணம் செய்யாமல் தனியாளாய் இருப்பது, சமூகத்தொண்டு நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்றுவது என்று காதல் தோல்வியால் துவளும் நிலை இலட்சியக் காதலின் இயல்பாகப் போற்றப்பட்டது. ஏழு பிறவியிலும் இவ்விருவரே இணைந்து வாழ வேண்டும் என விரும்புவது இலட்சியக் காதலின் ஓர் அம்சமாகும். கலைப்படைப்புகள் ஜென்ம ஜென்மமாகக் காதலிக்கும் இலட்சியக் காதலின் வெற்றியைப் போற்றின.*

*அன்பின் ஐந்திணைப் படி காதலைப் பாடுபொருளாகக் கொண்ட சங்க இலக்கியத்தில் சான்றோர் பெருமக்களைக் கொண்டு தொகுத்ததால் இலட்சியக் காதல் பாடல்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. பொருந்தாக் காதல் பற்றிய பாடல்கள் சில்வற்றை மட்டுமே காண முடிகிறது. மற்றவற்றை வேண்டாம் எனப் புறந்தள்ளி இருக்கலாம். சங்க இலக்கியத்தில் ஒரு தலைவி*

*இம்மை மாறி மறுமை ஆயினும்*
*நீயாகியர் என் கணவனை*
*யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்தொகை 49)*

*என்கிறாள். 18, 19ஆம் நுற்றாண்டுகளின் கலைப் படைப்புகள் இலட்சியக் காதலைத் தமது நுவல் பொருளாக்கிக் கொண்டதால் மக்களும் இக் காதலைச் சிறந்த வாழ்வியல் அறமாகப் போற்றினர். இக்காலத்தில் நுகர்வுக் கலாச்சாரம் உலகெங்கும் மதிப்புப் பெற்று விட்டதால் இலட்சியக்காதல் கேலிப் பொருளாகிவிட்டது.*

*காதலுக்கான வரைவிலக்கணம் காலந்தோடும் மாறினாலும் காதல் உணர்வு மனிதர்களை விட்டு மறையவில்லை. காதல் இன்றும் கலைஞர்களின் நிரந்தரக்*

கருப் பொருளாகி இருப்பதை மறுக்க இயலாது. இரண்டாயிரம் ஆண்டுகளாகச் செம்புலப் பெயல் நீர் போல காதலில் திளைத்து வரும் ஆண்

உன்னோடு
எனது அரிய பொழுதுகளும்
கரைக்கவியலா எழுத்துக்களும்
தவிர்க்கப்பட்ட முத்தங்களும்
உடன் பயணிக்கின்றன (தவிர்க்கப்பட்ட முத்தங்கள், காதல் மொழி)

என்று காதலியோடு சேர்ந்து பயணிக்கின்ற காதல், இன்றும் கலையாகவும் நிலையாகவும் வாழ்கின்றது.

## சுயம் அழித்து சுகம் தரும் காதல்

காதல் என்பது இருவரின் அகங்காரத்தை அழித்து ஒரே சிந்தனையுடன் ஒரே பாதையில் பயணிக்க வைக்கும் என்ற கருத்தை 'விழைவு' என்ற கவிதையில் முத்தமிழ் விரும்பி எடுத்துக்காட்டுகிறார். ஒருவன் தன் மனதில் யாரும் அறியாமல் மறைத்து வைத்திருக்கும் காதலைத் இதுவரை திறந்து காட்ட இயலவில்லை; அந்தக் காதலை பிறர்க்கு உணர்த்தி விட்ட பிறகு 'என்' என்ற இறுமாப்பு தொலைந்து விடும். பிறகு அவளும் அவனும் ஒன்றாக இணைந்து விடக்கூடும் என்று நம்புகிறான். இதனையே

கை மூடி வைத்திருக்க
காணக் கிடக்கிறேன்
திறந்தபோதில்
காணாமல் போவது
நானுடன் நீ (பூ மர நிழல்)

என்று கவிதை படைத்துள்ளார். கை மூடி வைத்திருக்கும் காதலைத் திறந்து காட்டி விட்டால் காதல் வெளிப்பட்டு விடும். ஆனால் காதலரின் நான் என்பதும் நீ என்பதும் காணாமல் போய் நாமென்ற சொந்தம் தோன்றிவிடும். காதல் தான் என்னும் அகந்தையைத் தொலைக்கிறது என்ற இவரின் கருத்து புதிது. இவ் அகந்தை தொலைந்தால் இருவரும் அவ்வையார் பாடியது போல 'கருத்தொருமித்த காதலர்' ஆகிவிடுவர். ஈருடல் ஓருயிர் என்பது போல இருவருக்கும் ஒரே உயிர் ஒரே சிந்தனை ஒரே கருத்து என்ற நிலை தோன்றும்.

இவ்வாறாக காதலின் சிறப்பு முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் நுட்பமாக உணர்த்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

## கிளியே!

தனிமை தகிக்குதடி -கிளியே
தணியாத தாகமடி
தலைவன் கூற்றென்னடி -கிளியே
தவிப்பில் நீருற்றடி

பொழுதும் வாட்டுதடி -கிளியே
பொலிவும் தேயுதடி
பிரிவின் பித்தத்திலே- கிளியே
பிதற்றும் மொழி கேளடி

கானகப் புள்ளி மார்பன் -அவன்
கன்னியென் மனங்கொள் சோமன்
வரையென எழுந்த தோளன் -மலர்
வண்டென முயங்கும் மாலன்

இருவிழியதனில் தன்னை
இருத்தியே உறைந்துவிட்டான்
இமைத்திடும் கணங்கள்தோறும்
இறுகவேப் பற்றிக்கொண்டான்

கண்களில் கலந்துநின்றே
காதலெனக் கரைந்துவிட்டான்
மையிட்டெழுதும் முன்னம்
மையலில் இட்டுவிட்டான்
தொடுத்த விரல் அணைப்பில் – உயிர்
கொடுத்தென் ஆவி கொண்டான்
தோள் அணைத்த பொழுததனில் – வழி
துணையென்றே ஆக்கிக்கொண்டான்

கனவுகள் விளையுதிங்க
கருத்தினில் பரவிக்கொண்டான்
நினைவுகள் துரத்தும்போதில்
நீங்காத மூச்சென்றானான்

என்னென்று உரைப்பேனடி -கிளியே
ஏதென்று அறியேனடி
எண்ணத்தில் கலக்கமடி -கிளியே
ஏன் இந்த ஏக்கமடி

மன்னவன் மயக்கத்திலே -கிளியே
மஞ்சத்தில் நஞ்சென்னடி
என்னவன் பெயர் சொல்லடி -கிளியே
நெஞ்சத்தை வனம் செய்யடி

**-இரம்யாருடராஜன்**

# சீதையின் வளர்ப்புத் தாய் சுனைனா

**எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி,**
**சென்னை**

கிழக்கு கங்கைச் சமவெளியில் அமைந்துள்ள விதேக நாடு வடக்கு பீகார் மற்றும் தெற்கு நேபாளத்தின் சில பகுதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. கண்டக் நதி இதன் மேற்கு எல்லையாக அமைந்துள்ளது. இந்நாட்டின் தலைநகரம் மிதிலை. ''விதேகம்'' என்றால் உடல் மீதான பற்றை விடுதல் என்று பொருள்.

ஒரு நாள் விதேக நாட்டின் அரசர் ஜனகரும், அரசி சுனைனாவும் ஒரு யாகத்தின் பொருட்டு நிலத்தை உழும்போது ஒரு அழகான பெண் குழந்தை அவர்களுக்கு கிடைத்தது. பூமியில் கிடைத்த குழந்தையை எடுத்து சீதை என்று பெயரிட்டு வளர்த்தனர். ஜனகரின் மனைவி சுனைனா சீதையைக் கடவுள் கொடுத்த குழந்தையாகக் கருதி அன்புடன் வளர்த்து வந்தாள். அதன் பிறகு சுனைனாவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஊர்மிளா என்று பெயரிட்டனர். இருப்பினும் ஜனகரும், சுனைனாவும் சீதையையே தங்கள் மூத்த மகளாகக் கருதினர். முதல் இளவரசி என்ற அந்தஸ்து சீதைக்கே வழங்கப்பட்டது. சுனைனா தான் பெற்ற மகளையும், பெறாத மகளையும் எந்த வித வேறுபாடுமின்றி வளர்த்தாள்.

சீதை சிறுமியாக இருந்தபோது சிவ தனுசை தன் பிஞ்சுக் கரங்களால் தூக்கி விளையாடினாள். எவராலும் அசைக்கக் கூட முடியாத சிவ தனுசை இச்சிறுமி விளையாட்டாகத் தூக்குகிறாள் எனில் இவள் தெய்வீக சக்தி உடையவளாக இருக்க வேண்டும் என்று சுனைனா நினைத்தாள். அரண்மனையில் உள்ள வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சீதை தூக்கி விளையாடிய சிவ தனுசை அதன் இருப்பிடத்தில் வைத்தனர். அந்நிகழ்விற்குப் பின் சுனைனாவிற்கு சீதையின் மீது இருந்த அன்பு அதிகரித்தது. சீதையின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும் என ஊர்மிளாவையும் அறிவுறுத்தினாள். சிவ தனுசை சுலபமாகத் தூக்க முடிகிற சீதையை மணப்பவன் அவளுக்கு நிகரான தெய்வீக சக்தியுடைய இளவரசனாக இருக்க வேண்டும் என ஜனகரும், சுனைனாவும் முடிவு செய்தனர். அதனால் சுயம்வரத்தில் சிவ தனுசை எடுத்து நாணேற்றும் இளவரசனே சீதையை மணக்கத் தகுதியுடையவன் என்று ஜனகர் அறிவித்தார்.

சுனைனா என்ற பெயரில் உள்ள ''சு'' என்ற எழுத்து ''நல்ல, உயர்ந்த, அழகிய'' என்று பொருள்படும். ''நயனம்'' என்றால் ''கண்''. எனவே சுனைனா என்றால் அழகிய கண்களை உடையவள் என்று பொருள். சுனைனாவின் பிறப்பு மிகவும் விசித்திரமானது.

ஒரு நாள் கைலாயத்தில் பார்வதிதேவி சிவபெருமானுக்கு ஆபரணங்களை அணிவித்துக் கொண்டிருந்தாள். அப்போது சிவனின் மணிக்கட்டில் ஆதிசேஷனை இறுக்கிக் கட்டிவிட்டாள். வலி தாங்காமல் ஆதிசேஷன் கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர் விழுந்தது. இதிலிருந்து இரண்டு பெண்கள் தோன்றினர். இவர்கள் சுனைனா, சுலோச்சனா என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் தனது கண்ணீரில் இருந்து தோன்றியதால் தன்னுடைய மகள்கள் என்றார் ஆதிசேஷன். நான் உங்களை இறுக்கிக் கட்டியதால்தான் இப்பெண்கள் தோன்றினர். ஆகவே இவர்கள் எனக்கும் மகள்கள்தான் என்று பார்வதி உரிமை கோரினார். விவாதம் சிவபெருமான் முன்பு வைக்கப்பட்டது. இருவரும் ஆளுக்கு ஒரு மகளாக வளர்த்துக் கொள்ளுங்கள் என்று சிவன் கூறினார். அதன்படி சுனைனா பார்வதியிடம் வளர்ந்தாள். சுலோச்சனா நாகலோகத்தில் இளவரசியாக வளர்ந்தாள்.

இதே கதை வைகுண்டத்தில் நடந்ததாகவும் கூறப்படுகிறது. விஷ்ணு பகவானின் கையில் லட்சுமி தேவி ஆதிசேஷனை இறுக்கி கட்டியதாகவும், ஆதிசேஷன் வலி பொறுக்க முடியாமல் கண்ணீர் விட, அதிலிருந்து இரண்டு பெண்கள் தோன்றியதாகவும் கதை உண்டு. எது எப்படியோ சுனைனா, சுலோச்சனா இருவரும் ஆதிசேஷன் எனப்படும் பாம்பின் மகள்களாகக் கருதப்படுகிறார்கள்.

சுனைனா சிவபெருமானின் மீது தீவிர பக்தியுடையவள். ஜனகருடன் திருமணம் நடந்தபோது சிவபெருமான் விலை மதிப்பற்ற இரண்டு ஆபரணங்களை சுனைனாவிற்கு பரிசாகக் கொடுத்தார். அதில் ஒன்று சூடாமணி, மற்றொன்று விரலில் அணியும் மோதிரம். சிவன் வழங்கிய சூடாமணியையும், மோதிரத்தையும் சுனைனா மிகுந்த பக்தியுடன் பாதுகாத்து வந்தாள்.

ராமருடன் திருமணம் முடிந்து அயோத்திக்கு புறப்படும்போது சீதைக்கு சூடாமணியையும், மோதிரத்தையும் சுனைனா பரிசளித்தாள். கைகேயி கேட்ட வரத்தின்படி ராமரின் பட்டாபிஷேகம் நிறுத்தப்பட்டு, ராமர் பதினான்கு வருட வனவாசத்திற்கு புறப்பட்டார். சீதையும் அவருடன் சென்றாள். அயோத்தியை விட்டு நீங்கிச் செல்லும்போது தாய் சுனைனா அளித்த மோதிரத்தையும், சூடாமணியையும் சீதை அணிந்திருந்தாள்.

உண்மையில் ஜனகர், சுனைனா தம்பதியரின் ஒரே மகள் ஊர்மிளா மட்டுமே. விதேக நாட்டின் இளவரசி என்பதால் வைதேகி என்றும், மிதிலாபுரியைச் சேர்ந்தவள் என்பதால் மைதிலி என்றும், ஜனகரின் மகள் என்பதால் ஜானகி

என்றும் அழைக்கப்பட்டவள் சீதை. ஆனால் ஊர்மிளாதான் ஜனகரின் உண்மையான மகள். ஜானகி, வைதேகி, மைதிலி என்று அழைக்கப்பட வேண்டியவளும் அவளே. ஆனால் தான் பெற்ற மகளுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் அனைத்தையும் வளர்ப்பு மகளுக்காக விட்டுக் கொடுத்தவள் சுனைனா. அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டவள் ஊர்மிளா. அவளுக்கு ராமனின் தம்பி லட்சுமணனுடன் திருமணம் நடந்தது. மேலும் ஜனகரின் தம்பி குசத்வஜரின் மகள்கள் மாண்டவிக்கு பரதனுடன், சுருதகீர்த்திக்கு சத்ருகனனுடன் திருமணம் நடந்தது. விதேக நாட்டின் நான்கு இளவரசிகளும் கோசல நாட்டின் நான்கு இளவரசர்களை மணந்தனர்.

ஊர்மிளா தனது தாய் சுனைனாவைப் போலவே அன்பும், பெருந்தன்மையும் கொண்டவளாக இருந்தாள். ராமர், சீதை இருவருடனும் வனவாசத்திற்கு சென்ற கணவன் லட்சுமணனுக்காக பதினான்கு ஆண்டுகள் இரவு, பகலாக உறக்கத்தில் ஆழ்ந்தாள். சீதையின் மறைவிற்குப் பின் லவ, குசாவை தாயைப்போல் அன்புடன் வளர்த்தாள்.

மகாலட்சுமியின் அவதாரமாகக் கருதப்படும் சீதை ஜனகரின் மகளாக மட்டுமே அறியப்படுகிறாள். ஆனால் தத்தெடுத்த மகளுக்காக பெற்ற மகளின் உரிமைகளை விட்டுக் கொடுத்தவள் சுனைனா. மேலும் சிவபெருமான் தனக்கு அளித்த ஆபரணங்களைக் கூட தன் மகள் ஊர்மிளாவிற்குக் கொடுக்காமல் வளர்ப்பு மகளான சீதைக்கு வழங்கியவள். ஜனகரின் மகள் என்று அழைக்கப்பட்ட சீதை எந்த இடத்திலும் சுனைனாவின் மகள் என்று அழைக்கப்படவில்லை. காவிய நாயகியான சீதையின் தாய் சுனைனாவின் அன்பையும், தியாகத்தையும் இன்றுவரை உலகம் அறிந்திருக்கவில்லை என்பது வருத்தமான உண்மை.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

## *காதல் கணவர்*

உன்னோடு நான் வாழ்ந்த ஒவ்வொரு கணமும்
ஒரு அழகான கனவு
நனவான உணர்வு
அது கனவாகிப் போனாலும் கூட
என வாழ்க்கையின்
சிறந்த கனவு அதுதான்

வானவில்லை விட
வண்ணமயமானவை
அந்த நினைவுகள்
ஆனாலும்
வாட்டித்தான் எடுக்கின்றன

உன் குரலின் எதிரொலிப்பு
திசை காட்டியாகிய போது
பூத்த என நம்பிக்கை
காணாமல் தான் போய் விட்டது

வானத்தின் நட்சத்திரங்களைப் போல
உன் அன்பின் ஒளி
நிரந்தரமானதென்ற
என் நம்பிக்கை
காணாமல் தான் போய் விட்டது

கடைசியாகப் பார்த்த
அந்தப் பார்வையின் கனதி
இன்னும் என் இதயத்தில்
பாறாங்கல்லாய் உறைந்துள்ளது

என சிறந்த கனவு
சிதைந்து போனாலும் கூட
கனவில் தோய்ந்த இனிமை
இன்னும் விழிகளிலும்
இதயத்திலும்
என்றும் என்னோடு

**முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்**

# பூப்புக் குருதியின் தீட்டும் புனிதமும்

**சோஃபியா சாக்ரட்டீஸ், சென்னை**

ஆண் முதன்மை சமுதாயம் உருவான காலத்தில் இருந்து பெண்களை வெறும் உடலாக கருதி மதிப்பீடு செய்யும் மரபு இன்றுவரை தொடர்கின்றது. ஓர் இயற்கை நிகழ்வைப் பற்றி அறியாமல் இனித் காலத்தில் மந்திரம், மாயம் என்று நம்புவது இயற்கை. ஆனால் அறிவியல்.புரட்சி நடந்த பிறகும் பெண்ணை ஓர் உடலாக மட்டுமே பாவித்து இன்றைக்கும் அவளை தனிமைப்படுத்துவதும் கோயில் காரியங்களில் தள்ளி வைப்பதும் இந்த சமூகத்தில் சட்டம், சம்பிரதாயம், சமயம் என்ற அனைத்தும் ஆண் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதை தெளிவாக்குகிறது. பெண் மனம் உள்ள மனுஷி அல்ல அவள் வெறும் உடலாகவே கருதப்பட்டுகிறாள் என்பதை உறுதி செய்கிறது.

## மாத விடாயின் மந்திர சக்தி:-

பெண் முதன்மை சமுதாயம் இருந்த காலத்தில் பெண்ணின் பூப்புக்குருதி *(menstrual blood)* கண்டு ஆண் சமூகம் அஞ்சியது. அதனை மீ இயற்கை சக்தியாக *(metaphysical power)* கருதியது. அதற்கு மந்திர சக்தி (வசீகிரனம்) உண்டு என்று நம்பியதால் ஏவல், பில்லி, சூனியம் போன்றவற்றில் பயன்படுத்தியது. கிராமங்களில் முட்டுத் துணி எனப்படும் தீட்டுத் துணியை வைத்து மரணத்தை வருவிக்கும் மந்திரச் சடங்குங்களை புதிரை வண்ணார் செய்வதுண்டு. பெண்களை மயக்கி தன்பால் வசியம் செய்ய அவளது தலை முடி, நகம் மற்றும் தீட்டுத் துணியைப் பயன்படுத்துகின்றனர். கிபி 14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வந்த நொண்டி நாடகங்களில் (செய்யுள் இலக்கியம்) தாசியின் தாயான தாய்க்கிழவி கடைச் சரக்குகளுடன் (கடைகளில் கிடைக்கும் மருந்து பொருட்கள்) தன் எச்சில், தீட்டு, சுரத நீர் ஆகியவற்றை கலந்து வசிய மருந்து செய்யச் சொல்லித்தருவாள். இவ்வாறு பல நூற்றாண்டுகளாக பூப்புக்

குருதியை மந்திர சக்தி உடையதாகவே மக்கள் நம்பி வந்தனர். இதனால் இத்துணிகளை தற்காலத்தில் நேப்கின்களை மற்றவர் கண் படும் இடங்களில் போடக் கூடாது என்பர். சுகாதார அடிப்படையில் இதனை இன்று புரிந்துகொள்ளலாம். ஆனால் தீட்டுத் துணியை நாய் முகர்ந்து பார்க்கவோ இழுத்துக்கொண்டு போகவோ கூடாது. பருந்து அல்லது காகத்தின் நிழல் துணியின் மீது படக் கூடாது என்ற நம்பிக்கைகளும் நடைமுறைகளும் தற்காலம் வரை தொடர்கின்றன.

## விலக்கி வைத்தல்:-

பண்டைக் காலத்தின் பழக்க வழக்கங்களை இன்னும் தொடர்கின்ற ஆதிவாசிகள், மலைவாழ் மக்கள், தீவுகளில் வாழும் மக்கள் போன்றொரிடம் மட்டுமல்லாமல் படித்து முன்னேறிய பார்ப்பன சமுகத்தினரிடமும் அவர்களைப் பார்த்து பல பழக்க வழக்கங்களைப் பழகிப் பின்பற்றி வருகின்ற ஆதிக்க சாதியினரிடமும் கூட பூப்புக் குருதியைத் தீட்டு என்று கருதி தீட்டுக் காலத்தில் பெண்களை வீட்டுக்கு விலக்கு என்று வீட்டை விட்டு தனியாக புற வாசல் பக்கம் விலக்கி வைப்பதுண்டு.

## கர்ப்பத் தீட்டு

பெண்கள் குழந்தை பெற்ற பின்பு சில பிரிவினர் ஒரு மாதமும் சில சமயப் பிரிவினர் 40 நாட்களும் தீட்டுக் காலமாகக் கருதி அவர்களையும் குழந்தையையும் தனிமைப்படுத்துகின்றனர். தனிக்குடித்தனங்களில் இப்பழக்கம் காணப்படவில்லை.

பெண்ணின் உடலில் மாதம் ஒருமுறை நிகழும் தீட்டு என்ற குருதி ஒழுக்கு நிகழ்வை ஓர் இயற்கை நிகழ்வாக ஏற்றுக்கொள்ளாமல் அச்சம் அருவருப்பும் கொண்டதாக நம்பி பெண்கள் பூப்புக் காலங்களில் விலக்கி வைக்கப்பட வேண்டியவர்களாக இதுவரை இருந்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக இந்நிலை மாறி வந்தாலும் கூட இமாற்றம் பெருநகரங்களில் மட்டுமே மிகக் குறைந்த நபர்களிடம் மே காணப்படுகின்றது பெரும்பான்மையானோர் இன்னும் பெண்ணை ஓர் உடலாக கருதி அந்த உடலின் இயற்கையான சுரப்புகளுக்கு செயற்கையான விளக்கமும் விலக்கும் அளிக்கின்றனர். மாதவிடாய் காலத்தில் ஒரு பெண் சமைத்த உணவை சாப்பிட்டவன் மறு பிறவியில் நாயாகவும் பன்றியாகவும் பிறப்பான் என்று இன்றும் பார்ப்பனர்கள் மேடைகளில் பேசுகின்றனர். எனவே பெண்களை பூப்புக் காலத்தில் வெளிச்சம் இல்லாத இருட்டறையில்

*One girl shut in a hut where no sun light could enter. A hut made of palm leaves covered on all four sides*

அல்லது தென்னை ஓலைகளாலான குச்சு எனப்படும் முக்கோணக் குடிசையில் அடைத்து வைத்தனர்.

## இருப்பிடக் கட்டுப்பாடுகள்

மலபாரில் கன்னி பெண் தனித்து இருத்தல்

தனியாக பெண்ணை தங்க வைப்பதில் ஒவ்வொரு பகுதியினரும் ஒவ்வொரு பழக்கத்தைக் கொண்டிருந்தனர். கிழக்கு பொலிவியாவில் தன் மகள் வயதுக்கு வந்ததை அறிந்த தந்தை உடனே தென்னங்கீற்றுகளால் வீட்டிற்கு அருகில் ஒரு சிறு குச்சு கட்டி அந்தப் பெண் சூரிய ஒளியை காணாத வகையில் நான்கு நாட்கள் தனியே ஒதுக்கி வைத்து விடுவார்

பொலிவியாவின் தென்பகுதியில் பூப்படைந்த பெண்களை கூரையின் பரனில் ஏற்றி விடுவார்கள். ஒவ்வொரு மாதமும் படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக இறக்கிக் கொண்டு வருவர். மூன்றாவது மாதம் முடிந்ததும் அவள் தரைப் பகுதிக்கு வரலாம். இவ்வாறு அவள் வீட்டின் பரனில் கூரைக்கு உள்ளே ஒளிந்து இருக்கும் போது வீட்டினர் எவரையும் அவள் பார்க்கவோ அவர்களுடன் பேசவும் கூடாது. குடும்பத்தினர் அவளுக்கு இறைச்சியோ மீன் உணவு கொடுப்பதில்லை. அதே வேளையில் இந்த வீட்டிற்குள் ஒரு பெண் பூப்படைந்து இருக்கின்றாள். எனவே யாரும் இங்கே வரவேண்டாம் என்று அறிவுறுத்துகின்ற வகையில் அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் வீட்டு வாசலில் இருந்து தமுக்கு அடித்துக் கொண்டே இருப்பார். இந்த சத்தம் கேட்டு அப்பகுதிவாள் மக்கள் அவர்கள் வீட்டை விட்டு ஒதுங்கி விலகிச் செல்வார்கள்.

வங்காளத்தில் பார்ப்பனர் வீடுகளில் வயதுக்கு வந்த பெண்களை ஆண்கள் பார்ப்பது கிடையாது. ஐந்து நாட்கள் அவர்களை இருட்டறையில் போட்டு பூட்டி வைத்து ருசியற்ற உணவை வழங்குவர்

கேரளாவில் தீயர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் கன்னி தீட்டின் போது நான்கு நாட்கள் வீட்டுக்கு வெளியே வைக்கப்படுவர். அப்போது அந்த நான்கு நாட்களும் வேறொரு இளம் பெண் அவளுக்கு துணையாக தென்னங்கீற்றினாலான குச்சுக்குள் தங்கி இருப்பாள். ஆனால் அவளும் அந்தப் பெண்ணைத் தொட மாட்டாள்.

கம்போடியாவில் 100 நாட்கள் கொசு வலையை கட்டி அதற்குள் ஒரு கட்டிலிட்டு முதல் பூப்படைந்த பெண்ணை தங்க வைப்பது வழக்கம். தற்போது இந்த நூறு நாட்கள் 20, 10 ,5, 4 என்று குறைந்து விட்டன. நிழலுக்குள் ஒதுங்கி விட்டால் என்ற வாசகமே ஒருத்தி பூப்படைந்து விட்டால் என்பதை குறிக்க கம்போடியாவில் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழகத்திலும் இப்பெண்களை குறிக்க ஒதுக்கமா இருக்கிறாள் விலக்காகி இருக்கிறாள், தூரமாகி இருக்கிறாள் என்ற தொடர்களே பயன்படுகின்றன.

குருதி பூஜை நடக்கும் கோயில்

பெண்களின் பூப்பு காலத்தில் அவர்களை மரத்தின் மீது மரக்கிளைகளில் ஏறி உட்கார்ந்து கொள்ள சொன்னதும் உண்டு. மரத்தின் மீது ஒரு குடிசை கட்டி அவளை அவள் கால் மண்ணில் படாமல் தனித்து இருக்கச் செய்தனர். நீர் நெருப்பு ஆகாயம் பூமி ஆகிய நான்கு பூதங்களில் இருந்தும் அவளை விலக்கி வைத்ததை உணரலாம். காற்றை விட்டு விலக்குவதற்காக தான் அவளை பெரிய போர்வையில் போட்டு போர்த்தி வைத்துள்ளனர். எனவே ஐம்பூதங்களில் இருந்தும் அவளை விலக்கி வைத்துள்ளனர் என்றால் அவளது பூப்புக் குருதி மீதான அச்சத்தின் தீவிரத்தை உணர முடிகிறது.

தென்னாப்பிரிக்காவில் ஆடு மாடுகளை மேய்த்து வந்த பழங்குடியினர் பூப்புக் காலத்தில் பெண்கள் நடந்து செல்வதற்காக தனியாக வீடுகளின் புறவாசல் வழியாக பாதைகள் அமைத்திருந்தனர். பெண்கள் தாம் வளர்க்கும் ஆடு மாடுகளின் பாலை கூட பூப்புக்காலத்தில் குடிக்கக்கூடாது. எனவே இவர்கள் மாட்டு தொழுவத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை.

## உணவுக் கட்டுப்பாடுகள்

பூப்புக் காலத்தில் பெண்களுக்கு உணவு கொடுப்பதில்லை. சில இனங்களில் பெண்களுக்கு சத்தான உணவுகள் கொடுப்பதில்லை. தென் போலிவியாவில் ஒதுக்கி வைக்கும் நான்கு நாட்களும் ஒன் பட்டினி தான். உணவு கிடையாது.

தெற்கு பிரேசில் அருகே உள்ள சில இடங்களில் இறைச்சி உணவு தருவது கிடையாது. இதன் தொடர்ச்சியாக தமிழகத்திலும் பூப்புக் காலத்தில் இறைச்சி உணவு உண்டால் குருதிப் போக்கு அதிகமாக இருக்கும் என்ற நம்பிக்கை இன்றைக்கும் பெண்களிடையே காணப்படுகின்றது. எனவே இவர்களுக்கு மிக எளிய உணவு மட்டுமே வழங்கப்படுகின்றது

இந்தியாவின் சில பகுதிகளில் பெண்களுக்கு வழங்கப்படும் உணவில் புளிப்பு காரம் இனிப்பு ஆகியவை சரியான அளவில் இருக்காது. மிகவும் குறைவாக இருக்கும். உப்பில்லாத உணவே பெரும்பாலும் வழங்கப்படும். தனித்து வாழும் மகளிருக்கு இதே உணவு தான் அனுமதிக்கப்பட்டது.

வங்காளத்தில் பெண் சூரிய வெளிச்சம் படாமல் இருட்டறையில் அடைக்கப்பட்ட ஐந்து நாட்களும் அவளுக்கு வெறும் அரிசிச் சோறு மட்டுமே வழங்கப்படும். மீன் இறைச்சி, இனிப்பு போன்ற சுவையுள்ள உணவுகள் வழங்கப்பட மாட்டாது. கேரளாவிலும் உப்பில்லாத புளிப்பு காரம் இல்லாத சைவ உணவு மட்டுமே தீட்டான பெண்ணுக்கு வழங்கப்படும்

அலஸ்காவில் தன் கையில் உணவை எடுத்து சாப்பிடக்கூடாது. உணவை அவள் தொட்டால் தீட்டாகி விடும் என்பதால் யாரேனும் உறவினர்கள் அவள் அருகில் இருந்து அவளுக்கு உணவை ஊட்டி விடுவார்கள்.

கோஸ்டா இருக்கா என்ற ஊரில் அவளுக்கு வாழை இலையில் உணவு பரிமாறப்பட்டது. அந்த இலையை மாடுகள் தின்றால் அவை இறந்து போகும் என்ற காரணத்தினால் என்ற நம்பிக்கையினால் அவள் சாப்பிட்ட இலைகளை விலங்குகள் கண்ணில் படாமல் தூர எறிந்து விடுவார்கள். அவளுக்கு தனியாக ஒரு குவளையில் தண்ணீர் வழங்கப்படும். அந்தக் குவளையில் வேறு யாராவது அதன் பிறகு தண்ணீர் குடித்தால் அவர்கள் இறந்து போவது உறுதி என்று நம்பினர்.

## இரவில் மட்டும் உணவு

தனித்து வைக்கப்படும் பெண்களுக்கு பகலில் உணவு அளிப்பதும் கிடையாது. அவர்கள் இரவு நேரங்களில் மட்டுமே வெளியே சென்று மலஜலம் கழித்துவிட்டு தன் இருப்பிடத்துக்கு வரலாம். வீட்டின் புறத்தை இருக்கும் தனி அறையில் அல்லது தனி குடிசையில் தங்கிக் கொள்ளலாம். இரவு நேரத்தில் தான் அவர்கள் வீட்டுக்கு அருகில் உள்ள ஏதேனும் ஒரு குளம் குட்டையில் பொதுமக்கள் புழங்காத நீர் நிலையில் குளித்து துணியை அலசிக் கொள்ளலாம் இந்நடைமுறை பல்வேறு நாடுகளிலும் மக்களிடமும் இருந்ததை சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம்.

கன்னித் தீட்டு கடல் வரை போகும் என்ற பழமொழி முதல் பூப்பின் போது பெண்ணை கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அப்போது அவர்களை இடி மின்னல், தீய சக்திகள் தாக்காமல் இருக்க உலக்கையை உட்கார்ந்திருக்கும் இடத்தில் தடையாக வைத்திருப்பர். அந்த உலக்கையை யார் தாண்டி செல்ல கூடாது. உலக்கை கருங்காலி மரத்தில் இழைக்க படுவதால் அது அந்த இடத்தை இடி மின்னல் தாக்காமல் தடுத்துவிடும். கருங்காலி மரத்தில் தான் கோயில் கோபுரத்தில் கலசங்கள் பொருத்த படுகின்றன. கலசத்துக்குள் கேழ்வரகு நிரப்பப்படும். கருங்காலி கோயில் கோபுரங்களை இடி மின்னல் தாக்காமல் காக்கும்.

## உட்காரவும் கட்டுப்பாடுகள்




அலாஸ்காவில் குச்சுக்குள் இருக்கும் வயதுக்கு வந்த பெண்களை ஆறு மாத காலம் முழங்காலிட்டு கைகளை தரையில் ஊன்றி குனிந்தபடியே இருக்கச் செய்வார்கள். அவள் குனிந்தபடியே இருப்பதற்காக அவளுக்காக கட்டப்பட்ட குடிசையும் உயரம் குறைவாகவே இருக்கும். ஆறு மாதங்கள் கழிந்த பின்பு அவள் அந்த குடிசையை விட்டு வெளியேறியதும் நிமிர்ந்து நிற்கலாம் நடக்கலாம்.

கலிபோர்னியாவில் ஒரு பெண் பூப்படைந்ததும் அவளிடம் அமானுஷ்ய சக்திகள் இருப்பதாக கருதி அவளை உலகத்தை

விட்டு ஒதுக்கி வைப்பர். அவளை இந்த உலகத்திற்குக் காட்ட மாட்டார்கள். ஒரு பெரிய போர்வையில் போர்த்தி அவளை தலை கவிழ்ந்தபடியே உட்கார்ந்து இருக்கச் செய்வார். தீட்டுக் காலத்தில் அவள் தன் தலையைச் சொரிய கூடாது. கேரளாவில் தீயர் இனத்துப் பெண்களை அண்ட வரும் துஷ்ட சக்திகளை எதிர்த்துப் போராட அவள் அருகில் ஒரு கத்தி வைக்கப்பட்டு இருக்கும்

வான்கோவர் தீவில் பெண் தனித்திருக்கும் நாட்கள் முழுக்க குத்துக் காலிட்டு அமர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு உட்காரும்போது குருதி ஒழுக்கு அதிகமாகும். அக்கால மக்கள் பூப்பு குருதியை அழுக்கு ரத்தம் என்று நம்பியதால் அது முழுக்க வெளியேறி விட வேண்டும் என்ற எண்ணத்தில் குத்துக்காலிட்டு உட்கார வைத்தனர். பூப்புக் காலங்களில் இளம் பெண்கள் உட்காருவதற்கும் நிற்பதற்கும் கூட அவர்களுக்கு உரிமை வழங்கப்படாத அடிமை நிலை இருந்ததற்கு உடற்கூறியல் அறிவின்மையே காரணமாகும். ஆனால் இன்றைக்கும் இப்பழக்கங்களை தொடரும்படியாக மதத்தின் பேரால் வலியுறுத்துவது முட்டாள்தனமும் மூட நம்பிக்கையும் ஆகும்

## பூப்புக் காலத்தில் இயற்கையும்

பூப்படைந்த நாட்களில் பெண் வெளியே வானம் இவளைப் பார்க்கும்படி ஊர் தெருவில் நடமாடினால் வானம் தீட்டுப்பட்டு விடும். மேகங்கள் திரளாது. மழை பொழியாது என்ற எண்ணம் அலாஸ்கா பகுதியில் வாழ்ந்த மக்களிடம் இருந்தது. இவள் முகத்தை வானமோ கதிரவனோ பார்த்து விட்டால் அப்பகுதியில் வேடர்களுக்கு வேட்டை கிடைக்காது, மீனவர்களுக்கு மீன்பாடு இருக்காது, சூதாடிகள் சூதாட்டத்தில் தோற்றுப் போவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. அவள் தீட்டு நின்று குளித்து முடித்து வீட்டிற்குள் வரும்போது அவள் உடுத்தி இருந்த பழைய துணிகளை தீயில் இட்டு கொளுத்தி விடுவர்.

## வானமும் பூப்புக் குருதியும்:-

பெண்கள் மாதவிலக்காகும் நாட்களில் அவள்மீது சூரிய ஒளி படாமல் அவள் வானத்தைப் பார்த்து விடாமல் இருட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் ஆதிகாலம் தொட்டு இருந்து வந்தது. மேலை நாடுகளிலும் பெண்களுக்கு தலையில் மிகப்பெரிய தொப்பியை வைத்து அவள் முகம் நிழலில் இருக்கும் படியும் ஒளி படாத படியும் பார்த்துக் கொண்டனர் இப்பழக்கம் பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைமுறையில் இருந்தது அவளுக்கு என்று தனியே ஒரு இடத்தை ஒதுக்கி வைத்து வீட்டின் முக்கியப் பகுதிகளுக்குள் அவள் வரக்கூடாது என்ற தடையும் விதித்தனர்.

## தீட்டின் தீய விளைவுகள்

ஒரு பெண் பருவம் அடைந்து விட்டால் அவளை ஊர்க்காரர்கள் பார்க்காதபடி ஒளித்து வைப்பார்கள் அவள் வானத்தைப் பார்த்து விட்டால் பருவ மழை பொய்த்து விடும். அவள்

பழங்களைப் பறித்தால் அந்த பழமரம் உதிர்ந்து காய்ந்து விடும். எனவே அவளை ஊருக்கு வெளியே கொண்டு போய் ஒரு சிறிய குடிசையில் வைத்து உணவு கொடுக்காமல் பட்டினி போடுவர். தீட்டு நின்ற பிறகு ஊருக்கு புறத்தே உள்ள ஓர் நீர்நிலையில் குளிக்க வைத்து ஊருக்குள் அழைத்துக் கொண்டு வந்து பின்னர் அவளுக்கு சாப்பிட உணவு கொடுப்பார்கள்.

லெபனான நாட்டில் பூப்படைந்த பெண்களால் நாட்டிற்குப் பல துரதிஷ்டங்கள் நிகழும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அவர்களுடைய நிழல் பட்டாலே மலர்கள் கருகிவிடும். மரங்கள் வாடி விடும். நகர்ந்து செல்லும் நாகப்பாம்புகள் கூட அப்படியே ஸ்தம்பித்து நின்று விடும். இப்பெண்கள் குதிரையின் மீது ஏறினால் குதிரை இறந்து விடும் அல்லது கால் உடைந்து விடும் என்று லெபனான் நாட்டு மக்கள் கருதினர். அவள் கால் பட்ட இடம் எல்லாம் கருகிவிடும் என்ற நம்பிக்கை இன்னும் பல இடங்களிலும் இருந்தது.

தென்னாப்பிரிக்க ஆயர் குடியில் வீட்டுக்கு விலக்கான பெண்கள் வீட்டின் பின்பகுதியில் மட்டுமே இருக்க வேண்டும். இவர்கள் தன் கணவனைத் தொடுவதோ தன் கணவனுக்கு உரிய வேறு எந்த பொருளையும் தொடுவதோ கூடாது. அவன் அமரும் அல்லது படுக்கும் பாயில் உட்காரவோ படுக்கவோ கூடாது. அவனுடைய பாத்திரங்களை தொட்டு புழங்கக் கூடாது. அவனுக்கு சமைத்துத் தரவும் கூடாது அவனுடைய பொருள் எதையாவது இவள் தொட்டுவிட்டால் அவன் செத்துப் போகட்டும் என்று இவள் கருதியதாக அர்த்தம் கொள்ளப்படும். ஏனெனில் தீட்டுக் காலத்தில் ஒரு மனைவி தன் கணவனின் பொருளைக் குறிப்பாக ஆயுதங்களைத் தொட்டால் அவன் அடுத்து நடக்கும் போரில் உயிரிழப்பான் என்பது தென்னாப்பிரிக்க மக்களின் நம்பிக்கையாகும். பூப்படைந்த பெண்கள் ஊர் கிணற்று நீரை பயன்படுத்தினால் அந்த கிணறு காய்ந்து வற்றி வறண்டு போய்விடும். அவளும் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுவாள். இரண்டு ஆண்களுக்கு நடுவில் அவள் நடந்து சென்றால் அந்த இருவரில் ஒருவன் இறந்து விடுவான்.

பூப்படைந்த பெண்கள் ஊர் கிணற்று நீரை பயன்படுத்தினால் அந்த கிணறு காய்ந்து வற்றி வறண்டு போய்விடும். அவளும் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுவாள். இரண்டு ஆண்களுக்கு நடுவில் அவள் நடந்து சென்றால் அந்த இருவரில் ஒருவன் இறந்து விடுவான்.

## நெருப்பும் தீட்டாகி விடும்

வான்கோவர்தீவில்தீட்டானபெண்ணிடம் நெருப்பையும் காட்ட மாட்டார்கள். குளிர்காலத்திலும் மழைக்காலத்திலும் அவள் நடுங்கியபடி அந்த தனி குச்சில் இருக்க வேண்டும். கேரளாவில் பூப்படைந்த பெண் காகத்தையோ பூனையையோ வானத்தையோ பார்க்கக் கூடாது

குங்குமத்தில் குருதி பூஜை ...

வான்கோவரில் எவ்வளவு நீண்ட காலம் அவளை அவளுடைய பெற்றோர் தனியாக வைத்துப் பராமரிக்கிறார்களோ அந்த அளவிற்கு அந்த ஊரில் அந்தப் பெற்றோருக்கு மதிப்பும் மரியாதையும் உயரும். எனவே பூப்படைந்த இளம் சிறுமியை 6 மாத காலம் கூட தனியாக வைத்துப் பராமரிப்பது உண்டு.

## உடைக் கட்டுப்பாடு

குலக் குறி என்றால் ஒரு குலம் தோன்றுவதற்கான மூல காரணி ஆகும். இக்குலக்குறி விலங்கு, பறவை, தாவரம் என எதுவாகவும் இருக்கும். பூப்படைந்த பெண்கள் தங்கள் குலக் குறியான மரம் செடியின் இலை தழைகளை தங்கள் இடுப்பைச் சுற்றி கட்டி ஆடையாகக் இருப்பார்கள். தங்களைத் தீய சக்தியிடம் இருந்தும் துஷ்ட ஆவிகளிடமிருந்து குலக்குறி இலை தழைகள் காப்பாற்றும் என்று நம்பியதால் இவர்கள் தழை ஆடை உடுத்தினர். இதுவே இன்றைக்கும் குழந்தை பெற்ற பெண்கள் வெளியே செல்லும்போது தலையில் வேப்பிலை சூடிக் கொள்ளும் பழக்கத்தில் வந்து நின்றுள்ளது. வேப்பிலை என்பது இன்றைக்கு அம்மனாக பார்க்கப்படுகின்றது. ஆகவே வேப்பிலையை சூடிக் கொண்டு செல்வதால் இளம் தாய்மார்களை துஷ்ட ஆவிகள் அண்டாது என்ற நம்பிக்கை உள்ளது.

## தொற்றும் அழுக்கு/தீட்டு

ஒரு பெண்ணைத் தீட்டுக் கழிந்து வீட்டில் சேர்த்துக் கொண்ட பிறகுதான் அவள் நெருப்பையோ கதிரவனையோ கண்ணால் காண முடியும். வானம் சூரியன் அக்கினி போன்றவற்றை பூப்பு காலத்தில் ஒரு பெண் தன் கண்ணால் கண்டால் வானம் சூரியன் நெருப்பு கூட தீட்டாகிவிடும். அவை அழுக்காகி விட்டால் அவற்றால் பூமிக்கு எந்த நன்மையையம் செய்ய இயலாது. இவள் உடம்பு அழுக்கு ஆவதுடன் இவள் பார்வைப்படும் இடங்களும் அழுக்காகி விடும் என்று உடல் சார்ந்த கருத்தியல் ஆதிகாலம் தொட்டு நடைமுறையில் இருந்து வந்தது.

தீட்டுக் காலத்தில் பெண்கள் ஆடு மாடுகள் நடந்து செல்லும் பாதையில் கூட நடக்கக்கூடாது. இவர்கள் சென்ற பின்பு அப்பாதையில் ஆடு மாடுகள் நடந்தால் அவை இறந்து போகும் அல்லது நோய்வாய்ப்படும். மனிதர்கள் அல்லது விலங்குகள் குடிக்கின்ற குடிக்கின்ற ஏரி குளம் கண்மாய்களில் தண்ணீரைத் தொடவோ குடிக்கவோ குடிக்கவோ கூடாது. அவ்வாறு இவர்கள் அந்த தண்ணீரை பயன்படுத்தினால் அதன் பின்பு வேறு எவர் அந்த தண்ணீரைப் பயன்படுத்தினாலும் அவர்கள் இறந்து போவார்கள்.

## மஞ்சள் நீராட்டு எனும் தூய்மைச் சடங்கு

இந்தியாவின் சில பகுதிகளில் தனித்து வைக்கப்படும் பெண்கள் சுத்தமில்லாதவர்கள் என்பதனால் இவர்களை யாரும் தொடுவதில்லை. ஐந்து நாட்கள் கழித்து ஐந்து சுமங்கலிப்

பெண்ணுடன் அருகில் இருக்கும் நீர் நிலைக்குச் சென்று குளியல் நடக்கும். அப்போது சுமங்கலிப் பெண்கள் அவளுக்கு உடம்பு முழுக்க மஞ்சள் பூசி குளிக்கவைத்து வீட்டிற்குள் அழைத்து வருவார்கள். அழுக்கு ரத்தம் பட்ட மேனியை கிருமிநாசினியான மஞ்சளால் தூய்மைப்படுத்துவர். இதன் தொடர்ச்சியாகவே இன்றைக்கும் வயது வந்த பெண்களுக்கு மஞ்சள் நீராட்டுதல் சடங்கு வீடுகளில் நடத்தப்படுகின்றது.

## கன்னித் தீட்டும் கர்ப்பமும்

மாதவிலக்காகி தனித்து வைக்கப்படும் பெண்களை ஆவிகள் அணுகு என்ற நம்பிக்கை தொன்று தொட்டு நிலவி வருகின்றது. ஆண் ஆவிகள் வந்து அவளுடன் கூடி அவளை கர்ப்பமாக்கி விடும் என்று கதைகள் புனையப்பட்டன. கிரேக்கத்தில் ஜியஸ் என்ற முதன்மைக் கடவுள் தீட்டாக இருக்கும் ஒரு பெண்ணை அவள் தீட்டு காலத்தில் கூடிமகிழ்ந்து கர்ப்பவதி ஆக்கிவிட்டார்.

சைபீரியாவில் தன் மகளை இரும்பு கோட்டைக்குள் ஒரு மன்னன் பாதுகாப்பாக வைத்திருந்தும் அவள் வெளியே வந்ததால் வானத்தின் கண் பட்டு கருவுற்றாள். கோட்டைக்கு வெளியே இருந்த வெளிச்சம் கண்ணை கூசியதால் அப் பெண் மயங்கி விழுந்து விட்டாள். உடனே கடவுளின் கண் அவள் மீது பட்டதால் அவள் கர்ப்பவதியாகிவிட்டாள். அவளது தந்தை தன் மகளின் நிலை அறிந்து அவளை ஒரு தங்கக் கூண்டில் வைத்து கடலில் விட்டு விட்டார். இந்தக் கதையில் கடவுளின் கண் பட்டது என்பது சூரிய ஒளி அவள் மீது பட்டதை உருவகமாகக் குறிக்கின்றது.

## பூப்பைத் தொடர்ந்து கருவுறும் காலம்

பூப்புக்காலத்தை அடுத்து கரு தங்கும் காலம் என்பதால் இக்காலத்தில் அவர்கள் வெளியே ஆண்களின் கண்களில் பட்டால் பெண்களின் உடல் மினுமினுப்பு ஆண்களை அவர்கள் பால் ஈர்த்து அவர்கள் கருவுறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையும் பெண்களை பாதுகாப்பாக வைக்க காரணம் ஆயிற்று. எனவே பூப்புக்காலம் முதற்கொண்டு பெண்களை தனியாக வைத்தனர். கரு தங்கும் காலத்தில் பெண்களின் உடலில் சுரப்பு காரணமாக மினுமினுப்பும் ஈரப்பதமும் அதிகமாக இருக்கும். காம உணர்வும் கூடுதலாக இருக்கும் என்பது அறிவியல் உண்மையாகும்.

*Roof can be visible to show it is loft*

தொல்காப்பியமும் ஒரு பெண்ணின் பூப்புக் காலம் முடிந்து 12 நாட்கள் வரை அவள் கணவன் அவளை விட்டு பிரிந்திருக்கலாகாது என்று பரத்தை வயின் பிரிவுக்கு காலக்கெடு விதிக்கின்றது. தீட்டு நாட்களும் கரு உண்டாகும் காலம் என்பதால் அந்தக் காலத்தில் கணவன் மனைவி சேர்ந்து இருக்க வேண்டும் என்பது சமூக விதி. அப்போது ஒரு கணவன் பரத்தையை நாடிச் செல்லக்கூடாது. அது இல்லறத்திற்கு இழுக்கான செயலாகும்.

பூப்புக்காலம் முடிந்த 12 நாட்கள் என்று தொல்காப்பியர் காலத்தில் தெளிவாக தெரிந்த அறிவியல் உண்மை பழங்காலத்தில் தெரிந்திடாத காரணத்தினால் அவர்கள் பூப்புக்காலத்திலேயே பெண்களை வெயில் படாமல் பாதுகாத்து வைத்து பிறகும் சில நாட்கள் சில மாதங்கள் வரை அவளைத் தனியாக ஒரு குடிசையில் அடைத்து வைத்துள்ளனர். இக்காலத்தில் வெளியே வரக் கூடாது ஆண்கள் முகத்தில் விழிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது.

## மதுரை வீர சாமி கதை

மேற்கண்ட இரண்டு கதைகளின் தொடர்ச்சியாக தமிழகத்திலும் ஒரு நாட்டுப்புறக் கதை நிலவுகிறது. மதுரை வீரசாமியின் பழங்கதை வடிவம் பொம்மி தீட்டு காலத்தில் தனியாக இருந்த போது அவளுக்குக் காவலாக இருந்த வீரன் வலிந்து பொம்மியுடன் கூடி அவளைக் கருவுற செய்தான் என்கிறது. பின்பு அவளை சிறை எடுத்தான். அதனால் அவள் அவனையே திருமணம் செய்து கொள்ள நேரிட்டது என்றும் பழங்கதைப் பாடல் தெரிவிக்கின்றது.

தூய்மை சடங்குகள் முடிந்து ஊருக்குள் அழைத்து வருதல்

மதுரை வீரன் கதை காலப்போக்கில் வில்லுப்பாட்டாக நாடகமாக திரைப்படங்களாக (1925, 1956) வந்த போது அவளுடைய திருமண தோஷம் விலகுவதற்காக ஜோதிடர் கூறிய பரிகாரமாக ஊருக்கு வெளியே கன்னி மாடத்திலிருந்து அம்பிகை பூஜை செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் அவள் தனியாக வைக்கப்பட்டாள் என்று கதையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆக பூப்புக் காலத்தில் தனியே வைக்கப்பட்ட ஒரு பெண் ஆணின் தொடர்பால் கருவுற்றாள் என்ற கதையின் நோக்கம் யாதெனில் தன் இனம் சாராத அந்நிய ஆடவரால் ஒரு பெண் கருவுறாமல் இருக்க எச்சரிக்கை விடுப்பதாகும்.

இனம் மாறி பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது. ரத்தக் கலப்பு ஏற்படக் கூடாது என்ற எண்ணம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நாட்டுப்புறக் கதை வடிவில் வழங்கி வந்துள்ளது. அந்நிய இனத்து ஆடவர் என்று குறிப்பிடாமல் துஷ்ட ஆவி, தீய ஆவி என்றும் தெய்வம் என்றும் தொன்மக்கதைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

## பூப்பு சடங்கில் தாய் மாமன் பங்கு

டாரஸ் ஸ்ட்ரைட் அருகில் உள்ள தீவுகளில் பெண்ணின் முதல் பூப்பு காலத்தில் அவளை மூன்று மாதங்கள் வரை தனியாக இருட்டில் வெயில் படாமல் வைத்திருந்து தனது கைகளால் சாப்பிட அனுமதிக்காமல் ஓர் இரண்டு பெண்கள் உடனிருந்து அவளுக்கு ஊட்டி விட்டனர் இந்தப் பெண்கள் அவளது தாய் மாமன் மனைவியாக இருப்பார்கள். இவர்களே கன்னிப் பெண்ணைப் பாதுகாக்கும் கடமையும் பொறுப்பும் கொண்டவர்கள். இப்பழக்கம் இன்றைக்கும இந்தியாவில் பல ஊர்களில் பெண் பூப்படைந்தால் அவளுடைய தாய் மாமன் சீர் செய்ய வேண்டும். தாய்மாமன் மனைவி மஞ்சள் நீராட்டி புத்தாடை கட்டிவிட்டு அவளுக்கு

பூச்சூத்டி வீட்டிற்குள் அழைத்து வந்து சுவையான தின்பண்டங்களை ஊட்டி விட வேண்டும் என்றளவில் தொடர்கின்றது.

கன்னிப் பெண்ணை மஞ்சள் நீராட்டி வீட்டுக்குள் அழைத்து வரும்போது அவளது இரண்டு மணிக்கட்டுகளையும் பிடித்தபடி இருபுறமும் இரண்டு வயதான தாய்மாமன் மனைவிமார் அழைத்துக் கொண்டு வருவார்கள் என்பது தாய்மாமன் சீர் செய்தலும் மஞ்சள் நீராட்டுதலும் இன்றைக்கு நேற்றைக்கு வந்த பழக்கங்கள் அல்ல. இவை வரலாற்றுக்கு முந்திய ஆதிமனிதன் வாழ்ந்த காலம் தொட்டு வந்திருப்பதாக அறிகின்றோம். இச்சடங்கு முறை உக்கிலன் பல்வேறு பகுதிகளில் தீவுகளில் மலைவாழ் மக்கள் வும் பகுதிகளில் இன்றைக்கும் தொடர்கின்றது.

## வளமைக் கோட்பாடும் பூப்புக் குருதி வழிபாடும்

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பெண்ணின் போக்கு மந்திர சக்தி உடையதாக கருதப்பட்டு அச்சத்தின் காரணமாக அவளை ஊரை விட்டு விலக்கி வைத்தனர். அதன் பின்பு மந்திரம் என்பது எதிர்மறை பொருள் உடையதாக புரிந்து கொள்ளப்பட்ட காலத்தில் மாதவிலக்குக்கு பின்னர் பெண்களின் கருவுறுதலை நுண்ணிதின் உணர்ந்த போது பூப்புக் குருதி என்பது வளமையானது, ஆக்க சக்தி உடையது என்று புரிந்து கொண்டனர். அதனைத் தெய்வமாகப் போற்றத் தொடங்கினர்.

ஒரு காலத்தில் யோனியும் பூப்புக்குருதியும் வழிபடு பொருளாயிற்று. அஸ்ஸாமில் உள்ள காமாக்கியா கோயிலின் யோனி வழிபாடு உலகப் புகழ்பெற்றதாகும். . இவ் ஊரின் அருகே பாய்கின்ற பிரம்மபுத்திரா நதி ஆண்டுக்கு ஒரு முறை ஜூன் மாதத்தில் சில நாட்கள் செந்நிறமாக ஓடுவதைக் கவனித்த மக்கள் காமாக்யா தேவியின் தீட்டு ஆற்றில் கலப்பதாக நம்புகின்றனர்.

கேரளாவிலும் சோட்டானிக்கரை பகவதி அம்மன் மாதந்தோறும் மாதவிலக்காவதாகவும் அந்நாட்களில் அவளுடைய ஆடையில் பூப்பு கறை படிந்திருக்கும் என்றும் மக்கள் நம்பி அதனை ஆடையை தெய்வப் பிரசாதமாக கருதுகின்றனர். இங்கு குருதி வழிபாடு இன்றைக்கு குங்குமம் கலந்த நீராக மாறி உள்ளது.



சோட்டாணிக்கரை பகவதியை அம்மன்

ஆதிசங்கரர் வகைப்படுத்திய அறுவகை வழிபாட்டில் ஒன்றான சாக்தம் என்பது சக்தி வழிபாடாகும். சாக்த சமயத்தில் தாந்த்ரீகம் எனப்படும் வழிபாட்டுச் சடங்குகள் பெண் சார்ந்தவை. பெண்ணின் பூப்புக் குருதி மற்றும் பெண்ணுடனான கலவி முறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பூப்புக்குருதியின் புனிதத் தன்மை மற்றும் தெய்வீகம் குறித்து அடுத்த கட்டுரையில் விரிவாக காணலாம்.

# ஐயப்படாது அது அகத்து உணர்ந்து வாழ்க!

**முனைவர் இல. ஜெயந்தி**
**சென்னை**

இறை நிலையே அனைத்து சீவன்களிலும் உயிராற்றலாக இருந்து இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை விளங்கிக் கொள்வதே விளக்கவழி வாழ்வாகும். ஒவ்வொருவரும் தன்னிடமுள்ள இறையாற்றலை உணர்ந்தால் மிக உயர்ந்த நிலையை அடையலாம்.

*'ஐயப்படா அதுஅகத்து உணர்வானைத்*
*தெய்வத்தோடு ஒப்பக் கொளல்' (திரு. 702)*

'அகம் என்பது ஆன்மாவைக் குறிப்பதாகும். அது மனிதனுடைய கருமையத்தில், இறைநிலையும் அதன் அளவற்ற ஆற்றலையும் சுருக்கி வைத்திருக்கும் தெய்விக நிலையம். ஆன்மாவை உணர்ந்தவர், ஆன்மாவில் இயங்கும் அறிவைத் தெய்வமாகவே உணர்வார். ஆன்மாவை அதன் இருப்பு, இயக்கம் விளைவு இவைகளை சிறிதுகூட சந்தேகமின்றி உணர்ந்து கொள்ள வல்லவர், இறைவனாகவே மதிக்கப்படத்தக்கவர் என்று அத்தகைய அறிவின் மதிப்பையும் அதனையறிய வேண்டிய அவசியத்தையும் திருவள்ளுவர் உணர்த்துவதாக' குறள் விளக்கமாக அறிவிக்கிறார் வேதாத்திரி மகரிசி.

பண்டைக் காலத்தில் தெய்வம், கடவுள் என்னும் சொற்கள், முற்றத் துறந்த முனிவருக்கும் பெயராக வழங்கப்பட்டது என சான்றுகள் மூலம் எடுத்துரைப்பார், கடவுள் ஆராய்ச்சியில், அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி.

## அறிதலும் உணர்தலும்

நாம் தேடும் தெய்வீகம் நமக்குள்ளேயே உள்ளது என்பதை அறிந்தபின் தன்னுள் ஆழ்ந்து, ஆழ்ந்து, உணர்ந்துக் கொள்ளத்தக்கது ஆகும்.

*'என்னிலே இருந்த ஒன்றை யான்அறிந்ததில்லையே*
*என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்துக் கொண்டபின்*
*என்னிலே இருந்திருந்து யானுணர்ந்து கொண்டனே!*

*'எனக்குள்நீ உனக்குள் நான் இருக்குமாறு எங்ஙனே*
*அரியதாகி நின்ற நேர்மை யாவர் காண வல்லரோ?*

என்பார் சித்தர் சிவவாக்கியர்.

## அண்டமும் பிண்டமும்

அண்டம் என்பது பிரபஞ்சம். பிண்டம் என்பது சீவன்.

'அண்டத்தி னுள்ளே அளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல கானினுங்
கண்டத்தில் நின்ற கலப்பறி யார்களே! (திருமந்திரம் 1362)

பிரபஞ்ச ஆற்றலாக விளங்கும் இறையாற்றல், சீவ இனங்களில் உயிராற்றலாக செயல்படுவதை உணராமல் உள்ளனர் என்பார் திருமூலர்.

'அண்டத்தில் கடவுளாய் அழைக்கப்படுபவன்
பிண்டத்தில் உயிரெனப் பேசப் படுகிறான்
கண்டத்தின் மேலே கருவில் நிலைத்தவன்
அண்டத்தும் பிண்டத்தும் அவனையே காண்கின்றான்'

புருவமத்தி தியானத்தால், இறை யாற்றலை உணர்ந்தவர், அமைதியும் நிறைவும் பெறுவர்.

'மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே'
'அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே 'நான் தெய்வம்'

என்பார் வேதாத்திரி மகரிசி.

## அறிவே தெய்வம்

மகாகவி பாரதியாரை, புரட்சிக்கவி, தேசியக்கவி என்று மக்கள் போற்றுவார்கள். அவர் தெய்வம் பற்றிய உண்மையைத் தெளிந்து கூறிய ஆன்மிகக் கவி ஆவார். எல்லாவற்றிலும் இறையைக் கண்டார்.

'எதனூடும் நின்று ஓங்கும் அறிவு ஒன்றே தெய்வம்' என்றார்.

'ஆத்திசூடி இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டு பாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்!'

## உணர்வே பிரம்மம்

வேதங்கள் 'ப்ரக்ஞானமே ப்ரம்மம்' என்றுரைத்தலை,

'உள்ளத்தனைத்திலும் உள்ளொளியாகி ஒளிர்ந்திடும் ஆன்மாமே - இங்கு

*கொள்ளற் கரிய பிரமமென றேமறை*
*கூவுதல் கேளீரோ?'*
*'ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்*

*உணர்வெனக் கொள்வாயே' என்று தெளிந்ததால், 'தெய்வம் நீ என்றுணர்!' என்று துணிந்துரைத்தார்.*

## அணுக்களின் கூட்டம்

*அணுக்களின் சேர்க்கையால் பிரபஞ்சம் தோற்றமாக உள்ளது.*
*'காக்கைக் குருவி எங்கள் சாதி - நீள்*
*கடலும் மலையும் எங்கள் கூட்டம்*
*நோக்கும் இடமெல்லாம் நான் அன்றி வேறில்லை'*

*'வெட்ட வெளியாய் அறிவாய் வேறுபல சக்திகளைக்*
*கொட்டு முகிலாய் அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்*
*தூல அணுக்களாய்ச் சூக்குமமாய்' எங்கெங்கு காணினும் சக்தியே!'*

*என்றார்.*

*'எழுதுகோல் தெய்வம்! 'எழுத்தும் தெய்வம்!'*

*என எங்கும் எதிலும் இறைநிலையை உணர்ந்து எடுத்துரைத்தார் பாரதியார்.*

*'தன்னைஅறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு*
*தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே''*

*என்று வினவித் தெளிந்தார், வள்ளலார்.*

*தனக்குள் உயிராக விளங்கும் இறை நிலையை உணர்வதே தன்னை அறியும் அறிவாகும்.*

*'தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்*
*தன்னை அறியும் அறிவை அறிந்தபின்*
*தன்னையே அர்ச்சித்த தானிருந் தானே!* *திருமந்திரம். 2355*
*'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்' (திரு. 2)*

*தூய அறிவு வடிவான இறைவனை உணர்வதே கல்வியின் பயனாகும். என்பார் திருவள்ளுவர்.*

*'தேடறிய சத்தாகி என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே! தேசோ மயானந்தமே'*
*'ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவை தந்த*
*தெய்வ அறிவே சிவமே பராபரமே' (252)*

புலன்களைக் கடந்து உணரத்தக்கதும், மிகுந்த களிள்பைத் தருவதுமான இறையே நமக்குள் அறிவாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

*'அன்றென்றும் ஆம் என்றும் உண்டோ - உனக்*
*கானந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே*
*நின்றால் தெரியும் என்றே - மறை,*
*நீதி எம்ஆதி நிகழ்த்தினான் தோழி (ஆனந்தக்களிப்பு – 20)*

என்பார் தாயுமானார்.

'இறைவனுக்கும், தனக்கும் வெகுதூரம் என்று உணர்வது அஞ்ஞானம். இங்கு இத்தனையுமாய் இருப்பது ஈசன் என்று உணர்வது ஞானம்' என்பார் இராமகிருஷ்ண பரமஹம்சர்.

## உலகுக்கு என்ன நன்மை?

எதிர்பார்ப்பிலேயே வாழ்கின்றனர் மக்கள்.

'ஆன்ம ஞானத்தால் உலகுக்கு என்ன நன்மை? இதனால் எங்களுக்குப் பணம் கிடைக்குமா? என்று மனிதர்கள் கேட்கிறார்கள். ஆன்ம ஞானம் உலகுக்கு பெரும் நன்மையைத் தருகிறது.' என்றார் சுவாமி விவேகானந்தர்.

'நான் அன்பு செலுத்தும் பொருள், ஒரு மண் சட்டியல்ல, கடவுளே என்று உணரும்போதுதான் ஒரு மனிதன் உண்மையில் அன்பு செலுத்துகிறான். கணவன், மனைவி, குழந்தைகள், கடவுளே! என்று நினைக்கும் போதுதான், அதிகமாக நேசிப்பைப் பெறுகின்றனர். தன்னுடைய எதிரி கடவுள் சொரூபம் என்று நினைத்தவுடன் எதிரியை நேசிக்கிறான். பாவியும் கடவுள் சொரூபம் என்று உணர்கிறான். அத்தகைய மனிதனால் உலகத்தையே அசைக்க முடியும். தன் கேவலமான மனிதன் என்ற கருத்து, அழிந்து அந்த இடத்தில் கடவுளே நிற்கிறார்.

## அமைதி ஆட்சி புரியும்

'துன்பம் துயரம் அழிந்து போராட்டம் அழிந்து பிரபஞ்சம் மிக அழகாக இருக்கும். உலகுக்கு ஏற்படும் நன்மை இதுதான். சண்டை, பூசல் இருந்த இடத்தில் அமைதி ஆட்சி புரியும் என்பதே நன்மை.'

தீயவன் என்று யாரையுமே நினைக்க முடியாது. இந்தப் பூமியில் தெய்வங்களே இருப்பார்கள். 'ஆன்ம ஞானத்தின் மிகப்பெரிய பயன் இதுவாகும்.'

'நாம் தேடிக் கொண்டே இருக்கும் உண்மை எப்போதும் நமக்குள்ளேயே தான் இருக்கிறது. எல்லாவற்றிலும் பரம்பொருளைப் பார்ப்பது தான் மனிதனின் இலட்சியமாகும்.'

'நமது ஆன்மாவுக்கு ஆன்மாவாக கடவுள் இருப்பதால் அவரை நமக்கு வெளியே கொண்டு வந்து நிறுத்த முடியாது. எல்லா உபநிடதங்களும் முடிவாகச் சொல்லும் கருத்து 'தத் த்வம் அஸி' (நீயே அது) என்பதாகும்.'

*என்று ஒவ்வொருவருக்குள்ளும் உள்ள இறையாற்றலை உணர்வதற்கு ஞானதீபம் ஏற்றினார் சுவாமி விவேகானந்தர்.*

## *கடவுளின் இராஜாங்கம் உங்களுக்குள்ளே!*

*சோதனைகளைக் கடந்து, சாதனைகள் புரிந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர், அ.ப.ஜெ. அப்துல் கலாம், பிரார்த்தனை மீதும், தெய்வீக சக்தி குறித்தும் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்.*

*'குழப்பத்திலும், துயரத்திலும் துக்கத்திலும், தோல்வியிலும் இருந்து ஒருவரை விடுவித்துக் காப்பாற்றும் ஒரு தெய்வீக சக்தி உள்ளது என்பதை நான் நம்புகிறேன். தனக்கே உரித்தான உண்மையான இடத்தை ஒருவர் அடைவதற்கு அந்தச்சக்தி வழிகாட்டுகிறது. உடல் ரீதியான, உணர்வு புர்வமான தளைகளிலிருந்தும் ஒருவர் விடுபடும்போது, அவரது விடுதலை யாத்திரை தொடங்குகிறது. மன அமைதியும் ஆனந்தமும் ஆரம்பிக்கிறது.'*

*'இந்தச்சக்தி உங்களுடைய இலட்சியங்களை எட்டுவதற்கும், கனவுகளை நனவாக்குவதற்கும் துணை செய்யும்' என்றார்.*

*'உண்மையில் சொல்லப்போனால் இறைவனின் அருளால் இந்தச் சக்தி எனக்குள் ஊடுருவிப் பரவுவதை நான் உணர்ந்திருக்கிறேன். இப்படிப்பட்ட சக்தியின் வடிவத்தில், கடவுளின் இராஜாங்கம் உங்களுக்குள்ளேயே உறைந்திருக்கிறது என்பதை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்'*

*'நாம் அனைவருமே நமக்குள்ளே ஒரு தெய்வீக அக்னியுடன் பிறந்திருக்கிறோம். அந்த அக்னியை கொழுந்துவிட வைத்து, அதன் பொன்னொளியை இந்த உலகத்தில் பரப்புவதற்காக முனைவது நமது கடமை' என்பார் அ.ப.ஜெ. அப்துல்கலாம்.*

## *அவனே தானே ஆகியது.*

*எல்லாமாகி இருக்கும் இறை, தம்மிடமும் தானாக இருப்பதை காரைக்கால் அம்மையார் எடுத்துரைக்கிறார்.*

*'அறிவானுந் தானே அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற*
*மெய்ப் பொருளுந் தானே விரி, சுடர், பார், ஆகாயம்*
*அப்பொருளுந் தானே அவன்.* *(அற்புதத்திருவந்தாதி - 20)*

## *அகமும் உலகுமாக இருப்பவன்:*

*இறைநிலை, பிரபஞ்சமாகவும், ஒரு பகுதி தாமாகவும் இருப்பதை விளங்கிக் கொள்வதே அறிவுடைமையாகும்.*

*'ஏகன் உன்னுள் இருக்கின்றானே, அவனே*
*அகமும் உலகுமாக உள்ளான்.*

*'One was within thee who was self and world'*

*இங்கே தன்னைத்தானே முழுமையாக்குவதே கடவுளின் ஆசையாகும்.*

*'Here to fulfill himself was Gods desire'*

*என்பார் திவ்விய அன்னைக்கான ஆராதனையில், ஸ்ரீ அரவிந்தர்*

*நானும் பரமபிதாவும் ஒருவரே:*

*'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் - யோவான் (10: 30-31)*

*'என்னைக் காண்பவன் தந்தையைக் காண்கிறார்' - யோவான் (14.9)*

*என்று தன் அந்தரங்கச் சீடர்களுக்குக் கூறினார் ஏசுபிரான்.*

*தன்னையே ஆராய்ந்து எடுத்துரைத்தனர் அருளாளர்கள்.*

## தேடியவனே தேடப்பட்டவன்

*ஒரு சமயம் பத்துப்பேர் ஆற்றைக் கடந்து மறுகரைக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆற்றைக் கடந்தவுடன், எல்லோரும் கரையை அடைந்து விட்டனரா? என்று எண்ணிப் பார்த்தபோது, ஒரு நபர் குறைவது தெரிந்தது. மற்றொருவன் எண்ணிப் பார்த்தபோதும் ஒரு நபர் குறைவதாக அறிந்தனர். எனவே காணாமல் போனவனை நினைத்து அழுதனர். ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதாக நினைத்தனர்.*

*அப்பக்கமாகச் சென்ற துறவி, அவர்களின் அழுகைக்குக் காரணம் கேட்டு, அவர் எண்ணிப் பார்த்து விட்டு, பத்துப்பேரும் இருப்பதை தெரிவித்தார். முதலில் எண்ணிப் பார்த்தவர்கள் தன்னைச் சேர்க்காததே காரணம் என்பதை உணர்த்தி விட்டுச் சென்றார். தேடியவனே தேடப்பட்டவன் ஆனான்.*

*'அவனே நானே ஆகிய அந்நெறி*
*ஏகனாகி இறைபணி நிற்க*
*மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே! '*
*(சிவஞானபோதம் நூற்பா - 10)*

*இறைவன் தன்னிடமே இருப்பதை உணர்ந்து, நற்செயல்கள் மூலம் கடமைபுரிந்து வாழும் முறையில் தீவினைகள் சேராது. என்பதை மெய்கண்ட தேவ நாயனார் உரைக்கின்றார்.*

## மெய்யறிவும் அறிவியலும்

*மெய்யறிவு இல்லாத அறிவியலால் முழுப்பயனில்லை. இன்றைய அறிவியல் ஆக்கத்துறையைவிட அழிவுக்கே அதிகம் துணையாகிறது.*

*'Religion without Science is blind*
*Science without religion is lame'*

*என்பார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*

*‘உலகியல் விஞ்ஞானமும், எங்கும் ஒரே தத்துவத்தைக் காணும் நிலைக்கே வந்துவிட்டது. எல்லா பொருள்களுமே ஒரே சக்தியின் வெளிப்பாடுகள் என்றுதான் விஞ்ஞானம் கூறுகிறது’ என்பார் சுவாமி விவேகானந்தர்.*

*‘சிலர் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் வெவ்வேறான விஷயங்கள் என்று பிரித்துப் பார்ப்பது பற்றி ஆச்சரியப்பட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை அறிவியல் மார்க்கம் என்பது மெல்லத் தவழ்ந்து வரும் தென்றல் போன்றது. எனக்கு எப்போதும் ஆன்மிக மேம்பாட்டிற்காகும், தன்னிலை அறிதலுக்கும், அறிவியலும் ஒரு மார்க்கமாகத் தோன்றுகிறது என்பார்’, முன்னாள் குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல்கலாம்.*

*அறிவியலும் மெய்யியலும் இணைய பாலமாக விளங்குவது காந்த அறிவாகும். அணுக்களின் சுழற்சியால் வெளிப்படும் காந்தமே ஒருங்கிணைப்பு ஆற்றலாக, பிரபஞ்ச சக்தியாக இருப்பதை உணர வேண்டும்.*

*‘அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரண்டையும் அறிந்து உய்ய பாலம் போன்ற ஆக்க ஞானம் காந்தமே.’*

*‘அஞ்ஞானம் அறிவின் ஆரம்ப நிலை*
*விஞ்ஞானம் அறிவின் வேகநிலை*
*மெய்ஞ்ஞானம் அறிவின் பூரணமாம்’*

*என்று காந்த தத்துவமாக எடுத்துரைப்பார் வேதாத்திரி மகரிசி.*

*செயற்கை நுண்ணறிவு (AI)*

*அணு பௌதிகம், குவாண்டம் தியரி (QR)*

*என இன்றைய அறிவியல். மெய்ப்பொருள் பற்றிய உண்மையை நெருங்கிக் கொண்டிருத்தல் காணலாம்.*

*இந்தப் பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கும் பேராற்றலே நமக்குள்ளும் அறிவாக விளங்கி ஆளுமை செய்துக் கொண்டிருத்தலை உணர்ந்து வாழ்வது, தன்னிலை உயர்வுக்கும், உலக அமைதிக்கும் வழிவகுக்கும்.*

*‘நல்லாற்றல் நாடி அருளாள்க பல்லாற்றால்*
*தேரினும் அஃதே துணை’ (திரு. 242)*

*நல்ல வழியில் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும். பல வழிகளில் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக உள்ளது என்பார் திருவள்ளுவர்.*

*‘ஐயப்படாது அது அகத்து உணர்ந்து வாழ்க!*

# ஆசை மனைவிக்கு அன்புக் கணவனின் இரங்கல்

## (தன் மனைவி நாகம்மையார் மறைவுக்கு பெரியார் எழுதிய இரங்கல் உரை)

*'எனதருமை ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11.5.1933ல் காலை 7.45 மணிக்கு இயற்கை எய்தினார்.*

*அதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு லாபமா? நஷ்டமா? என்பது இதுவரையிலும் என்னால் பதில் காணமுடியாத கேள்வியாக உள்ளது.*

*எது எப்படி இருந்தாலும் நாகம்மாளை மணந்து வாழ்க்கைத் துணைவியாக 35 ஆண்டு காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம்மாளுக்கு நான் ஏற்ற வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது கேள்விக்குறிதான். நான் சுயநலமாக மைனராய், காலியாய், சீமானாய் இருந்த காலத்திலும்கூட எனக்கு வாழ்க்கைத்துணையாக இருந்திருக்கிறார். பெண்களின் சுதந்திரத்துக்கு நான் எவ்வளவு போராடியிருக்கிறேன் பேசியிருக்கிறேன். ஆனால் என் மனைவிக்கு அந்தச் சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறேனா? என்பது எனக்குத் தெரியவில்லை. நாகம்மாள், சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் எவ்வளவு கடுமையாகவும் மூர்க்கமாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவற்றை விட பத்துமடங்கு கூடுதலாகவே நடந்து கொண்டேன் என்பதை மிகவும் வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.*

அன்னை நாகம்மையார்

*நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும் வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய, தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாக உணர்ந்து வந்தேன். அதற்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவது ஒரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறியதேயாகும். நான் பொது நல சேவையில் ஈடுபட்ட பிறகு பொது நலக் காரியங்களுக்கும் சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்பட்டு வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசிலிருக்கும்போது மறியல் விஷயங்களிலும் வைக்கம் சத்தியா கிரக விஷயத்திலும் சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்தது உலகம் அறிந்ததே.*

*ஆகவே நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? அல்லது எல்லாம் போயிற்றென்று என்றே சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே! எது*

எப்படியிருந்தாலும் நாகம்மாள் மறைவு என்பது ஓர் அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கை எய்தினார். இதிலொன்றும் அதிசயமில்லை. நாகம்மாள் அற்ப ஆயுள்காரி என்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு 48 வயது ஆகிறது. ஆனாலும் அது சராசரி வாழ்நாளாகிய 23.1/2 வயதுக்கு இரட்டிப்பென்றே சொல்ல வேண்டும். செத்தால் சிரிக்க வேண்டும், பிறந்தால் அழவேண்டும் என்ற ஞானமொழியின்படி நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும், ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதலாம் அதை ஒரு மகிழ்ச்சியாகவும் லாபமாகவும் கருதவேண்டும் என்றே நான் ஆசைப்படுகிறேன். ஆசைப்படுவது மட்டுமல்ல. அதை உண்மையென்றே நான் கருதுகிறேன்.

எப்படியெனில், எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்கள் சிறிது விசேஷ சம்பவங்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால், அந்த அம்மாளுக்கு மிகுந்த துக்கமாகவும், துயரமாகவும் கூட இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அத்துடன் அதைக் கண்டு சகிக்க முடியாமல் நானும் கலங்க நேரிடும்.

நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும் லாபமான காரியத்திற்கும் பயன்படுத்திக் கொள்கிறேனோ அதுமாதிரி எனது மறைவையோ எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்படுத்திக் கொள்ளமாட்டார். அதற்கு நேர்மாறாகவே உபயோகப்படுத்திக்கொள்வார் ஆதலால் நாகம்மாள் நலத்தைக் கோரியும் அவர் எனக்கு முன் மறைந்தது எவ்வளவோ நன்மை.

என் அருமைத் தோழர்கள் பலருக்கு நாகம்மாள் மறைவு எனக்கு ஈடுபடுத்த முடியாத இழப்பு என்று தோன்றலாம். அது சரியான அபிப்பிராயம் இல்லை. அவர்கள் சற்று பொறுமையாக இருந்து இனி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளை காண்பார்களேயானால் அவர்களும் என்னைப்போல் நாகம்மாள் மறைவு நலமென்றே கருதுவார்கள். நாகம்மாளுக்கு நோய் ஏற்படக் காரணம் என் மேல்நாட்டு சுற்றுப் பயணம் தான். ஒருவருடம் அவர் என்னை பிரிந்திருந்தார். அந்தப் பிரிவின் ஆற்றாமை அவரை பாதித்திருக்கக்கூடும்.

இரண்டாவது என்னுடைய ரஷ்யப்பயணத்தில் எனக்கு ஏதாவது பெரிய ஆபத்து வந்துவிடுமோ என கருதியது, மூன்றாவது நமது புதிய வேலைத் திட்டங்களை உணர்ந்தபின் ஒவ்வொரு நிமிஷமும் தனக்குள் ஏற்பட்ட பயம் இப்பேற்பட்ட அற்பக் காரணங்களே அவ்வம்மைக்கும் கூற்றாக நின்றது என்றால் இனி இதைவிட மேலான பிரிவு, ஆபத்து, பொருளாதார கஷ்டம் ஆகியவை உண்மையாய் ஏற்பட இருக்கும் நிலை அந்த அம்மையாருக்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கும் என்று நினைத்துப்பார்க்கும் தோழர்கள், நாகம்மாளின் பிரிவுக்கு வருந்தமாட்டார்கள் என்றே கருதுகிறேன். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் சுற்றுப்பயணத்திலேயும் பகுத்தறிவை மக்களிடம் பரப்புவதிலும் இருக்கவேண்டும்.... எனக்கென்று தனியாக ஒரு வீடு இருக்கக்கூடாது என்று கருதினேன். இது இனி நிகழும்.

- பெரியார் - குடியரசு 14.5.1933.

பாதி வழியில் கைவிடுபவர்களை

பாதி உணவில் நஞ்சூட்டுபவர்களை
பாதி கனவில் தட்டி எழுப்புபவர்களை
இனி நீ
கோபித்துக்கொண்டு
ஒரு பயனும் இல்லை

அவர்கள்தான்
மீதிப்பயணத்தை பிடிவாதமாய்
கடந்து முடிக்க
உன்னை ஊக்குவிக்கிறார்கள்
அவர்கள்தான்
சாவிலிருந்து வைராக்கியமாய்
மீண்டுவர
உன்னைத் தூண்டுகிறார்கள்
அவர்கள்தான்
விழித்துக்கொண்டே கனவு காண்பதெப்படியென
உனக்குப் பயிற்றுவிக்கிறார்கள்

சமயங்களில்
அப்படித்தான்
பளாரென உன் கன்னத்தில்
அறைந்து
இந்தக்காலம்
உனக்கு கற்றுத்தருவதெல்லாம்
உன் நன்மைக்காகத்தானே
தவிர
வேறில்லை

ஆதலால்
நன்றியுடன் இரு
உன்னை கைவிட்டவர்களிடமும்
துரோகித்து நகர்ந்தவர்களிடமும்
கண்ணீர்த்தந்து காணாமல் போனவர்களிடமும்

அவர்கள்தான்
உன் வாழ்வை
அவ்வளவு சுவாரசியமாக்கிக்
கொண்டிருக்கிறார்கள்

**-ரீஸ்கா முக்தார்**

# மங்கள வர்ஷினி

**சசிகலா விஸ்வநாதன்**

காலையில் இருந்தே மீண்டும் மழை பிடித்துக் கொண்டது, பிடிவாதமாக அழும் சவலைக் குழந்தை போல, அலுப்பூட்டும் இடைவிடாத மழை. தோய்க்கும் வேலை, மிஷின் தான் செய்கிறது என்றாலும், நான்கு நாட்கள் ஆனாலும் உடுப்புகள் காயாமல் பால்கனி முழுவதும் உடுப்புகளின் தோரணம். அடுத்தமுறை வாஷிங் மெஷின் வாங்கும் போது," "ட்ரையரோடு" தான் வாங்க வேண்டும். எத்தனை நாட்கள் பால்கனிக்கு ஏறி இறங்க முடியும். மொட்டை மாடியில் துணி உணர்த்துதல், இனி முடியாது. "சட சட" வென மழை வர "மட மட"வென மேலே ஏறிப் போக இனி ஆகாது.. வானம் பொத்துக் கொண்ட மாதிரி கொட்டும் மழையை தன்னையும் அறியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவள் கண்ணில் பட்டனர்; இருவரும். இளவயது தம்பதியர். அந்தப் பெண் விசும்பி அழுவதும் இவன் சமாதானம் செய்வதுமாக,சற்று நேரம் போனது. இவன் ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமும் பரபரப்பாக ஓடினார்கள். எதற்காக இருக்கும்; என்று யோசிக்கையிலேயே, "மங்களம்" என்று, பரசு ,என்னவர்தான்..கூப்பிடும் குரல் கீழேயிருந்து வந்தது.வேகமாக படியிறங்கி போக முடிகிறதா? இத்தனை பெரிய வீடே அவளுக்கு வேண்டாம். நாற்பது வயதில் 'அவசியம்' ;என்று ஆசையாய் கட்டின வீடுதான். இப்போது அனாவசியமாகத் தெரிகிறது. இதை விற்று விட்டு சின்னதாய் ஒரு வீடு வாங்கலாம்தான்.. அவர் சம்மதிக்க மாட்டார். எப்போதோ வரும் பிள்ளைகளுக்காக; புதையல் காக்கும் பூதம் போல். தனியே வசிக்கும் அவர்கள் இருவருக்கும். இந்த வீடு கடல் மாதிரி. அதற்குள் இன்னுமொரு முறை" மங்களம்" என்ற குரல். .'என்ன', என்பது போல்,அவர் பக்கம் வர; "நான் ஆஃபீஸ் கிளம்புகிறேன். வீட்டைப் பூட்டி பத்திரமாய் உள்ளேயே இரு. எவரையும் உள்ளே விடாதே. காலம் மிகவும் கெட்டுக் கிடக்கு .மழை காலம்.. கரண்ட் எப்போது போகும் என்று தெரியாது. ஃபோனை சார்ஜ் பண்ணி வைச்சுக்கோ. நான் வரும் போது பால் பாக்கெட்,காய்கறிவாங்கி வருகிறேன். வேறு ஏதாவது வேண்டுமா," என்று கேட்க மங்களம் வெறுமனே தலையசைத்தாள்," ஒன்றும் வேண்டாம்" என்பது போல்.

காரை காரேஜிலிருந்து எடுக்கும் வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்ணில் மீண்டும் அவர்கள்... முகத்தில் மிகுந்த கவலையுடன். அவரை அனுப்பி விட்டு இரும்பு கேட்டை சார்த்திப் பூட்டும் சமயம் கார் வலப்புறம் திரும்பி மெயின் ரோட்டில் நுழைந்தது. மழை வலுக்கத் தொடங்கியது. கேட்டைப் பூட்டுவற்கு முன் அவர்கள் வேகமாக அவளை நோக்கி வந்தனர். " அம்மா! ஒரு உதவி" என்றான் அவன் அப்போதுதான் அவளைப் பார்த்தேன். நிறை மாத கர்ப்பிணி. " இந்த மழையில் ஏன் இங்கும் அங்கும் அலைகிறீர்கள்" என்று கேட்டவுடன் அவள் மீண்டும் விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். "அம்மா! ஏன் என்று கேட்கிறீர்களே.. நாங்கள்

எதைச் சொல்ல.;நேற்றுப் பெய்த மழையில் எங்கள் குடிசை விழுந்து விட்டது. தட்டு முட்டு சாமான்கள் அனைத்தும் உள்ளே கிடக்குது. அந்த சமயம் வெட்டின மின்னலிலும் இடியின் ஓசையிலும் எங்கள் சினைப்பசு, பயத்தில் கட்டுத்தறியை அறுத்துக் கொண்டு எங்கோ ஓடிவிட்டது. அதைத் தேடித்தான் நாங்கள் ராத்திரி முழுக்க அலைகிறோம். ஒரு துப்பும் தெரியல்லை. எங்கள் வாழ்வின் ஆதாரமே அந்த பசு தான். இவளாலேயும் ஒன்றும் முடியவில்லை. "இப்போவோ, அப்பவோ மகப்பிறப்பு" என்று இருக்கிறாள். பசுவைக் தேடிப் போகவா; இவள் பக்கத்திலே இருக்கவா; ஒன்றும் புரியவில்லை. காலையில் இருந்து கஞ்சிக்கு வழியில்லாமல் சுத்தி சுத்தி வருகிறோம். கொஞ்ச நேரம் வீட்டின் வராண்டாவில் உட்காரட்டும். நான் எங்கிட்டு இருந்தாலும் பசுவை ஓட்டிட்டு வந்து விடுவேன். சித்த நேரம் இங்கிட்டு உட்கார விடுங்கம்மா" என்று கெஞ்சும் குரலில் கேட்டான். அதற்குள்" எஞ்சாமி! என்னை விட்டுப் போகாதே. நான் என்னண்டு செய்வேன்"என்று அழ ஆரம்பித்தாள். எனக்கு மனம் நெகிழ்ந்து போயிற்று. " நீ அழாதே. வா என்னுடன். இங்கு இரு ,அவன் பசுவோடு வந்திடுவான். நீ போயி பசுவைத் தேடிட்டு வா. இவளை நான் பார்த்துக்கறேன். கவலைப்படாதே. கரு காக்கும் மாரி இருக்கா. பக்கத்திலே நின்னுக்கிடுவாள். நீ போப்பா" என்று அவனைத் தேற்றி அனுப்பிவிட்டு; அவளை கைத்தாங்கலாகக் கூட்டி வந்து,முன் வாசல் இருக்கையில் அமர்த்தினாள்; மங்களம். இருபது வயது தான் இருக்கும் ."உன் பெயர் என்னம்மா," என்ற மங்களத்தின் கேள்விக்கு ஒரு கேவலைத்தான் பதிலாகத் தந்தாள்; அந்தப் பெண். மங்களம் உள்ளே போய் சாதத்தில் ரசம் விட்டு கரைத்து எடுத்து வந்து ஒரு அப்பளமும் சுட்டு எடுத்து வந்தாள். அவளிடம் கொடுத்து இதைச் சாப்பிட்டு சற்றுத் தூங்கு. அவன் வந்திடுவான்; கவலைப்படாதே" என்று ஒரு பாயும் தலையணையும், போர்வையும் கொடுத்தாள். என்னை ஏறிட்டுப் பார்த்தவள்;அதைச் சாப்பிட்டு, படுத்தாள். அவள் அழுவது முதுகு குலுங்குவதிலிருந்து தெரிந்தது. சிறு பெண்; பயந்து போய் இருக்கிறாள் ; என்று புரிந்து கொண்டாள்; மங்களம்.

வாசல் கதவை திறந்தே வைத்து, தன் காலை உணவை ஹாலிலேயே முடித்துக் கொண்டாள். அந்தப் பெண்ணை உள்ளேயே படுக்க வைக்கலாம் தான். அவர் வந்தால் "ஆ! ஊ!" என்று, ஆகாசத்துக்கும் பூமிக்கும் குதியாய் குதிப்பார். அவர் வருவதற்குள் அவன் வந்து இவளைக் கூட்டிக் கொண்டு போய்விட்டால் தேவலை. சற்று நேரத்திலே " அம்மா!" என்ற குரல். அந்தப் பெண் தான். "ஒதுங்கணும்" எங்கிட்டுப் போகணும்" என்று கேட்டாள். உள்ளே கூப்பிடலாமா; என்று யோசித்தேன்; ஒரு கணம். என்ன காரணத்தினாலோ நான் அவுட் ஹௌஸ் சாவியை எடுத்து வந்து அவளை கூட்டிக்கொண்டு சென்றேன். ஓங்கிப் பெய்தது மழை. குடையை எடுத்துக் கொண்டு வந்தேன். நல்ல வேளை அவுட் ஹௌஸ் போனவாரம் தான் காலி பண்ணினார்கள். வராண்டாவைத் திறந்து முன் பக்கத்திலிருக்கும் பாத்ரூமைக் காட்டினேன். திரும்பும் போது அவள் பெயர் சோலையம்மா என்றும், கல்யாணம் ஆகி ஒன்றரை வருஷம் தான் ஆகியிருக்கு, என்றும் தெரிந்து கொண்டேன். வேலூர் பக்கம் ஒரு ஒரு கிராமம். "அம்மா அடுத்த வாரம் வருவதாக இருக்கிறார்கள். அடைமழையில் , வருவார்களா; என்று தெரியவில்லை. மண் குடிசை வேறு விழுந்து போச்சு. சாமானெல்லாம் உள்ள மாட்டிக்கிட்டது. சினை பசு வேறு கட்டுத் தறியை அறுத்துக் கிட்டு போயிடுச்சு. என்ன செய்யறது " என்று திரும்பவும் அழ ஆரம்பித்தாள்.

மணி மதியம் இரண்டு ஆயிற்று. இன்னும் அவனைக் காணோம். மதியம் மீண்டும் கொஞ்சம் கஞ்சி வைத்துக் கொடுத்ததை சோலையம்மா ஆர்வமுடன் அருந்தினாள். மதிய உணவை முடித்துக் கொண்டு ஹாலில் வந்து உட்கார்ந்த மங்களம் டி.வி பார்க்க ஆரம்பித்தாள். தனியாகவே இருப்பவளுக்கு ,வீட்டில் ஒரு ஜீவன் கூட இருப்பது மனதிற்கு நிறைவாகத் தான் இருந்தாலும், வேண்டாத வம்பை விலை வாங்கி விட்டோமா; என்ற யோசனையும் வந்தது. சோலையம்மா கதவோரம் நின்று கொண்டு டி.வி பார்க்க ஆரம்பித்தாள். "உட்கார்ந்து பார்" என்ற அவளது உபசரணையில் அந்தப் பெண் மனம் கலைந்து,கன்னத்தில் கை வைத்தபடி மழையை வெறித்துப் பார்க்க ஆரம்பித்தாள். " அது எப்பம்மா வரும்," என்ற சோலையம்மாவின் கேள்விக்கு மங்களத்திடம் பதில் இல்லை. இப்போது மங்களத்துக்கு பயம் பிடித்துக் கொண்டது. நேரம் போய்க் கொண்டே இருந்தது. நான்கு மணிக்கு,காஃபி போட்டு சாப்பிட்டவள் சோலையம்மாவிற்கும் கொடுத்தாள். ஆர்வமுடன் காஃபியை சாப்பிட்டவள்"இது மாதிரி ஐயர் வீட்டு காஃபியை தான் சாப்பிட்டதே இல்லை என்று வெகுவாகப் புகழ்ந்தாள். அவள் இப்போது சற்று எளிதான மாதிரி இருந்தது. இப்போது மழைத் தண்ணீரில் சிறு குழந்தை போல் காகிதக் கப்பல் செய்து விளையாட ஆரம்பித்திருந்தாள்.

டிவியில் மூழ்கி இருந்தவள்" "அம்மா" என்ற சப்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினேன்." " "அடிவயிறு இழுத்துப் பிடிக்குது , அம்மா" ரொம்பவும் வலிக்குது. ஒதுங்கணும்." என்றாள். மின்னலும், இடியும் கூடிய மழை இன்னும் வலுக்க, காற்றில் குடை பிடிக்க ஏதுவாக இல்லை. சோலையை உள்ளே வரச்சொல்லி தன் கணவரின் அலுவலக அறையின் கழிப்பறையைக் சுட்டினாள். வெளியே வந்த சோலையம்மா, " அம்மா! அடிவயிறு ரொம்ப வலிக்குது. சமாளிக்க முடியவில்லை என்று திணறியபடி சொல்ல; அவளுக்கு பேறு காலம் நெருங்கி விட்டதோ என்று தோன்றியது. இப்போது நான் இக்கட்டில் இருந்தேன். அருகில் இருக்கும் மருத்துவ மனைக்கு ஃபோன் செய்ய, அதை எவரும் எடுத்து பேசவில்லை. சூடாக சிறிது சோம்பு கஷாயம் வைத்துக் கொடுத்ததில் சற்று நேரம் அமைதியாக இருந்த சோலை திரும்பவும் வலியில் துடிக்க ஆரம்பிக்க, மங்களம் ஓலா கேபுக்கு முயற்சித்த அதே வேளையில், வாசலில் ஹார்ன் சத்தம். மங்களத்தின் கணவர்தான் பொறுமையின்றி ஹார்ன் அடித்துக் கொண்டே இருந்தார். மங்களம், சோலையை கைத்தாங்கலாக நடத்தி கேட்டை திறந்து உடனடியாக மருத்துவமனைக்குப்போக வேண்டிய அவசியத்தை அவருக்கு உணர்த்த; அவருக்கு முகத்திலும், அகத்திலும், ,எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஆயினும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு,வாய் பேசாமல் வண்டியை மருத்துவ மனைக்குத் திருப்பினார்.

அங்கு சோலையை மகப்பேற்றுக்கு உள்ளே அனுப்பிய பின் தான் மங்களத்துக்கு மூச்சு விட முடிந்தது. அவள் கணவர் முகம் கோபத்தில் கொந்தளிக்க; இவள் வாய் பேசாமல் நின்றாள். கிட்டத்தட்ட இரண்டு மணிநேர உபாதைக்கும், காத்திருப்புக்கும், பிறகு பெண் குழந்தை, அம்மா " என்று நர்ஸ் வந்து சொன்னாள். குழந்தையின் அழுகை சப்தம் இனிய ஆனந்த பைரவி போல் காதில் ஒலித்தது. நல்ல வேளை! வேறு ஏதும் புது பிரச்சினை இல்லாமல் சுகமா பிரசவம். மருத்துவர் பரசுவின் வேட்டித் துணியில் சுற்றி அந்த கருமை கலந்த செம்பவழத்தை பரசுவின் கையில் கொடுத்து " பாருங்க, சார்! உங்க பேத்தியை" என்றதும் அவர் விதிர்த்து நின்றுவிட்டார். அவர் ஏதும் சொல்லும் முன்பே,"அவருக்கு ,பிறந்த குழந்தையை தூக்கிப் பழக்கமில்லை" என்று

கூறியவாறே, மங்களம் அந்த கருப்பு ரோஜாவை கையில் வாங்கினாள். அட்லாண்டா வில் பிறந்த தன் பேத்தி தர்ஷனியை அவள் கையில் தூக்கினதே இல்லை. இரண்டு வயது குழந்தையாக மலர மலர அவள் மங்களத்தை கண்களை உருட்டி, உருட்டிப் பார்த்தபோது, தருண் " மீட் மை மாம்.. யுவர் க்ரேண்ட் மாம்" என்னும் போது அவள் தன் அம்மா ரம்யாவின் பின் ஒளிந்து கொண்டு" "ஹாய்! க்ரேண்ட் மா" என்பது போல் ஏதோ சொன்னாள். பெண் சுகந்தினியின் மகனை இன்னும் நேரிட்டு பார்க்கவே இல்லை. அவர்கள் அமெரிக்க குடியுரிமைக்காக காத்திருப்பதால் இந்திய பயணம் தள்ளிக் கொண்டே போகிறது. இவள் என் பேத்தி மாதிரி தானே!... அது என்ன" மாதிரி... பேத்தியே தான்." என்று கையில் வாங்கின கணம் மனதில் உதித்த பெயர் " "வர்ஷினி". பரசுவும் பக்கத்தில் வந்து அந்தக் கிருஷ்ணையின் காலை மெதுவாக முத்தமிட்டார். கண்கள் தளும்பியதோ; என்ற எண்ணம்; மங்களத்திற்கு ஒரு நிறைவைத் தந்தது.

அவனையே உரித்து வைத்தாற்போல் வட்ட முகமும், அந்த சுருட்டை முடியும், "குறுகுறு" பார்வையும், அவனை நினைவூட்ட; மங்களத்துக்கு கிலி பிடித்துக் கொண்டது. "வீட்டிற்கு அவன் வந்திருப்பானா; அவனுக்கு தகவல் சொல்லக் கூட எவரும் இல்லையே." அவள் மன ஓட்டத்தைக் கலைத்தார்; பரசு. "வா! வீட்டிற்குப் போகலாம்." என்றார். "எப்படி? இந்தக் குழந்தையை தனியே விட முடியும்?" என்ற மங்களத்தை கண்ணாலேயே சுட்டு எரித்தார்; ‘’பரசு.! சற்று பொறுமையாக இருங்கள். அந்தப் பெண்ணின் புருஷன் வீட்டிற்கு வந்திருப்பான். நீங்கள் போய், அவன் வந்து விட்டிருந்தால் எனக்குத் தெரிவியுங்கள். தகவல் சொல்லி அவனையும் இங்கே அனுப்புங்கள். என வேண்டினாள்." "என்னை நம்பி, என் பொறுப்பில் விட்டுப் போனவளை, நான் அவனிடம் ஒப்படைத்து விட்டால் தான், என் பொறுப்பு முடியும்" என்று தயக்கமின்றி தெளிவாகச் சொல்லவும். பரசுவால் ஏதும் பேச முடியவில்லை. "விருட்" என்று அவர் முகத்தைத் திருப்பிக்கொண்டு போனதிலிருந்தே அவருடைய ஆத்திரமும் கோபமும் மங்களத்திற்கு தெரிந்தும், அவள் வாய் மூடி மௌனம் காத்தாள்

அவன் இன்னும் வரவில்லை; எனத் தெரிந்து சோலை மீண்டும் அழத் துவங்கினாள். மங்களமும் கலங்கித் தான் போயிருந்தாள். இந்தப் பெண்ணை என்ன செய்வது? வீட்டிற்கு கூட்டிப் போக முடியுமா? பரசு என்ன சொல்வார்? எத்தனை நாள் அவளைத் தன் வீட்டில் வைத்திருக்க முடியும்? பிள்ளைகள் என்ன சொல்வார்கள்? உறவினர்கள், நண்பர்கள் இதை எப்படிப் புரிந்து கொள்வார்கள்? கம்பளி பூச்சி ஊருவது போல்; பல கேள்விகள் அவள் மனதில். மண்டை காய்ந்து போயிருந்தது. மூன்று நாளும் சோலைக்கு பத்தியமாய் சமைத்த உணவு கொடுத்து, உடை மருந்துகளுடன் பிறந்த குழந்தைக்கும் வேண்டியது எல்லாம் வாங்கிக் கொடுத்து,என்று எல்லாம் செய்தாள்; மங்களம்."பெற்ற பெண்ணுக்கு தலைச்சன் பிரசவம்" என்ற பரசுவின் கிண்டலை ஒதுக்கி விட்டாலும்; மனது அவன் வருகையைக் காண ஏங்கித் தவித்தது. இந்த வயதில் எப்படி இது மாதிரி பெரிய பொறுப்பை எடுத்துக் கொள்ள முடியும்; என்ற பயம் மங்களத்தை ஆட்டிப் படைத்தது.

நான்காம் நாள் காலை மருத்துவ மனைக்கு கிளம்பிக் கொண்டிருந்தவளை"அம்மா" என்ற குரல் கூப்பிட,; வயிற்றில் பாலை வார்த்தாற் போல் இருந்தது. கூடவே பரசுவின் குரல்" மங்களம்! அந்தப் பையன்தான் வந்துவிட்டான் போல. வா; சீக்கிரம்,!" என்றதும் மங்களத்திற்கு உற்சாகமும், மகிழ்ச்சியும் தாளவில்லை. அதை விட மனதில் ஒரு பாரம் இறங்கினாற் போல்

மன நிம்மதி .பெரிய பொறுப்பு தோளை விட்டு இறங்கிது , ஒரு விடுதலை உணர்வு. தெருக்கோடி பிள்ளையாருக்கு வேண்டியிருந்தபடியே, இன்றைக்கே சிதறு தேங்காய் போடணும்" என்று நினைத்துக் கொண்டே. கையில் சர்க்கரை டப்பாவுடன் வெளியே வந்தாள். அவன்தான்! என்னப்பா! இப்படிப் பண்ணிட்டே ! அன்னைக்கே சோலையம்மாவுக்கு வலி வந்து பிரசவம் ஆயிடுச்சு. பொம்பளை பிள்ளை. இந்தா சர்க்கரை! வாயிலே போட்டுக்கோ" என்றாள் மங்களம்.

நெடுஞ்சாண்கிடையாக அவள் காலில் விழுந்தான்;அவன். " அம்மா! மன்னிச்சுடுங்க! அன்னைக்கு பசுமாடு தாம்பரம் பக்கம் போயிடுச்சு. மாட்டை பிடிச்சுட்டு திரும்பும் வழியில் போலிஸ் என்னை "சந்தேக கேசில் ஸ்டேஷனில் உட்கார வைச்சுட்டாங்க. எனக்கு யாரைத் தெரியும்? அந்நேரம் பார்த்து ஸ்டேஷன்ல பசு கன்னு ஈண்டுச்சு. கன்னுகுட்டி.. மொதல்ல நான் மாட்டை திருடி ஓட்டிட்டு போறேன்னு நினைச்ச போலீஸார், அது என்னை அண்டி அணுகி இருந்ததைப் பார்த்து, என்னை விட்டுட்டாங்க. போலிஸார் என் நிலமையைப் பார்த்து பரிதாபப் பட்டு, அவங்க செலவிலே குடிசை போட்டு கொடுக்கறாங்க. இதோ! ஏட்டையா வந்திருக்கிறாரு. நான் சொன்னதெல்லாம் மெய்தானா; என்று பார்க்க." ஏட்டையா! முன்பின் தெரியாத இவங்க கிட்ட தான் என் பொஞ்சாதியை விட்டுட்டு , உங்ககிட்ட வந்து மாட்டிக் கிட்டேன். நீங்க சொல்லுங்கம்மா" என்றான். " ஆமாம். ஸார். இவன் சொன்னதெல்லாம் மெய் தான். இன்றைக்கு அவன் பொஞ்சாதியை டிஸ்சார்ஜ் பண்ணி கூட்டிட்டு வரத்தான் நான் கிளம்பிட்டு இருக்கேன். இவன் பெயர் கூட எனக்குத் தெரியாது" என்று மங்களம் சொன்னதும்,உடனே அவன் "என் பெயர் சிங்காரம்" என்றான்;"சரிடா! வா! உன் பொஞ்சாதியையும் பார்த்து பேசிடலாம்" என்று அவரும் , அவர்களுடன் மருத்துவமனை வந்தார். சோலையம்மா அவனைக் கண்டதும், திரும்ப அவள் விம்மி அழ ஆரம்பிக்க; இது ஆனந்த கண்ணீர் என்று புரிந்து கொண்டாள்; மங்களம்.கூட வந்திருந்.த ஏட்டையாவும், சோலையம்மாளை விசாரித்து கேஸ் ஷீட்டில் எழுதிக்கொண்டார் . தன் பங்காக, நூறு ரூபாய் தாளை. சிறு குழந்தையின் கையில் அழுத்தி,விடை பெற்றுக் கொண்டார்

இது நடந்து வருடம் மூன்றாகி விட்டது. இப்போது சோலையும் சிங்காரமும் மங்களம் பெறாத பிள்ளைகள் ஆகிவிட்டனர். இப்போது இவர்கள், அவர்கள்,பொறுப்பில். மங்களத்தையும் பரசுவையும் பெற்ற தாய் தகப்பன் போல்,கண்களை இமைபாதுகாப்பது போல் பார்த்துக் கொள்கிறார்கள்.இப்போது மங்களத்துக்கு துணை; "வர்ஷினி"தான் அவள் பெயரைத்தான் தங்கள் குழந்தைக்கு வைத்திருந்தார்கள். "மங்கள வர்ஷினி" பரசு "மங்களம்" என்று கூப்பிட்டால் வர்ஷினி தான் "என்னதாத்தா" என்று ஓடி வருகிறாள். சோலை, மங்களத்துக்கு வீட்டு வேலைகளில் ஒத்தாசையாக இருக்கிறாள். சிங்காரத்தின் உழைப்பில் ஒரு சிங்கார பூந்தோட்டம் வீட்டிற்கு முன்பும்; காய்கறிகள் தோட்டம் பின் பகுதியிலும். அங்குள்ள மாட்டுத் தொழுவில் இரண்டு பசுமாடுகளும். பரசுவின் விருப்பத்தின் பேரில். கறந்த பாலைக் காய்ச்சி காஃபி குடிப்பது , அமிர்தம். அது தினமும் கிடைத்தது, அவர்களுக்கு; சிங்காரத்தின் தயவால். அவர்கள் இப்போது அவுட் ஹௌஸில். வாசம். மங்களத்தின் தனிமை காணாமல் போய்விட்டது. தருணும் சுகந்தினியும் ஃபோனில் கூப்பிடுவது முதலில் வர்ஷினியைத்தான். அந்த இல்லம் மங்களத்தின் மகிழ்வில், முகிழ்த்து, இன்பத்தையும்,,உல்லாசத்தையும் வர்ஷித்துக் கொண்டிருக்கிறது.

**டாக்டர் என். தருமாம்பாள்**

# தமிழாசியர்களுக்கு சம ஊதியம் பெற போராடிய பெண் போராளி

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் தமிழக வரலாற்றில் மிக முக்கியமான ஒரு காலகட்டமாகும். சமூக அநீதிகள், சாதி ஆதிக்கம், பெண் அடிமைத்தனம், மொழி ஆக்கிரமிப்பு எனப் பலமுனைத் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்த தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுக்கப் பல தலைவர்கள் தோன்றினர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற மாபெரும் தலைவர்கள் ஒருபுறம் சமூகப் புரட்சியை முன்னெடுத்தார்கள் என்றால், அவர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில், ஏன் சில சமயங்களில் அவர்களுக்கு மேலாகவே களத்தில் நின்று போராடிய வீரப் பெண்மணிகளும் தமிழகத்தில் இருந்தனர்.

அத்தகைய பெண் போராளிகளில் முதன்மையானவர், "வீரத் தமிழன்னை" என்று போற்றப்படும் டாக்டர் எஸ்.தருமாம்பாள் ஆவார்.

மருத்துவர், சமூக சீர்திருத்தவாதி, மொழிப்போர் தியாகி, பெண்ணுரிமைப் போராளி எனப் பன்முகத் தன்மைக் கொண்ட டாக்டர் தருமாம்பாள் அவர்களின் வாழ்க்கை வரலாறு என்பது தனிப்பட்ட ஒரு நபரின் வரலாறு மட்டுமல்ல; அது நவீனத் தமிழ்நாட்டின் சமூக மாற்றத்தின் வரலாறுமாகும்.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெண்களைத் திரட்டிப் போராடியது முதல், ஈ.வெ.ராமசாமி அவர்களுக்கு "பெரியார்" என்ற பட்டத்தை வழங்கியது வரை இவரது பங்களிப்பு மகத்தானது. இவரது வாழ்க்கையை விரிவாகவும், ஆழமாகவும் இக்கட்டுரையில் காண்போம்.

தஞ்சை மாவட்டம் என்பது கலைகளுக்கும், காவிரிக் கரை நாகரிகத்திற்கும் பெயர் பெற்றது. இத்தகைய சிறப்புமிக்க தஞ்சை மண்ணில், கருந்தட்டாங்குடி என்ற பகுதியில்

வாழ்ந்தவர் சாமிநாதன் செட்டியார். துணி வியாபாரம் செய்து வந்த இவர், சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் பெற்றவர். இவரது மனைவி பாப்பம்மாள் என்கிற நாச்சியார் அம்மையார். இந்த இணையருக்கு 1890-ஆம் ஆண்டு திருவையாறில் பிறந்த பெண் குழந்தைதான் தருமாம்பாள். பெற்றோர்கள் இவருக்கு இட்ட பெயர் சரஸ்வதி. ஆனால், காலப்போக்கில் அவர் தருமாம்பாள் என்றே அழைக்கப்பட்டார்.

துரதிர்ஷ்டவசமாக, தருமாம்பாள் தனது சிறு வயதிலேயே பெற்றோரை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். பெற்றோரின் அரவணைப்பு கிடைக்காத நிலையில், இலக்குமி என்ற பெண்மணிதான் இவரை வளர்த்து வந்தார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்ததால், முறையான பள்ளிக் கல்வி பயிலும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில் பெண் கல்வி என்பது எட்டாக் கனியாக இருந்த சூழலில், பெற்றோரும் இல்லாத நிலையில் அவரது கல்வித் தேடல் தடைபட்டது இயல்பே.

இருப்பினும், தருமாம்பாள் அவர்களுக்குள் இருந்த கற்கும் ஆர்வம் சற்றும் குறையவில்லை. பள்ளிக்கூடம் செல்ல முடியாவிட்டாலும், தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களிடம் சென்று பாடம் பயின்றார். தமிழ் மொழியின் மீது தீராத காதல் கொண்ட அவர், வேட்கை சீவகாருண்யம் சுப்ரமணியனார் மற்றும் மணி திருநாவுக்கரசு ஆகியோரிடம் முறையாகத் தமிழ் கற்றார்.

தாய்மொழியான தமிழைத் தாண்டி, பண்டித நாராயணி அம்மையாரிடம் தெலுங்கு மொழியையும் கற்றார். மேலும், தனது விடாமுயற்சியால் ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளிலும் ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்றார். பள்ளிக் கல்வி மறுக்கப்பட்டாலும், அறிவுத் தேடலுக்குத் தடையில்லை என்பதைத் தனது வாழ்வின் ஆரம்பக் கட்டத்திலேயே நிரூபித்துக் காட்டினார்.

## கலையார்வமும் திருமணமும்

தருமாம்பாள் சிறுவயது முதலே கலைகளில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். குறிப்பாக நாடகக் கலை அவரை மிகவும் ஈர்த்தது. அக்காலத்தில் நாடகம் என்பது மக்களின் பொழுதுபோக்கு மட்டுமல்லாமல், சமூகக் கருத்துகளைப் பரப்பும் ஊடகமாகவும் விளங்கியது. நாடகங்களில் கதாநாயகனாக நடித்துப் புகழ்பெற்றவர் குடியேற்றம் முனிசாமி நாயுடு. மேடை நாடகங்களில் அவரது நடிப்பையும், குரல் வளத்தையும் கண்டு வியந்த தருமாம்பாள், அவர் மீது காதல் கொண்டார்.

இங்குதான் தருமாம்பாளின் புரட்சிகரமான குணம் முதன்முதலில் வெளிப்பட்டது. சாதி, மதம், ஆசாரம் ஆகியவை சமூகத்தின் எழுதப்படாத விதிகளாக இருந்த அந்தக் காலத்தில், சாதி மறுப்புத் திருமணம் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால், தருமாம்பாள் தனது காதலில் உறுதியாக இருந்தார். முனிசாமி நாயுடுவும்

தருமாம்பாளை விரும்பியதால், இருவரும் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டனர். இத்திருமணம் அக்காலகட்டத்தில் ஒரு பெரிய சமூகப் புரட்சியாகவே பார்க்கப்பட்டது.

திருமணத்திற்குப் பிறகு சிறிது காலம் நாகப்பட்டினத்தில் வாழ்ந்த இந்த இணையர், பின்னர் சென்னைக்குக் குடிபெயர்ந்தனர். சென்னையில் தங்கச்சாலையில் (Mint Street) எண் 330 என்ற முகவரியுள்ள வீட்டில் அவர்கள் குடியேறினர். சென்னை வாழ்க்கை தருமாம்பாளின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தது.

## சித்த மருத்துவரும் மக்கள் சேவையும்

சென்னைக்கு வந்த தருமாம்பாள், சும்மா இருக்க விரும்பவில்லை. மக்களுக்குப் பயனுள்ள வகையில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் இருந்தது. மக்கள் தொண்டு செய்வதற்கு மருத்துவத் தொழிலே சிறந்தது என்று அவர் கருதினார். ஆங்கில மருத்துவத்தின் ஆதிக்கம் அதிகரித்து வந்த காலகட்டத்திலும், நமது மண் சார்ந்த மருத்துவமான சித்த மருத்துவத்தின் மீது அவருக்கு நம்பிக்கை இருந்தது.

ஆர்வம் காரணமாகச் சித்த மருத்துவத்தைத் தானே முயன்று கற்றார். பல்வேறு பயிற்சிகளை மேற்கொண்டார். சித்த மருத்துவத்தில் கைதேர்ந்தவராக மாறினார். சென்னையில் அவர் தொடங்கிய மருத்துவமனைக்கு ஏழை எளிய மக்கள் அதிக அளவில் வரத் தொடங்கினர். பணம் படைத்தவர்களுக்கு ஒரு மாதிரியும், ஏழைகளுக்கு ஒரு மாதிரியும் மருத்துவம் பார்க்கும் வழக்கம் அவரிடம் இல்லை. தன்னிடம் வரும் நோயாளிகள் வசதியற்றவர்கள் என்றால், அவர்களுக்கு இலவசமாக மருந்து கொடுப்பதோடு மட்டுமல்லாமல், உணவும் கொடுத்து அனுப்பும் தாயுள்ளம் கொண்டவராக அவர் திகழ்ந்தார்.

இதனால் அப்பகுதி மக்கள் அவரை "டாக்டர் அம்மா" என்று அன்போடு அழைத்தனர். இந்த மருத்துவப் பணிதான் அவருக்கு மக்களுடனான நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தது. மக்களின் துயரங்களை அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பையும் இது வழங்கியது.

## பொதுவாழ்வில் நுழைவு

ஒருபுறம் மருத்துவம், மறுபுறம் குடும்பம் என்று வாழ்ந்து வந்தாலும், தருமாம்பாளின் சிந்தனை சமூகப் பிரச்சினைகளை நோக்கியே இருந்தது. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தமிழகத்தில் சூறாவளியாகச் சுழன்று கொண்டிருந்த காலம் அது. மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண் விடுதலை, சாதி ஒழிப்பு போன்ற பெரியாரின் கொள்கைகளால் தருமாம்பாள் ஈர்க்கப்பட்டார்.

பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவதே பாவம் என்று கருதப்பட்ட காலத்தில், பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு இருக்க வேண்டிய இலக்கணமாகத் தருமாம்பாள் திகழ்ந்தார். நேர்மை, பொருளாசையின்மை, கொள்கைப் பிடிப்பு, புகழாசை இன்மை

ஆகிய பண்புகளை அவர் தன்னிடம் கொண்டிருந்தார். "புகழ் பெற எதையும் செய்யத் துணியும் எவரும் நேர்மையானவர்களாக இருக்க இயலாது" என்ற கொள்கையில் அவர் உறுதியாக இருந்தார்.

டாக்டர் தருமாம்பாள் திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். பெரியாரின் மேடைப் பேச்சுக்களும், குடியரசு இதழின் கருத்துக்களும் அவரைத் தீவிரமான சமூகச் செயல்பாட்டாளராக மாற்றின. கணவரின் இறப்புக்குப் பிறகும் கூட, அவர் முடங்கிப் போய்விடாமல், சமூகப் பணிகளில் இன்னும் வேகத்துடனேயே செயல்பட்டார்.

## பெண்ணுரிமைப் போராளி

டாக்டர் தருமாம்பாள் ஒரு பெண்ணாக இருந்ததால், பெண்கள் படும் துயரங்களை நன்கு உணர்ந்திருந்தார். விதவை மறுமணம், பெண்கல்வி, சொத்துரிமை ஆகியவற்றிற்காகக் குரல் கொடுத்தார். அக்காலத்தில் தேவதாசி முறை என்ற பெயரில் பெண்கள் இழிவுபடுத்தப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்தார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் போன்றவர்களுடன் இணைந்து தேவதாசி ஒழிப்பு முறைக்காகப் போராடினார்.

பெண்கள் வெறும் சமையலறையோடு முடங்கிவிடக் கூடாது, அவர்கள் வீதிக்கு வந்து போராட வேண்டும் என்று முழங்கினார். சுயமரியாதைத் திருமணங்களை முன்னின்று நடத்தினார். சாதி மறுப்புத் திருமணங்களை ஆதரித்தார். தனது சொந்த வாழ்க்கையையே அதற்கு முன்னுதாரணமாகக் காட்டினார்.

## இந்தி எதிர்ப்புப் போர் (1938) - ஒரு திருப்புமுனை

டாக்டர் தருமாம்பாளின் பொதுவாழ்வில் மிக முக்கியமான மைல்கல் 1938-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆகும். அப்போதைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி, பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கினார். இது தமிழர்களின் மொழி உரிமை மீதான தாக்குதல் என்றும், ஆரியப் பண்பாட்டைத் திணிக்கும் முயற்சி என்றும் பெரியார் உள்ளிட்ட தலைவர்கள் எதிர்த்தனர்.

இந்தப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று பெரியார் விரும்பினார். அந்தப் பொறுப்பைத் தன் தோள்களில் சுமந்தவர் டாக்டர் தருமாம்பாள். 1938 நவம்பர் 14 அன்று சென்னையில் ஒரு மாபெரும் பெண்கள் மாநாட்டை நடத்தினார். ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்ட அந்த மாநாடு, ஆங்கிலேய அரசையும், ராஜாஜியின் அமைச்சரவையையும் அதிர வைத்தது.

அந்தப் போராட்டக் களத்தில் டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மலர் முகத்தம்மையார் போன்றோர் ஆற்றிய உரை வீரம் செறிந்தது. "எங்கள் தமிழ் மொழியைக் காக்கச் சிறை செல்லவும் தயார், உயிர் துறக்கவும் தயார்" என்று முழங்கினர். தடையை மீறிப் போராடியதால் டாக்டர் தருமாம்பாள் கைது செய்யப்பட்டார்.

சிறை வாழ்க்கை அவரைச் சோர்வடையச் செய்யவில்லை; மாறாக மேலும் உறுதிப்படுத்தியது. ஆறு வாரங்கள் சிறையில் இருந்த அவர், சிறையிலிருந்து வெளிவந்ததும் மீண்டும் போராட்டக் களத்திற்கே சென்றார்.

இந்தத் தீரம் மிக்க போராட்டத்தில்தான் அவருக்கு "வீரத் தமிழன்னை" என்ற பட்டம் வழங்கப்பட்டது. தமிழன்னைக்கு ஆபத்து வந்தபோது, ஒரு தாயாக முன்னின்று காத்ததால் இப்பெயர் அவருக்கு மிகவும் பொருத்தமானது.

## ஈ.வெ.ராமசாமிக்கு "பெரியார்" பட்டம்

இன்று நாம் ஈ.வெ.ராமசாமி அவர்களை "பெரியார்" என்று அழைக்கிறோம் என்றால், அந்தப் பெயரை அவருக்குச் சூட்டிய பெருமை டாக்டர் தருமாம்பாள் அவர்களையே சேரும்.

1938-ஆம் ஆண்டு நவம்பர் 13, 14 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டின் தலைவராக மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையார் இருந்தார். ஆனால், அந்த மாநாட்டை முன்னின்று நடத்தியவர் டாக்டர் தருமாம்பாள். அந்த மாநாட்டில்தான், பெண்களின் விடுதலைக்காகவும், தமிழினத்தின் மேன்மைக்காகவும் அயராது உழைக்கும் ஈ.வெ.ரா அவர்களுக்கு "பெரியார்" (The Great One) என்ற பட்டத்தை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை டாக்டர் தருமாம்பாள் முன்மொழிந்தார்.

பெண்கள் அனைவரும் கரகோஷம் எழுப்பி அந்தத் தீர்மானத்தை ஆதரித்தனர். அன்று முதல் ஈ.வெ.ராமசாமி, "தந்தை பெரியார்" என்று அழைக்கப்பட்டார். ஒரு மாபெரும் தலைவருக்கு, மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் ஒரு அடையாளத்தைக் கொடுத்தவர் டாக்டர் தருமாம்பாள்.

## தமிழ் இசை இயக்கம்

1940-களில் கர்நாடக இசைக் கச்சேரிகளில் தெலுங்கு மற்றும் சமஸ்கிருதப் பாடல்களே ஆதிக்கம் செலுத்தி வந்தன. தியாகராஜர் கீர்த்தனைகளைப் பாடுவதையே கௌரவமாகக் கருதினர். தமிழ்ப் பாடல்களைப் பாடுவது தரக்குறைவாகப் பார்க்கப்பட்டது. "தமிழில் பாடினால் ராகம் வராது, பக்தி வராது" என்று கேலி பேசினர்.

இதை எதிர்த்து ராஜா அண்ணாமலை செட்டியார், கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றோர் "தமிழ் இசை இயக்கம்" கண்டனர். இந்த இயக்கத்தில் டாக்டர் தருமாம்பாள் தீவிர பங்காற்றினார். "தமிழர் மேடையில் தமிழே முழங்க வேண்டும்" என்று அவர் வாதிட்டார். 1941, 1943 ஆண்டுகளில் நடந்த தமிழ் இசை மாநாடுகளில் கலந்து கொண்டு, தமிழிசையின் அவசியம் குறித்துப் பேசினார்.

புகழ்பெற்ற பாகவதர்கள் தமிழ்ப் பாடல்களைப் பாட மறுத்தபோது, அவர்களை எதிர்த்துப் போராடினார். தமிழிசைக்காகப் போராடிய காரணத்தினாலேயே, அப்போதைய முன்னணி நடிகரும் பாடகருமான எம்.கே.தியாகராஜ பாகவதருக்கு "ஏழிசை மன்னர்" என்ற பட்டத்தை டாக்டர் தருமாம்பாள் வழங்கினார். இது அவர் தமிழிசை மீது கொண்டிருந்த பற்றைக் காட்டுகிறது.

## தமிழ் ஆசிரியர்களுக்கான போராட்டம்

டாக்டர் தருமாம்பாள் வெறும் மொழி, இனம் சார்ந்து மட்டுமல்லாமல், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் போராடியவர்.

1940-களில் தமிழாசிரியர்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. மற்ற பாடங்களை எடுக்கும் ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் தமிழாசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனை "இழிவு வாரம்" என்று கருதினர்.

இதை எதிர்த்து தமிழாசிரியர்கள் சங்கம் போராடியபோது, அவர்களுக்குத் தலைமை தாங்கியவர் டாக்டர் தருமாம்பாள். "இழிவு வாரம்" என்பதை "இளவு வாரம்" (இழப்பு வாரம்) என்று மாற்றி, தமிழாசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறைக்கு எதிராகப் போராடினார். கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியாரிடம் இதற்கான கோரிக்கையை வலியுறுத்தி வெற்றியும் கண்டார். தமிழாசிரியர்களின் வாழ்வில் ஒளியேற்றியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு.

## இலக்கியப் பற்றும் தனித்தன்மையும்

டாக்டர் தருமாம்பாள் ஒரு சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல, நல்ல எழுத்தாளரும் கூட. அவரது பேச்சில் அனல் பறக்கும். அதே சமயம் அதில் ஆழமான கருத்துக்களும் இருக்கும். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த உமாமகேஸ்வரன் பிள்ளை, தருமாம்பாளின் தந்தைக்கு நண்பராக இருந்தவர். அந்த நட்பு, தருமாம்பாளின் தமிழ்ப் பற்றுக்கு உரம் ஊட்டியது எனலாம்.

அவரது வீட்டில் எப்போதும் தமிழ் அறிஞர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள் கூடி விவாதிப்பார்கள். அவரது இல்லம் ஒரு சமூக மாற்றத்திற்கான பாசறையாகவே செயல்பட்டது.

## மறைவும், அரசு செய்த சிறப்பும்

வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும், தமிழினத்திற்காகவும், பெண்ணுரிமைக்காகவும் போராடிய அந்த வீரத் தாய், 1959-ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் தேதி இயற்கை எய்தினார். அவரது மறைவு திராவிட இயக்கத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாக அமைந்தது. பெரியார், அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தனர்.

அவரது தியாகத்தைப் போற்றும் வகையில், தமிழ்நாடு அரசு "டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்" என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம், மறுமணம் செய்து கொள்ளும் விதவைப் பெண்களுக்கு நிதியுதவியும், தங்கமும் வழங்கப்படுகிறது. தான் வாழ்ந்த காலத்தில் எதற்காகப் போராடினாரோ (விதவை மறுமணம்), அதே காரணத்திற்காகத் தனது பெயரில் இன்றும் உதவிகள் வழங்கப்படுவது அவரது ஆன்மாவுக்குச் செய்யும் சிறந்த மரியாதையாகும்.

மேலும், சென்னையில் உள்ள ஒரு பூங்காவுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. கரந்தைத் தமிழ்ச் சங்கம் அவருக்கு "வீரத் தமிழன்னை" என்ற பட்டத்தை 1951-ல் அதிகாரப்பூர்வமாக வழங்கிக் கௌரவித்தது.

சென்னையில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிக்கு டாக்டர் தர்மாம்பாள் அவர்களின் பெயரே அளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நவீன உலகில் பெண்கள் அனுபவிக்கும் பல உரிமைகள், டாக்டர் தருமாம்பாள் போன்ற தியாகிகள் சிந்திய ரத்தத்தாலும், வியர்வையாலும் கிடைத்தவை. அரசியல், சமூகம், கலை, மருத்துவம் எனத் தான் தொட்ட துறைகள் அனைத்திலும் முத்திரை பதித்தவர் அவர்.

வெறும் வாய்ப் பேச்சோடு நின்றுவிடாமல், களத்தில் இறங்கிப் போராடியவர். சிறைச்சாலையைத் துச்சமாகக் மதித்தவர். பெரியாருக்கே பட்டம் சூட்டும் துணிச்சல் கொண்டவர். அதே சமயம், ஏழை நோயாளிகளுக்கு இலவச மருத்துவம் பார்க்கும் கருணை உள்ளம் கொண்டவர்.

மருத்துவர் தருமாம்பாள் அவர்களின் வாழ்க்கை இன்றைய இளைய சமுதாயத்திற்கு, குறிப்பாகப் பெண்களுக்கு ஒரு பாடநூல். அடக்குமுறைகள் வரும்போது அஞ்சி ஓடாமல், அவற்றை எதிர்த்து நிற்கும் துணிச்சலை அவரது வரலாறு நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. தமிழையும், சுயமரியாதையையும் இரு கண்களாகப் பாவித்த அந்த வீரத் தமிழன்னையின் புகழ், தமிழ் மொழி உள்ளவரை மங்காது ஒளிரும்.

சமூக மாற்றத்திற்காக உழைத்த தலைவர்களில், பெண்களின் பங்களிப்பு பெரும்பாலும் வரலாற்றின் பக்கங்களில் மறைக்கப்பட்டு விடுகிறது அல்லது சுருக்கப்பட்டு விடுகிறது. ஆனால், டாக்டர் தருமாம்பாளின் வரலாற்றைப் படிக்கும்போது, திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு எவ்வளவு மகத்தானது என்பதை உணர முடிகிறது.

அவர் ஏற்றிய தீபம், இன்றும் பலருடைய வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது.

முகநூல் பதிவு

## அம்மா

என் பிரிய அம்மா
முதல் நாளில்
முதல் பொழுதில்
ஜனனம்
போல்
மரணமும்
என்னில் பதித்தாள்
அல்லது
விதைத்தாள்

வந்து கடந்து
சென்ற
எத்தனையோ
எத்தனையோ
மரணங்கள்.

நீர் நில வான்
மரணங்கள்
நோய் நொடி
பீடித்த மரணங்கள்

நின்று நடந்து
ஆடி ஓடும்
பாடும் போதான
மரணங்கள்

உண்ணும் போதும்
உறங்கும் போதும்
விழித்த கணங்களிலும்
அயர்ந்த கணங்களிலும்
என்னைச் சுற்றிலும்
எப்போதும் ஏதேனும்
எவ்வகையிலும் நிகழும்
ரகரகமான
மரணங்கள்

முகமறிந்த
முகமறியா
பச்சிளம் சிசு
பழுத்த இலை
மரணங்கள்

என்னில்
மரணம்
பரப்பும் சேதி....

பூவுலகில் வணங்கி
இணங்கி
விருப்பு வெறுப்பு
அறுத்து புதைத்து
எரித்து
இந்த நிமிடம்
இந்தக் கணம்
இன்புற்று
உயிர்த்திரு

நான்
உன்னை
நோக்கிய
பயணத்திலும்

என்றேனும்
எப்போதேனும்
நான்
உன் மடி
குழந்தையாகவும்
உன் வீட்டு
விருந்தினர்
உண்கலம்
ஏந்தியும்....

**கேள்விக்காரன்...**

# வாழ்க்கைத்தடம்

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
**புதுச்சேரி**

*ஆசிரியர்: தேசிய நல்லாசிரியர், கலைமாமணி ப.முருகேசன் அவர்கள்*
*வகைமை: கவிதை*
*பக்கங்கள்: 240*
*விலை: ரூ 250/-*
*வெளியீடு: கவிதா பப்ளிகேஷன், சென்னை.*

*கலை வடிவமும் கருத்துச்செறிவும் கவனம் ஈர்க்கும் நயமிகு சொல்லாட்சியுமாகக் கட்டமைப்பைக் கொண்டது கவிதை என்பதாகும். அவ்வடிவ மொழியழகுக் கவிதையுடன் கூடிய கடித இலக்கியமாகப் படைக்கப்பட்டதுதான் இந்த "வாழ்க்கைத்தடம்" எனும் நூல் வடிவம் ஆகும். இது புதுச்சேரி, தேசிய நல்லாசிரியர், கலைமாமணி, ப.முருகேசன் அவர்களின் எழுத்தாக்கத்தில் உருவானது.*

*இன்றைய நவீன கால வளர்ச்சியின் காரணமாகக் காணாமல் போன பலவற்றில் கடிதமும் ஒன்று ஆகும். பழையன கழிதலும் புதியன புகுதலுமாக, இன்றைய வாழ்வில் தொடர்புகள், செய்திகள், தரவுகள், தகவல்கள் எனப் பல்வேறு பரிமாற்றங்கள், மின்னணு ஆற்றலின் வழியில் விரைவாகவும் விரிவாகவும், உலகப்பந்தைத் தாண்டியும் நிகழ்கின்றன.*

*ஒரு காலத்தில் கடித இலக்கியம் என்பது ஒரு புரட்சியாக இருந்தது. மடல் எனப்படும் கடிதத்தை, உள்ளத்து உணர்வுகளைப் பரிமாறப்படும் இடம், உறவுகளைப் பலப்படுத்தும் விதம் என்பதையெல்லாம் தாண்டி மனிதர்களின் வாழ்வியல், வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், படிப்பினை என்று பலவற்றையும் காட்சிப்படுத்தும் ஊடகம் போலவும் இலக்கியத்தில் இடம் பிடித்துள்ளது என்பதை மறுக்க இயலாது. அத்துணை உள்ளடக்கம் பெற்றவை, பிற்காலத்தில் வரலாற்று சிறப்புமிக்க கடிதங்களாகி இன்றும் நிலைத்திருப்பதே அதற்குச் சாட்சியாகும்.*

*அக்காலத்தில், கடிதத் தொடக்கத்தில் முதலில் எழுதப்படும் விளிச்சொல்லே பெறுநரின் கண்களில் நீரைப் பெருக்கும். "அன்புள்ள அம்மாவிற்கு", "நெஞ்சில் நிறைந்த காதலிக்கு", "அன்புள்ள அத்தான்" என எத்தனையோ சொற்கள் உள்ளத்தை உணர்த்துவதாகத் தொடங்கும். "வணக்கம்! இங்கு நான் நலம். அங்கு நீங்கள் நலமா?" எனத் தொடரும். எத்தனையோ செய்திகளைப் பகிர்ந்த பின்னும், "இனி, மற்றவை தங்களின் பதில் மடல் கண்டு", என இன்னும் தொடரத் தூண்டும். இறுதியில், "என்றும் அன்புடன்", "உன் நினைவில் உருகும்", "அன்பு வாழ்த்துகளுடன்" என்று தீரா அன்பை உணர்த்தும் பல்வித வார்த்தைகளுடன் பெயரிடப்பட்டு*

முடியும். இந்நூலாசிரியரும் அத்தகைய அன்பை முதலாகக் கொண்டு, தன் அன்பு மகள் அல்லிக்காக, இந்நூலைப் படைத்து உள்ளார்.

புதுச்சேரியின் முக்கிய ஆளுமையான, பன்முக ஆற்றல் உடைய இந்நூல் ஆசிரியர், தேசிய நல்லாசிரியர், கலைமாமணி, ப.முருகேசன் அவர்களின் தற்போதைய அகவை 75 ஆகும். இத்தனை ஆண்டுக்கால வாழ்வில், பிறப்பு முதல், சில நினைவுகள், சில தருணங்கள், காதல், திருமணம், சில திருப்புமுனைகள், சில அனுபவங்கள் எனத் தெரிவு செய்த சிலவற்றை மட்டும் "வாழ்க்கைத்தடம்" ஆக்கி இலக்கியப் பரப்பிற்குள் கொண்டு வந்துள்ளார் நம் ஆசிரியர். இவர் எழுதிய மடல், உறவுகளில் தொடங்கி, பிறந்து வளர்ந்த, வாழ்ந்த, வாழும் என இந்தப் புதுச்சேரி மண்ணின் சில இடங்கள், சில மனிதர்கள், சில சூழல்கள் எனத் தன் மகளிடம் விவரிக்க விரும்பியவற்றைக் கூறியுள்ளது.

இதுவரை, பல்வேறு விதமாக, 15 நூல்களைப் படைத்த இந்நூலாசிரியரின் இந்தக் கவிக்கடித நூலின் உள்ளடக்கம் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

அதற்குமுன், தோரணவாயிலாக அட்டையின் அழகைக் காண்போம். அட்டையின் முகப்புப் படத்தில், வானில் எழுகதிர்திசை நோக்கி நடக்கும் ஒருவர், அவரின் பாதத் தடங்கள் என நம் நூலாசிரியரைக் குறிப்பதாகக் காட்சி, மேல் வானத்தில் நிலவுமகளாக ஆசிரியரின் மகள் அல்லியைக் காட்டும் காட்சி! ஒரே நேரத்தில் சூரியனும் சந்திரனும்!

அடுத்து, தன்னம்பிக்கை வளர்க்கும் இந்நூலிற்காக, பதிப்புரையையே பாராட்டுரையாகத் தந்துள்ளார்கள் சென்னை, கவிதா பப்ளிகேஷன், திருமிகு சேது. சொக்கலிங்கம் அவர்கள். என்னுரையில், நூலாசிரியர் நம் வாழ்வின் நிதர்சனங்களை இப்படிச் சொல்கிறார். "ஒருவரின் அனுபவம் / மற்றவர்க்கு எடுத்துக்காட்டு". இதை மறுக்க இயலுமா?

பொதுவாக, முரண்கள் நிறைந்தது வாழ்க்கை. என்றாலும், எவரவர் வாழ்க்கை என்னென்ன ஆகும் என்பதெல்லாம் இயற்கையின் கையில்தான். அந்த முரண்களின் முன்னும் பின்னுமானச் சூழல்கள் யாவையும் வாழ்க்கையில் திறமையாகக் கையாள்வதின் மூலமாக, நல்லனுபவமாகவோ, சவால்களாகவோ, படிப்பினையாகவோ மாறுகின்றன. அவற்றையும் ஆசிரியர், தான் பெற்ற மகளிடம், இக்கடிதத்தில் விவரிக்கிறார். சில முரண்களை இங்கு உணர்வோம்!

இந்த "வாழ்க்கைத்தடம்" என்பது இரண்டு பாகங்களாக உள்ளது. முதல் பாகம்-1 எழுதும் போது, ஆசிரியருக்கும் அவரின் மகள் அல்லிக்கும் வசிப்பிட இடைவெளித் தூரம் கிட்டத்தட்ட 1000 மைல்கள் இருக்கலாம். பாகம்-2 என்பது கடல் கடந்து அயலகத்தில் பல்லாயிரம் மைல்கள்

தாண்டி அன்பு மகள் வாழ்கின்ற நிலையில் எழுதப்பட்டுள்ளது. முதல் பாகம் 81 பக்கங்கள் எனில் இரண்டாம் பாகம் 147 பக்கங்களில் அடங்கியுள்ளது. முகம் பார்த்துப் பேச முடியாத தொலைபேசியும் நினைக்கையிலே பார்த்து, பேசி மகிழும் திறன்பேசி, கணினி எனத் தொலைத் தொடர்புகளுமாக, இவ்விரண்டுப் பகுதிகளின் நிலையில் உள்ள முரணைக் காணலாம். இந்த முரணுக்கிடையில் நெருங்கி நிலைத்து வைப்பது அன்பு ஒன்றே அன்றோ?

நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் தன் மகள், தன் எழுத்தை, பேச்சை, ரசிப்பவளும் ருசிப்பவளும் ஆக இருக்கிறாள் என்று உவகை அடைகிறார். அல்லிமகளின் இளவல் அருண்குமார் பற்றி கூறும் போது "என் எழுத்தை / இயங்குச் சித்திர எழிலோவியமாய் / வடிவம் மாற்றும் வில்லாளனாய்/ஆங்கில நாவல் எழுத்தாளனாய்" என்று குறிப்பிட்டு, பின், "இனி என் எழுத்தும் சாகா வரம் பெறும்" என்று நெகிழ்ந்துள்ளார். இதைவிட ஒரு எழுத்தாளருக்குப் பரிசாய் ஒரு வாழ்வு அமையுமா?

விவரம் புரியாத வயதில் மகள் துயிலுற, அன்று சொன்ன கதைகள் அத்தனையும் கற்பனை என்று பாகம் ஒன்றில் உண்மையை ஒத்துக்கொண்டவர், விவரம் புரிந்த மகளுக்கு இன்று சொல்வது மெய் என்று உறுதியுடன் வாழ்க்கை பற்றிய ஒரு அறிமுகத் தத்துவத்தை, நிதர்சனத்தைக் கூறுகிறார்.

வயதை அறியா வயதில் அன்னையிடமிருந்து அவர் அறிந்த பிறப்புச் சூழல் பாகம் ஒன்றில் தொடங்குகிறது. இது புதுச்சேரியின் முதலியார் பேட்டையில் இருந்து விரிகிறது. அடுத்தது சாரம். இதில், திண்ணைப் பள்ளியில் தொடங்கி புதுவை மண்ணின் பல்வேறு பகுதிகளில் கல்வி வாழ்வைத் தொடர்ந்தவர், வசித்த ஊர்களாக, குயவர்பாளையம், மீண்டும் முதலியார்பேட்டை, வண்ணாங்குளம், பொய்யாக்குளம் என்று நீள்கிறது பட்டியல்.

சிசுவாக இருந்தவருக்கு, பெற்றோரின் சார்பாக 'முருகேசன்' என்று தனக்குப் பெயரிட்டவர் மருத்துவமனையில் இருந்த ஒரு கிருத்துவ செவிலியப் பாதிரி என்பதை ஆசிரியர் குறிப்பிட்டு மகிழ்ந்துள்ளார்.

கணக்கு வாய்ப்பாட்டை, சரியாகச் சொன்னதற்காக ஆல்பர்ட் ஆசிரியரிடமிருந்து பெற்ற மிட்டாய்ப் பரிசை அபகரித்த சேகர் எனும் சக மாணவரை, இன்றும் பார்க்கையில் வணக்கம் சொல்லி வழியே போகிறாராம். இன்று ஆயிரம் சாக்லெட் வாங்கும் வசதி இருப்பினும் ஆல்பர்ட் வாத்தியார் அளித்த பரிசு கிடைக்குமா? அதனை உணர்ந்ததாலோ என்னவோ, திறமை உடைய மற்றவர்களை, இவர் பாராட்டும் விதத்தில் குறை வைப்பது இல்லை. பரிசு குறித்து இது போன்ற நிகழ்வு வேறொன்று நடந்தது. அதனை "வானத்துக்கு வேலி" பெற்ற "கம்பன் புகழ் பரிசு" சொல்லும். நூலின் 2ஆம் பாகத்தில் ஆசிரியர் இதனை விளக்குகிறார்.

15-07-1974 அன்று பணியில் இணைந்ததைப் பற்றிய கவிதை வரிகளில் "பொறுப்பு உணரா பருவத்தில் கிட்டியது ஆசிரியர் பணி" என்று கூறியவரின் வாழ்க்கை 30 ஆண்டுகளில் அடுத்தடுத்து மாநில, தேசிய நல்லாசிரியர், எழுத்தாளர், நாடக ஆசிரியர் என உருவேற்றி உள்ளது. இந்த முரணில் முன்னிற்பவை அர்ப்பணிப்பு உணர்வு, கால நேரம் பார்க்காது மாணவர்களிடம் ஒழுக்கநெறிச் சிந்தனையை வளர்த்தல், கற்பித்தல், அன்புடன் அரவணைப்பு, பள்ளிக்கும் மாணவர்களுக்கும் இடையில் பாலமாக இருத்தல், பொதுத் தொண்டில் நாட்டம் என எல்லாம் குறிப்பிடத்தக்கவை.

மேலும், அவர்தம் ஆசிரியப்பணி அனுபவத்தில், அவருடைய மாணவர்களிடமும் அவர் பாடம் கற்றுள்ளார். அதையும் சேர்த்துப் பகிர்ந்துள்ளார். அப்பனுக்குச் சுப்பன் சொன்னதைப் போல நடந்ததும் உள்ளது. ஒரு மாணவனின் தந்தை, நம் நூலாசிரியருக்கு ஞானம் பிறக்க வைத்து "போதிமரம்" ஆகிய நிகழ்வும் நடந்து உள்ளது. இதுபோன்ற, விவரங்களும் நூலில் உள்ளன.

எட்டாம் வகுப்பு வரை குடும்ப இருப்பு புரியாதவர்தான், வறுமை நெருப்பால் பழுக்கத் தீட்டப்பட்டதன் விளைவாக, ஆசிரியப் பணியில், சவராயலுநாயகர் அரசுப் பள்ளியில் மாணவர்களுக்கு "வயிற்றுப் பசி நீங்க தினமும் காலையில் ரொட்டி வழங்கினால் நன்று!" என ஆலோசனை வைக்க சூழல் உந்தியுள்ளது.

இவர், ஆடை கலாச்சாரத்தைப் பற்றிக் கூறும் போது அக்காலத்தில் ஆசிரியர் என்பவர் தலைப்பாகை, சட்டை மேல் கோட்டு, வேட்டி என்று இருந்திருக்கிறார்கள். நம் நூல் ஆசிரியர், பள்ளி ஆசிரியராய் இருந்த ஆரம்ப காலத்தில் கிராப்பு, கிருதா மீசை, பூப்போட்ட சட்டை, பெல் பாட்டம் போட்ட பேண்ட், அகல பெல்ட் என்று எழுபதுகளின் தமிழ்த் திரையரங்கம் தந்த நாகரிக உச்சத்தில் இருந்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆசிரியரின் பள்ளிப் பருவத்தில் இருந்தத் தன் தோற்றத்தை, இப்படிக் கூறுகிறார். "எண்ணெய் தடவி / அழுந்த சீவிய தலை / அழுக்குத் துவைத்தச் சட்டை / நெற்றி நிறைய பட்டை" என்று இருந்த நிலையில் முரணாக அவரின் பக்தி நிலை மாறியதைப் பற்றி, பொய்யாக்குளத்தில் அவர் வசித்தபோது விவரிக்கும் பகுதியில், சொல்கிறார்.

வாழ்வின் வழியில் இளம் பருவம் முதல் இப்போதைய அகவை வரை, மகளிடம் சொல்கையிலே அவர் வெளிப்படுத்துவன யாவும் ஒரு ஆவணப் பதிவாகும். அவரின் வாழ்வில் தொடர்ந்த புதுச்சேரியின் பல்வேறு ஊர்களை, சூழலை, இயற்கை அழகை, அனுபவித்த மகிழ்வை, வாழ்வியல் முறையை, அவர் ஆங்காங்கே எழுத்து வழியில் வாசிப்பவரை இட்டுச் சென்று காண்பிக்கிறார். உதாரணமாக, முதலியார்பேட்டைக்கு அவருடன் போவோம்.

புதுச்சேரியில், ஒருகாலத்தில், மூன்று பஞ்சாலைகளுடைய இயந்திரங்களின் இயக்கத்தால் எத்தனையோ குடும்பங்களின் உயிர்ச்சக்கர அச்சிற்கு உயவு கிடைத்தது. அந்த இயந்திரங்களோடு உழைத்த உயிர் இயந்திரங்களாய், தொழிலாளர்கள் இருந்தனர். அவர்களால், அப்போது தூங்கா நகரமாக, இருந்த ஒரு இடம் முதலியார்பேட்டை ஆகும்.

காலத்தின் கோலமாய், வரலாற்றில் வடுவாகிவிட்ட அந்த ஆலைகளின் பணிநேர அறிவிப்புச் சங்கொலி எப்போது ஓய்ந்ததோ, அப்போதே பெரும்பாலோரின் வாழ்வாதாரப் பற்று-வரவுக்கு இறுதிச் சங்கு ஒலித்துவிட்டது எனலாம். அங்குப் பணிபுரிந்து, இன்றும் இருப்போரில், சக்கரமே இல்லா வண்டியாகத் தேங்கியும் பலர்; பிழைத்துக் கொண்டும் பலர் உள்ளனர் எனலாம்.

"ஜவானா ஆலை... புது ஆலை... கெப்ளே ஆலை
மூன்று ஆலைகளும்...
புதுச்சேரி மக்களின் வாழ்வாதாரம்!
காலம் மாறியது... சூழல் மாறியது...
சுதேசி மில்... ரோடியர் மில்... பாரதி மில்
ஆலைகள் மூன்றும்...

பெயர் மாற்றம் பெற்றன!
மாதத்தில் பத்தாம் தேதி...
மூன்று பஞ்சாலைகளிலும்...
சம்பள பட்டுவாடா!
முதலியார் பேட்டை...
திருவிழா கோலம் பூணும்!
ஆயிரக்கணக்கான குடும்பங்களின்...
பசி தீர்க்கும் திருநாள்!''
இப்படித் தொடங்கும் சூழல்,
''புதுச்சேரியின் பொருளாதாரமென...
பேசப்பட்ட பஞ்சாலைகள்...
மூடுவிழா கண்டுவிட்டன!
ஆயிரமாயிர குடும்பங்கள்...
வறுமையில் வாட்டம்!''
என்று தொடருகையிலும்,
''கைப்பொருள் தன்னை
வீதியில் வீசி எறிந்து...
வேடிக்கை பார்த்து விட்டோம்!''

எனும்போதும், மனம் வெம்பும்!

இவரின் காதல், திருமணம், மனைவி குமுதம் அவர்கள், அவரின் அன்புப் பிணைப்பு, இல் வாழ்வு, பணிச்சூழல், சுவாரசியம், தேடுதல், தொடருழைப்பு, சாதனைகள் என்று எத்தனையோ சுவாரசியங்கள் இந்நூலில் உள்ளன. மேலும், சுனாமி, பெருந்தொற்று நோயான கொரோனாவினால் நேர்ந்த சூழலைப் பற்றியும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கவிநயம் பற்றிக் கூறவும் பலவுண்டு. ஆயினும், திகட்டாதினிக்க, துளிகளாய் கொஞ்சம் வரிகள் இதோ!

''சொல்லாத சொல்லுக்கு
விலை ஏதுமில்லை
சுவை கொண்ட சொல்லுக்கோ
விஞ்சிய சுகமே மதிப்பு''

சொற்சுவைக்கு மதிப்பு விஞ்சிய சுகமே என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதனை, அவரின் படைப்பு உறுதிபடுத்தும்.

தமிழை ஏத்தும் சொற்சுவைக்கு எடுத்துக்காட்டுகள் சில இங்கே:
காதல், நம் நூலாசிரியரைத் துரத்திய நாட்களின் கவி வரிகள்:

*“கண்ணுக்குக் கைக்குடை வைத்து...” நாயகனாய் நூலாசிரியர் ப.முருகேசன் அவர்களின் எதிர்பார்ப்பு!*

*“கையில் குடை பிடித்து / தூரத்தில் அவள் வருகை...” நாயகியாகத் திருமதி குமுதம் அவர்களின் வருகை!*

*இவ்வாறு, காதல் பக்கங்களை கவிநய வடிவத்தில் காட்டுகிறார் ஆசிரியர்.*

*அடுத்து, தமிழ் இலக்கணம் பற்றி ஒன்று:*

*பொய்யாக்குளம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இதன் விவரங்களுடன், நம் ஆசிரியரின் 23ஆம் வயதில் இங்கு நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறுகிறார்.*

*அடுத்து, 'அரிநமோத்துச் சிந்தம்' என்றொரு சொல் இந்நூலில் உள்ளது. இது என்ன என்று யோசிக்க வைத்தது.*

*தமிழ்ச்சுவைக்கு இன்னொன்று, நாணேற்றி விரைந்ததும் பின், விசை குறைந்து தயங்கியதையும் கூறும் காரணமும் என்ன?*

*“அன்று “வில்” நீங்கி*
*விசை பெற்ற அன்பெனவே*
*விரைந்து எழுத முனைந்த*
*பேனா முனை*
*இன்று நின்று தயங்குகின்றது”*

*நம் நூலாசிரியர், அக்காரணத்தை விளக்குகிறார்.*

*மொத்தத்தில் நம் நூலாசிரியரின் அகவை 75 ஆனாலும், அவருள் குழந்தைமை கூடிய சிறுவன் ஒருவன், வாலிபன், காதலன், கணவன், தந்தை, சமூகச் சிந்தனையாளன், கலைஞன் என்று பன்முகங்களைக் காணலாம். அவற்றை, இந்தப் படைப்பு, தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. அதன் மூலம் வாழ்விற்குத் தேவையான நம்பிக்கையை விளக்காக்குகிறது.*

*தான் பெற்ற மகளுக்கு, ஒரு வாழ்க்கைத் தேனீயாக, ஆவணத் தேன்கூண்டை அளித்துள்ளார் தேசிய நல்லாசிரியர், கலைமாமணி ப. முருகேசன் அவர்கள். இந்த வற்றா அன்பு அனுபவக் கூண்டு, சிக்குவதற்கு இல்லை! வாழும் எவருக்கும் சிறகடித்துப் பறக்க வழி சொல்லும் கூண்டு!*

*நிறைவாக, இந்நூலானது, வறுமையில் செம்மை, முயற்சி திருவினையாக்கும், தடம் மாறினாலும் திருந்தினால் பெருமை அடையலாம் என்பது போன்ற வாழ்க்கையின் நன்னெறியையும் புதுச்சேரியிலுள்ள பல்வேறு ஊர்களைப் பற்றிய தகவல்களுடன் புதுச்சேரி மக்களுடைய அக்கால வாழ்வியலும் சார்ந்து, ஒரு சிறப்பு நூலாக அமைந்துள்ளது.*

# மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின்
# நூல் விலைப்பட்டியல்

***Mob.: 7010997639***

| வ. எண் | நூல்கள் | விலை (Rs.) |
|---|---|---|
| 1. | திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில் | 200 |
| | **கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்** | |
| 2. | உன்னோடு உரையாடுதல் | 100 |
| 3. | காதல் மொழி | 80 |
| 4. | பார்வையில் பூத்த நிலா | 100 |
| 5. | தேனடையும் வரலாறு | 100 |
| 6. | நுண்கலை மருத்துவன் | 200 |
| 7. | தொடரும் புழுதிக்கால்கள் | 100 |
| | **முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்** | |
| 1. | வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். | 200 |
| 2. | எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம் | 200 |
| 3. | சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்) | 200 |
| 4. | வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட | 200 |
| 5. | மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். | 200 |
| 6. | எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி | 200 |
| 7. | எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி | 200 |
| 8. | ஒளி விளக்கு எம்.ஜி.ஆர். | 200 |
| 9. | வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I | 200 |
| 10. | நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I] | 200 |
| 11. | பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II] | 200 |
| 12. | இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். | 200 |
| 13. | முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன் | 200 |
| 14. | இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர். | 200 |
| 15. | எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு | 200 |
| 16. | படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு | 200 |
| 17. | Unique Fandom of MGR | 200 |
| 18. | எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம் | 200 |
| 19. | எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I | 200 |
| 20. | எங்க வீட்டுப்பிள்ளை | 200 |
| 21. | எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும் | 200 |

***முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்***

| | | |
|---|---|---|
| *1.* | *தலைமை பொறுப்பேற்கலாம்* | *120* |
| *2.* | *இணையத் தமிழ்* | *150* |
| *3.* | *ஊடகச் சட்டங்கள்* | *250* |
| *4.* | *ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்* | *200* |
| *5.* | *கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)* | *100* |
| *6.* | *மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)* | *50* |

***சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்***

| | | |
|---|---|---|
| *1* | *பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)* | *200* |
| *2.* | *பெண் தெய்வ வழிபாடு* | *200* |
| *3.* | *தேவேந்திரன்* | *200* |
| *4.* | *மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)* | *200* |
| *5.* | *இரு நிலத்தில் திருமுருகன்* | *200* |
| *6.* | *முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)* | *200* |
| *7.* | *வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்* | *200* |
| *8.* | *யானைக்கடவுள்* | *200* |
| *9.* | *பெண் பூப்பின் புனித வழிபாடு* | *200* |
| *10.* | *பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்* | *300* |
| *11* | *வழிபாட்டின் வேர்களைத் தேடி* | *300* |

***சமய விளக்க நூல்கள்***

| | | |
|---|---|---|
| *1* | *சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)* | *300* |
| *2* | *விரதங்களின் விளக்கம்* | *200* |

***முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்***

| | | |
|---|---|---|
| *1.* | *பாடுபொருளும் பாசப்பொருளும்* | *250* |
| *2.* | *"பூ மர நிழலி"ன் களமும் காலமும்* | *200* |
| *3.* | *"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு* | *100* |
| *4.* | *கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்* | *100* |
| *5.* | *பயணக் கவிதைகள்* | *100* |

***ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி***

| | | |
|---|---|---|
| *1.* | *எட்டுத்திக் கும் செல்வீர்* | *200* |
| *2.* | *அவன் கடவுளுக்கு நிகரானவன்* | *200* |
| *3.* | *செக்கச் சிவந்த ரோஜா* | *200* |
| *4.* | *கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"* | *200* |
| *5.* | *கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"* | *200* |
| *6.* | *மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)* | *200* |
| *7.* | *கவிதை மொழிபெயர்ப்பு* | *200* |
| *8.* | *நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)* | *300* |
| *9.* | *மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்* | *200* |

| | | |
|---|---|---|
| *10.* | *Translating Tamil poetry* | *300* |

**சிறு கதை நூல்**

| | | |
|---|---|---|
| *1.* | *அமராவதியின் காதல் - சத்யப்பிரபா* | *120* |
| *2.* | *ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)* | *100* |
| *3.* | *மகிழ் பேரின்பம் (poems)* | *200* |
| *4.* | *பொன் வேலி (poems) நூல்கள்* | *200* |
| *5.* | *திருக்குறள் கதைகள் - பகை மாட்சி* | *100* |

**தே.ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி**

| | | |
|---|---|---|
| *1.* | *Emerging Mallarism* | *100* |
| *2.* | *Festival of lord Indra* | *250* |
| *3.* | *Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)* | *200* |
| *4.* | *Re reading of Pallu literature (in print)* | *300* |
| *5.* | *Mallariyan Literature (in print)* | *200* |
| *7.* | *Frontyard without My Dad (Poem)* | *200* |
| *2.* | *Emerging Mallarism* | *100* |

***English Novel Part***

| | | |
|---|---|---|
| *1.* | *Aranyani – Vijeni* | *300* |
| *2.* | *Genetic traits of Vengai anchor by Tamilmagan* | *250* |
| *1.* | *Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)* | *500* |

***Tamil Classics in English (Selected Poems)***

| | | |
|---|---|---|
| *1.* | *Ainkurunuuru* | *200* |
| *2.* | *Kurunthokai* | *200* |
| *3.* | *Puranaanuuru* | *200* |
| *4.* | *Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)* | *300* |
| *5.* | *A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)* | *300* |
| *6.* | *Songs of Classic Tamil Poetess Avvai* | *300* |

***Didactic Literature***

| | | |
|---|---|---|
| *1.* | *Naaladiyaar* | *200* |
| *2.* | *Aacharak Kovai* | *200* |

***Medievel Literature***

| | | |
|---|---|---|
| *1* | *A peasant with two wives (Mukoodal Pallu)* | *300* |
| *2* | *A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)* | *300* |
| *3* | *One line guidelines in Tamil* | *200* |

**திருக்குறள் ஆய்வுநூல் வரிசை**

| | | |
|---|---|---|
| *1* | உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள் | *200* |
| *2* | வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள் | *200* |

## *Sangam Classics in Modern Tamil*

| | | |
|---|---|---|
| *1.* | குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்) | *200* |

## *Studies on Tamil Grammar*

| | | |
|---|---|---|
| *1.* | தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள் | *300* |

**ஜோதிட நூல்கள்**

| | |
|---|---|
| *1.* | மேஷ ராசி சூட்சும ரகசியம் |
| *2* | ரிஷப ராசியின் சூட்சம ரகசியம் |
| *3* | நவரத்தினமும் உபரத்தினமும் |
| *4* | மிதுன ராசியின் சூட்சம ரகசியம் |

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

**நூல் ஆய்வுரை**

# புறாக்கள் மறைந்த இரவு

**விதீயா மனோகரீ**
**வல்லினச் சிறகுகள்**

*நூல்: புறாக்கள் மறைந்த இரவு*
*ஆசிரியர்: பழநிபாரதி*
*வெளியீடு: குமரன் பதிப்பகம்*

## பகுதி 1

*சமகால சமூகத்தின் முரண்களைத் தனித்துவ நடையில் குறியீட்டு மொழியின் மூலம் வெளிப்படுத்தும் படைப்பாளியாக இயங்கிக்கொண்டிருக்கும் கவிஞர் பழநிபாரதியின் "புறாக்கள் மறைந்த இரவு" என்னும் இக்கவிதைத் தொகுப்பு மனித வாழ்வின் உரிமைகள், அமைதி, சுதந்திரம், மனித மதிப்புகள் ஆகியவை அழிந்துவிடும் ஒரு சமூக இருளை மிக ஆழமாகப் பதிவு செய்கிறது. எளிய நடையில், ஆழமான அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிப் படைக்கப்பட்டிருக்கும் இத்தொகுப்பு கவிஞரை சமூக அக்கறை கொண்ட மனித நேயம் மிகுந்த மனிதராக உயரத்தில் ஏற்றி வைக்கிறது என்றால் அது மிகையல்ல. உருவகங்களின் வழியே சமூக வன்முறையை விமர்சிக்கும் உத்தி கவிஞருக்குக் கைகூடியிருப்பதும் இத்தொகுப்பின் வெற்றிக்கொரு காரணமாகிறது.*

*இக்கவிதைத் தொகுப்பின் தலைப்பு ஆழ்ந்த உட்பொருள் கொண்டது. புறா என்பது பொதுவாக அமைதி, மனிதநேயம் இவற்றின் அடையாளமாகக் கருதப்படும் பறவை. ஆனால் அவை மறைந்து போகும் இரவு என்பது, நமக்குள் பேரதிர்ச்சியை அச்சத்தை உண்டாக்குகிறது. அமைதி என்பது எல்லா சூழலிலும் நிம்மதியைத் தரும் என்று சொல்வதற்கில்லை. பேச வேண்டிய இடத்தில் பேச முடியாமல் அச்சத்தில், நடுக்கத்தில் வாயடைத்து அல்லது வாயடைக்கப்பட்டு அமைதியாக நிற்கும் சூழல் துயர்மிகுந்தது. சமூகத்தில் மனித குரல்கள் அடக்கப்படும் சூழலைச் சுட்டுகிறார் கவிஞர் பழநிபாரதி. இயல்பான அமைதி நிலவ வேண்டிய இடத்தில் வலிந்து திணிக்கப்பட்டிருக்கும் மௌனத்தை உரக்கப் பேசுவதே இக்கவிதைத்*

தொகுப்பின் அடிப்படை நோக்கம் என்பதே என் புரிதல். அந்த மௌனமே மொழியாகி கவிதையாகி வாசிப்போர் உணர்வுகளைத் தட்டியெழுப்புகிறது.வாசகர்கள் உள்ளத்தில் பல வினாக்களை விதைக்கிறது. குறிப்பாக, "புறாக்கள் ஏன் மறைந்தன?" "ஏன் மனித வாழ்வின் நிம்மதியும் அமைதியும் பரிக்கப்பட்டன? போன்ற கேள்விகளுக்கு விடை தேடவும் வைக்கிறது.

ஆதிக்க அதிகாரம், வன்முறை, ஆகியவை மேலோங்கும்போது சாதாரண மனித வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைக் கவிஞர் இத்தொகுப்பின் வழி வெளிப்படுத்தியுள்ளார்.மனிதர்கள் பேசத் தயங்கும் காலமென்பது எவ்வளவு கொடுமையானது! இங்கு பேசப்படும் இரவு என்பது இயற்கையான இருளல்ல; சமூக இருள். அந்த இருளில் வாய்மையும் , நேர்மையும் ,நீதியும், மனிதநேயமும் மறைந்து விடுகின்றன.

குஜராத் கலவரங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட கவிதையின் மொழி வலிமையானது. மத வெறியும் அரசியல் வன்முறைகளும் தலைவிரித்தாடும் போது கவிஞனின் மொழி நடை கடுமையானதாக மாறிவிடுகிறது.

"கர்ப்ப வயிறுகளிலிருந்து
குழந்தைகளை
கல்லறைகளிலிருந்து
பிணங்களைத்
தோண்டித் தோண்டி
மதக்குறி போடுகின்றன
சூலக் கைகள்"

இதில் கர்ப்ப வயிறு - கல்லறை, பிறப்பு - மரணம் போன்ற பதங்கள் முக்கியமானவை. மதவெறியால் கடந்தகாலமும் எதிர்காலமும் சூறையாடப்படுவதைச் சுட்டுகின்றன.

"பாதிக்கப்பட்டவர்களின்
கண்ணீர்
இருட்டின் ஆழத்தில்
இறுகிக் கொண்டிருக்கின்றன
வைரங்களாக
வெட்டி எடுக்கும் நாள்
வெகு தூரத்தில் இல்லை."

இது மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பகுதி. பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீர் வைரமென இறுகி நாளை அதுவே வரலாறாக மாறி வெடிக்கும் காலம் விரைவில் வரும் என்பதான ஓர் எச்சரிக்கையுடன் முடிந்துள்ளது. இதுவே இக்கவிதையின் உச்சம்.

"போரில்

அனாதைகளான
பெண்களின் கண்ணீரைப் போல்
கொட்டித் தீர்த்தது மழை
உறவுகள் சிதற
நாங்கள் ஒதுங்கிய
பாழடைந்த மண்டபத்தில்
முகம் காணமுடியாத இருட்டு
உணர்த்தியது
அகதிகளின் இரவு
எவ்வளவு கனமானது".

படிமங்களும் உவமைகளும் இழைந்தோடும் இக்கவிதையில் பயின்றுவரும் "முகம் காண முடியாத இருட்டு" என்ற வரி வலியைக் கடத்துகிறது. அகதிகள் யாவரும் முகம் அற்ற மனிதர்களாக, வெறும் எண்ணிக்கைகளாக மாறும் அரசியல் அவலத்தைப் பேசுகிறது. கடினமான சொற்கள் ஏதுமில்லாத கவிதையில் மௌனத்தின் குரலே வலிமையாக ஒலிக்கிறது. "அகதிகளின் இரவு எவ்வளவு கனமானது"

என்ற வரியை வாசிக்கும் போது, கொடிய இரவை நகர்த்திக் கொண்டு நடக்க வேண்டிய மனிதர்களின் துயரம் நம் மனத்தையும் பற்றிக் கொள்கிறது.

இவ்வாறாக, இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில், சொற்களின் கட்டமைப்பென்பது வியப்பூட்டும் வகையில் நேர்த்தியாகவும் அர்த்தச்செறிவோடும் அமைந்துள்ளன. அவற்றுள்

ஆழமான அரசியல் சிந்தனைகள் மறைந்துள்ளன.

சொல்ல வந்த கருத்தைக் குறியீடுகள் மற்றும் உருவங்கள் மூலமாக மிக அழுத்தமாகப் பதிவு செய்திக்கிறார் கவிஞர். இருள் ,மௌனம்,பறத்தல் போன்றவற்றை முறையே ஒளி,குரல்,மறைவு என்ற முரண்கள் மூலம் சமூக நிலைப்பாடுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.வாசகரைச் சிந்திக்க வைக்கும் இத்தொகுப்பு

சமகால சமூகத்தின் அமைதி இழந்த நிலையை ஆழ்ந்து விமர்சிக்கும் மிக முக்கியமான படைப்பாகும். மனிதநேயத்தை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தும் காலத்தின் குரலாக இக்கவிதைகளைப் படைத்திருக்கும் முன்னோடிக் கவிஞருக்கு அன்பின் வணக்கமும் ஆயிரம் வாழ்த்துகளும்.

# நூலாய்வு – கவிதையில் காதல்

**முனைவர் தே. ஞானசேகரன்**
**மேனாள் தமிழ்த் துறைத் தலைவர்,**
**பாரதியார் பல்கலைக் கழகம், கோவை**

## காதல் உள நூல்

காதல் விந்தையான உணர்வு. வியப்பான அனுபவம். இந்த உலகம் இயங்குவதே ஆண், பெண் காதலால்தான் என்றும் சொல்லப்படுகின்றது. இது உண்மைதான். கவியரசு வைரமுத்துவின் வரிகளில் சொல்வதென்றால் ''காதல் மட்டும் இல்லையின்னா பூமியிங்கு சுத்தாது'' தான். காதலைப் பாடாத கவிஞர்களும், இலக்கியங்களும் உலகில் எங்குமே காணமுடியாது. காதல் எப்போதும் ஒரு விருப்பத் தேர்வுதான். ஆனாலும்கூட ஆண், பெண் உறவின் உளவியல் மாற்றங்களை இப்படியானதுதான் என்றும் வரையறுத்து விடவும் முடியாது. கண்ணை மூடிக் கொண்டே பார்க்கவும், நடந்து கொண்டே பறக்கவும், பறந்து கொண்டே மிதக்கவும் காதல் மனதால் மட்டுமே முடியும். இது மரபு ரீதியாக வடிவமைக்கப்பட்ட உள்ளுணர்வு சார்ந்த புணர்ச்சி நடத்தை. ஒரு மனச்சாயல். அதுதான் காதலை அர்த்தமுள்ளதாக்குகிறது. அதிகாரம் செலுத்தி நம்மால் அன்பையோ அல்லது காதலையோ பெறமுடியாது. அடுத்தவரால் நேசிக்கப்பட வேண்டும் என்ற விருப்பம்தான் மனிதகுலம் தழைத்திருப்பதற்கான ஜீவ ஆதாரமாகும். அத்தகையத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டதுதான் காதலும் திருமணமும் ஆகும். திருமணத்திற்குப் பின் ஆணும் பெண்ணும் ஒரே சதையாக மாறிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. இரண்டு உயிர்களும் ஓர் உயிராகின்றன. இந்த இரு உயிர்கள் ஒன்றுடன் ஒன்று சேரத் துடிக்கும் பரிதவிப்புதான் காதல் என்று சொல்லப்படுகின்றது. காதல் சொல்லும் போதும் சுகம், காதலில் விழுவதும் சுகம், காதலராக வாழ்வதும் சுகம். இது எல்லோருக்கும் எளிதில் கை கூடுவதில்லை. கைகூடியவர்கள் அதிஷ்டசாலிகள். கைகூடாதவர்கள் சபிக்கப் பெற்றவர்கள். காதல் எப்போதும் சுகமான உணர்வுதான். அதனால்தான் காதலால் மானுடம் தழைக்குமென்று பாடினான் மகாகவி பாரதி. காதலில்லா உலகில் மானுடம் செழிக்காது.

இந்த நூல் ஒரு வகையில் ஆண், பெண் இருவரின் மனதை கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளைக் கொண்டு ஆராய்கின்றது. மனித வாழ்வின் மிகப்பெரிய சிக்கலாக இருப்பது பெண்ணின் மனநிலையை ஆண் புரிந்து கொள்ள முடியாததுதான். ஆணைப் போன்று பெண் ஒரு விஷயத்தை நேரடியாகப் பேசுவதில்லை. அவள் மனதில் என்ன இருக்கின்றது என்பதைப் புரிவதில் ஆண் வர்க்கம் காலங்காலமாய் கஷ்டப்பட்டே வந்திருக்கின்றது. உடலளவில் ஆண் வேறு, பெண் வேறு என்பதோடு, உளவியல் அடிப்படையிலும் ஆணும் பெண்ணும் வேறு வேறுதான். இந்த வேறுபாடுகளை இருவரும் சரியாகப் புரிந்து கொள்ளும் நிலை அவர்களின் உள்ளத்தில் உள்ளது. இந்த உள்ளம் தொடர்பானதைத்தான் தொல்காப்பியர் அகத்திணை என்பார். அகத்திணை என்பதற்கு உள்ள ஒழுக்கம் என்று பெயர். அக இலக்கியத்தில் தலைவன் தலைவியின் அக ஒழுக்கம் பேசப்படுகிறது. இந்த நூலில் இடம்பெற்றுள்ள முதல் இயலான கவிதைகளில் காதல் சிறப்பு எனும் இயல் தொல்காப்பியம் முதல் முத்தமிழ் விரும்பியின் கவிதை வரை இடம்பெற்றுள்ள காதல் சிறப்பை ஆராய்கின்றது. இந்த இயல் காதல் என்றால் என்ன? அதன் வகைகள் எத்தனை என்பது வரை விரிவாக விளக்குகின்றது. மேலும் இந்த நூல் ஒருவகையில் ஆண், பெண்ணின் மனதை ஆராயும் உளவியல் நூல் போன்றுள்ளது என்றால் மிகையன்று.

## ஆண் - பெண் உளவியல் வேறுபாடு

பொதுவாகவே ஆண்கள் பெண்ணிடம் தான் வாக்குக் கொடுத்தபடி நடக்காத போது; பெண் ஊடல் கொள்கிறாள். அந்தப் பொய்யான கோபம் அக வாழ்வில் சுவையூட்டுமென்றாலும் சில நேரங்களில் இவை நீட்டிக்கப்படும் போது அதனைத் தீர்க்கத் தோழி போன்ற வாயில்கள் தேவை என்று நம்முன்னோர் கருதியதே வாயில்கள் என்ற கருத்தாக நாம் கருத முடிகிறது. ஆண் தன்னால் ஒன்றைச் சொல்லியபடி செய்ய முடியாத போது பொய்யைத்தான் அவனால் சொல்ல முடிகிறது. இந்த ஆண் உளவியல் பற்றி ஆலன் & பார்பரா பீஸ் *(Allan & Barbara Peace)* ஆண்கள் ஏன் பொய் சொல்கிறார்கள், பெண்கள் ஏன் அழுகிறார்கள் *(Why men lie, women cry)* என்ற நூலில் ஆண், பெண் வேறுபாடு குறித்து நிறையப் பேசுகிறார்கள். இந்நூலில் இடம்பெறும் கருத்துக்கள் ஆண், பெண் உளவியலைப் புரிய நமக்கு உதவும். இவற்றில் சில வருமாறு.

ஆண்கள் தாங்கள் எடுக்கும் எந்த முயற்சியிலும் தோல்வியடையும் நிலையை அடைவதற்குத் தயாராக இல்லாதபடி அவர்களின் மூளை வடிவமைக்கப்பட்டுள்ளது. வேட்டையாடி உணவுடன் வருவேன் அவனைச் சண்டையில் ஜெயிப்பேன். உன்னைக் கண் கலங்காமல் காப்பாற்றுவேன். என்னால் செய்ய முடியாதது எதுவும் இல்லை என்றெல்லாம் பேசும் படியாகவே அவர்கள் பரிணமித்துள்ளனர். அவர்களால் தோல்வி என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. வானத்தை வில்லாக வளைப்பேன், மணலைக் கயிறாகத் திரிப்பேன், உனக்காக உயிரையும் விடுவேன் என்றெல்லாம் பேசுவார்கள். இவையெல்லாவற்றிலும் உண்மையிருக்காது. இருப்பினும் ஆணுக்கு இது தேவையாயிருக்கின்றது. அவனால் முடியாத போது பொய் கூறும்படிதான் அவன் மூளை வடிவமைக்கப்பட்டுள்ளது. நூறு வாக்குறுதி கொடுத்து ஒன்றைக்கூட

நிறைவேற்றாவிட்டாலும் 101 வது வாக்குறுதி கொடுக்க ஆணின் மூளை யோசிப்பதில்லை. பெண்ணைச் சமாளிக்க அவன் பொய் சொல்லித்தான் ஆக வேண்டும். அவனுக்கு வேறு வழியில்லை. எனவே அவன் பொய் சொல்கின்றான்.

## ஆண் - பெண் வேறுபாடுகள்

| ஆண் | பெண் |
|---|---|
| ஆண்கள் வேட்டையாடுபவர்களாகவும், விரட்டுபவர்களாகவும், பாதுகாப்பவர்களாகவும் பொருள் ஈட்டித் தருபவர்களாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளனர் | பெண்கள் குழந்தை பெறுபவர்களாகவும் தமது கூடுகளைக் காப்பாற்றுபவர்களாகவும் பரிணமித்து உருவெடுத்துள்ளனர். |
| ஆண்கள் ஒரு நாளைக்கு 2000 முதல் 4000 வரை சொற்களைப் பேச முடியும். | பெண் ஒரு நாளைக்கு 6000 முதல் 8000 வரை சொற்களைப் பேச முடியும் |
| ஆண்களின் மூளைகள் தீர்வை மையம் கொண்டவை | பெண்களின் மூளைகள் செயல்பாட்டை மையம் கொண்டவை. |
| ஆண்கள் பேசுவது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மட்டுமே | ஒரு பெண் பேசுவதற்கான முக்கியக் காரணம் பேசுவது மட்டுமே. |
| ஆண்களால் ஒரு சமயத்தில் ஒரே ஒரு செயலை மட்டுமே செய்ய முடியும். | பெண்களால் ஒரே சமயத்தில் பல வேலைகளைச் செய்ய முடியும். |

## ஆண்களுக்குக் காமம் தேவை. பெண்களுக்குக் காதல் தேவை.

| | |
|---|---|
| ஆணின் உலகம் சண்டைகளாலும், சாவுகளாலும் நிறைந்திருக்கின்றது. | பெண்ணின் உலகம் கருணையாலும், அன்பாலும் நிறைந்திருக்கின்றது |
| ஆண்கள் வேலையை மதிப்பவர்கள் | பெண்கள் உறவை மதிப்பவர்கள். |
| உணர்ச்சிவசப்பட்ட ஆண் பாம்பு போல் சீறி விடுவான் | உணர்ச்சிவசப்பட்ட பெண் நிதானமாக அதைப் பற்றிப் பேசுவதையே விரும்புவாள். |
| ஒரு ஆண் தன் வேலையில் சந்தோசமின்றி இருந்தால் அவனால் தன் உறவுகளில் கவனம் செலுத்த முடியாது | ஒரு பெண் தன் உறவுகளில் சந்தோசமின்றி இருந்தால் அவளால் தன் வேலையில் கவனம் செலுத்த முடியாது. |
| காமத்தில் ஆண் காலியாக்க விரும்புகின்றான் | பெண் நிரப்பிக் கொள்ள விரும்புகிறான். |

இப்படியாக ஆண் பெண் வேறுபாடுகள் குறித்துப் பேசும் நூலின் இறுதியில் இப்படிச் சொல்லப்பட்டுள்ளது.

பெருமளவு பால்வேறுபாடுகள் இருந்தாலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே உறவுகள் நன்கு மலர்கின்றன. இதற்குப் பெரும்பாலான காரணம் பெண்களே. காரணம் உறவையும் குடும்பத்தையும் நிர்வகிக்க வேண்டிய திறமைகள் அவர்களிடம் உள்ளன. பேச்சிற்கும் நடத்தைக்கும் பின்னுள்ள உள்காரணத்தைக் கண்டறியும் திறமை

அவர்களிடம் இருப்பதால், அவர்களால் விளைவுகளை முன்கூட்டியே கூறமுடியும். பிரச்சனைகளைத் தவிர்க்க முன்னேற்பாடுகளைச் செய்ய முடியும். இதனால் ஒவ்வொரு நாட்டின்தலைவராகவும் ஒரு பெண் இருந்தால் உலகமே பாதுகாப்பான இடமாகிவிடும். உணவைத் தேடவும், வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் வழியைக் கண்டறியவும், கணப்பை வெறிக்கவும், சந்ததியை உற்பத்திச் செய்யவும் மட்டுமே ஆண்கள் இலாயக்கு. பெண்களைப் போலவே நவீன காலத்தில் வாழத் தேவையான புதிய வழிகளை அவர்கள் கற்றுக் கொண்டே தீர வேண்டும்.

தாங்கள் உயிரியல் ரீதியாக வேறுபட்டவர்கள் என்பதை ஆணும் பெண்ணும் ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது அடுத்தவர் தங்கள் எதிர்ப்பார்ப்பிற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதாலும்தான் உறவுகளில் சிக்கல்கள் வருகின்றன. உறவுகளில் நாம் அனுபவிக்கும் மன அழுத்தங்களில் பெரும்பகுதி ஆணும் பெண்ணும் சமம். அவர்கள் இருவருக்கும் ஒரே முக்கியத்துவங்கள், உந்தல்கள், ஆசைகள் இருக்கின்றன என்ற மெய்யான நம்பிக்கையினாலேயே ஏற்படுகிறது.

மனித சரித்திரத்தில் முதல்முறையாக ஆணையும் பெண்ணையும் நாம் ஒரே வழியில் வளர்க்கிறோம். படிக்க வைக்கிறோம். அவர்கள் இருவரும் ஒன்றே. இருவரின் தகுதிகளும் ஒன்றுதான் என்று கற்றுத் தருகிறோம். பிறகு அவர்கள் வளர்ந்தபின் திருமணமாகி ஒரு நாள் அவர்கள் கண்விழிக்கும் போது எல்லா வழிகளிலும், வடிவங்களிலும், அமைப்புகளிலும் இருவரும் வேறுவேறு என்பதை உணர்கிறார்கள். இதனால் இளைஞர்களின் உறவுகளும் திருமண வாழ்வும் பரிதாபமான நிலையில் இருக்கின்றன. ஆணும் பெண்ணும் ஒன்றே என்று கூறும் எந்தக் கொள்கையும் அபாயகரமானதே. காரணம் வேறுபட்ட மூளை அமைப்புள்ள ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்று அது நிர்பந்திக்கிறது. சில சமயம் ஏன் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இப்படி ஒரு பொருத்தமின்மையை இயற்கை உருவாக்கியது என்று புரியாமல் குழம்புகிறோம். ஆனால் இப்படி தோன்றுவதற்கு காரணம் நமது உயிரியல் இன்றைய சூழலோடு முரண்படுவதுதான். இந்த வேறுபாடுகளின் மூலக்காரணத்தை நீங்கள் புரிந்து கொண்டுவிட்டால், இவற்றோடு வாழ்வது உங்களுக்கு எளிதாவது மட்டுமின்றி, அவற்றை நீங்கள் நிர்வகிக்கலாம், பாராட்டலாம், சந்தோசப்படலாம். இந்தப் புரிதலை இந்த நூல் தனக்கான தனித்தன்மையுடன் மிக விரிவாகச் சொல்லியுள்ளது என்பது என் கருத்து.

முனைவர்
செ. ராஜேஸ்வரி
நூலாசிரியர்

பெண்கள் ஏன் நிறையப் பேசுகிறார்கள். இவர்களுக்கு ஈடுகொடுத்து ஆண்களால் ஏன் பேச முடியவில்லை. பெண்களால் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய முடிகிறது. ஆனால் ஆண் ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டுமே செய்ய முடியும். காதலையும் அன்பையும் எதிர்பார்த்தே ஒரு பெண் ஒரு ஆணுடன் நட்புக்

கொள்கின்றாள். ஆனால் ஆண்கள் காமத்திற்காகவே ஓர் உறவில் நுழைகிறார்கள். பிறகுதான் உறவின் சாத்தியங்களை ஆராய்கின்றார்கள். ஆண், பெண் உறவில் பெண் காதலையும் அன்பையுமே கூடுதலாக எதிர்பார்க்கின்றாள். ஆனால் ஆணுக்கு அதற்கான நேரம் இல்லை. ஆணின் மூளை வினையாற்றுவதில் (வேலை செய்தல்) அதாவது உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், பொருள் தேடுதல் என்று வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆண்களில் எண்பத்தேழு சதவிகிதத்தவர் தங்கள் வாழ்வில் வேலைதான் மிக முக்கியமானது என்ற எண்ணமுடையவர் ஆவர். இதனை ''வினையே ஆடவர்க்கு உயிர்'' என்றும், ''உத்தியோகம் புருஷ இலட்சணம்'' என்றும் நாம் இலக்கணப்படுத்தி வைத்திருக்கின்றோம். வேலை எனும் ஆணுக்கான இந்த மூளை வடிவமைப்பே ஆண், பெண் உறவில் மிகப் பெரிய சிக்கலை உண்டு பண்ணுவதற்கான ஒரு காரணி என்று இன்றைய உளவியல் சிந்தனை சொல்கின்றது. பெண்ணின் மூளை வீட்டைப் பராமரிப்பதற்கும், குழந்தைகளையும் உறவுகளையும் பேணுவதற்கான வடிவமைப்பைப் பெற்றது. ஆக, பெண் தன்னை ஒரு ஆண் எப்படியெல்லாம் பராமரித்துப் போற்ற வேண்டுமென்று நினைக்கின்றாள் என்பதை ஒரு ஆணால் மிக எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. அதனால்தான் அவளுக்குப் பிடிக்குமென்று அவளைப் பொய்யாகப் புகழ்கின்றான். ஏராளமான பரிசுகள் தருகின்றான். அவளுக்காக நேரம் செலவிடுகின்றான். ஆனாலும் அவளை நிரந்தர அன்பில் வைத்திருக்க அவனால் முடியவில்லை.

பெண்ணின் உள்ளம் கடலைவிட ஆழமானது, அறிந்து கொள்ள முடியாதது என்றெல்லாம் தெரிந்திருந்தாலும் அவளைத் திருப்திப்படுத்த முயன்று தோற்றுத்தான் போகின்றான். இந்தத் தோல்வியை ''ஊடல்'' என்று அக இலக்கியம் கொண்டாடும். ஊடல் என்பதை நாம் பொய்யான கோபம் என்று புரிந்து வைத்துள்ளோம். தலைவியிடம் ஏற்படும் இந்த ஊடலைத் தீர்க்கத் தலைவனிடம் போதுமான அதாவது நேரடியான மொழித்தளம் இல்லை. காரணம் அவளது ஊடல் எதற்கு என்றே! அவனால் அறிந்து கொள்ள அவளின் உள்ளம் தெரிந்து அவளைப் புரிந்து கொள்ள முயல்கின்றான். தலைவன், தலைவி ஆகியோரின் கருத்து வாயிலாகத் தோழி திகழ்கின்றாள். தோழி தவிர பாணன், விறலி போன்றோரும் வாயில்களாகச் சங்க இலக்கியத்தில் வருகின்றனர். இந்த மரபு இன்றும் தொடர்கிறது என்றுதான் சொல்ல வேண்டும் எல்லாக் காதலர்களுக்கும் தோழியும், தோழனும் (பாங்கன்) இருக்கவே செய்கின்றனர். சூழல்கள் மட்டுமே மாறியிருக்கின்றன. தினைப்புனத்திற்குப் பதில் கல்லூரி, அலுவலம், பேருந்து நிலையம், இரயில் நிலையம் என்று காதல் களம் மாறியிருக்கின்றன. ஆனால் காதல்

முத்தமிழ் விரும்பி, பொறிஞர் கவிஞர்

எப்போதும் பழையதே. இப்பொழுதும் கூட ஒருவனை நேசித்த ஒரு பெண் இன்னொருவனை சிந்தையாலும் தொடாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தன் மனம் கவர்ந்த பெண்ணுக்காய் எதையும் செய்யத் துணியும் தலைமகன்கள் நிறையவே உண்டு. இந்தக் காதல் மரபின் வெளிப்பாடுகள் இக்கால காதல் கவிதைகளில் நிறையவே காணப்படுகின்றன. முத்தமிழ் விரும்பியின் கவிதைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இவரின் கவிதைகளில் காதல் இன்னமும் வைரத்தின் கூர்முனையாய் ஜொலிக்கவே செய்கின்றன. இந்தக் காதல் ஜோதியை இன்னமும் ஆயிரம் நிலவாய்ச் சேர்த்து ஒளிரச் செய்திருக்கிறார் முனைவர் செ. இராஜேஸ்வரி.

இந்த நூலில் எட்டுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எட்டும் அதனதன் தளத்தில் ஆகச் சிறந்தனவதான். நிறைய ஆங்கிலக் கவிதைகளோடு முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் ஒப்பீடு செய்து காட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்நூல் உளவியல் ஆய்வைத் தாண்டி ஒப்பீட்டு ஆய்வாகவும் இயல்பாகவே அமைந்து விடுகிறது.

இந்த நூலின் தனித்த சிறப்பு எதுவென்று பார்த்தால் மனித மனத்தை விளக்கி, அதனைப் புரிந்து கொள்ள வைப்பதுதான். மனித மனம் ஆச்சரியமானது. அது எதை விரும்புகிறது எதற்கு விரும்புகிறது என்றெல்லாம் நம்மால் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. காதல், நட்பு எல்லாமே ஒரு விருப்பத் தேர்வுதான். ஒரு ஆண் ஒரு பெண்ணோடு வாழ விரும்புவதும்; அவள் கிடைக்காவிடில் சாகவிரும்புவதும் ஏன் என்று இன்றுவரை யாராலும் காரணம் கண்டு சொல்ல முடியவில்லை சொல்லவும் முடியாது. காதலை இப்படியானது என்று வார்த்தைகளில் எப்படிச் சொல்ல முடியும். அது உள்ளத்து உணர்வு. அதனால்தான் அதனை அகம் என்று முன்னோர் சொன்னார்கள்.

இந்த நூலின் ஆசிரியர் முனைவர் செ. இராஜேஸ்வரி மனித மனத்தையும், மனித வாழ்க்கையையும் புரிந்து கொள்வதில் மிகுந்த நாட்டமுடையவர். இந்த நூலில் அவர் நினைத்திருந்ததையெல்லாம் சொல்லிவிட்டார் என்று என்னால் சொல்ல முடியாது. காரணம் அவரிடம் உள்ள தேடுதலும், ஆய்வு மனப்பான்மையும் பெரியது. இது ஒரு சிறந்த உளவியல் ஆய்வு நூல் ஆகும். ஆய்வு என்பதற்குத் தொடக்கம் மட்டுமே இருக்கின்றது. முடிவு என்பது இல்லை. அவர் தொடங்கியிருக்கின்றார். அவரிடமிருந்து இன்னமும் நிறைய எதிர்பார்க்கலாம். அவர் உலக இலக்கியங்களை ஆங்கிலத்தில் நிறைய வாசிப்பவர் என்ற வகையில் நான் இன்னமும் நிறைய எதிர்பார்க்கின்றேன். அறிவு சார்ந்த விசயங்களைச் செய்வதற்கு மிகுந்த ஈடுபாடும் இடைவிடாத முயற்சியும் வேண்டும். இவை இரண்டுமே கைவரப்பெற்றவர் முனைவர் செ. இராஜேஸ்வரி என்பதில் எனக்கு இருவேறு கருத்தில்லை. அவர் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. காலம் இவரை ஒரு சிறப்புமிக்க இடத்தில் வைத்து அழகு பார்க்கும். இந்நூல் **முத்தமிழ் விரும்பி** என்ற கவிஞனை உலகக் கவிஞரோடு இணைத்துப் பார்த்துக் கொண்டாடுகிறது. இப்படியான விருப்பு வெறுப்பற்ற திறனாய்வு நூல்கள் தமிழில் தோன்றுவது அரிது. இதை நூலாசிரியர் உடைத்துச் சரி செய்திருக்கிறார். கவிஞர் முத்தமிழ் விரும்பி, முனைவர் செ. இராஜேஸ்வரி இருவருக்குமே என் அன்பான வாழ்த்துக்கள்.

# இஸ்லாமியப் பெண் ஆளுமைகள் - கதீஜா அம்மையார்

**சம்சுல் ஹுதா பானு**
**கவிஞர், எழுத்தாளர்**

## இஸ்லாத்தைத் தழுவிய முதல் நபர் ஒரு பெண் கதிஜா (ரலி) அவர்கள்

*''பெண்மையின் சக்தி'' என்பது பெண்களின் ஆற்றல் தன்னம்பிக்கை, மற்றும் வலிமையைக் குறிக்கிறது. சத்தியம், அன்பு, தர்மம், தியாகம், பொறுமை, இரக்கம், ஆனந்தம் போன்ற ஏழு முக்கிய சக்திகளைக் கொண்டவர்களாகப் பெண்கள் போற்றப்படுகின்றனர்.*

*ஒரு குடும்பத்தின் முன்னேற்றம் அதன் அடித்தளம் பெண்தான். பெரிதுனும் பெரிது பெண்சக்தி. ஒரு பெண்தகவல் தொழில்நுட்பமோ, போக்குவரத்து வசதிகளோ இல்லாத காலத்தில் பாலைவன நாட்டில் வெற்றிகரமாக வணிகத்தில் சிறந்து விளங்கிய பெண் கதிஜா(ரலி) அவர்கள். 'ரலியல்லாஹு அன்ஹு''வின் சுருக்கம்தான் ''ரலி'' எனப் பெயருக்குப் பின்னால் வருகிறது. முஹம்மது நபிகள் நாயகத்தின் அறவுரைகளையும், அறிவுரைகளையும் தங்களது துன்பங்களைத் தாங்கி எதுவந்தபோதும் நபிகள் நாயகத்துடன் தோளோடு தோள் நின்று அறத்துடன் வாழ்ந்த நபிகளின் தோழர்கள், அறிஞர்களுக்கு மரியாதை செலுத்தும்விதமாகப் பயன்படுத்தும் சொல்லாகும். ''இறைவன் அவரைப் பொருந்திக் கொள்வானாக'' எனப் பொருள்படும்.*

*''கதிஜா நாச்சியார்'' என தமிழ் முஸ்லிம் மக்கள் கதிஜா அவர்களை அழைத்துப் பெருமைப்படுத்துகிறார்கள்.*

*வணிகத்தில் கோலோச்சிய பெண்ணாக கதிஜா நாச்சியார் இருந்தாலும், ''விதவை''யாக இருந்தார்கள். விதவையாக இருப்பதால் தனக்கு அனுதாபம் தேடி யாரையும் சார்ந்து இல்லாமல் மக்கா நகரிலிருந்து சிரியா பாரசீகம் (ஈரான்) போன்ற நாடுகளுக்கு வாணிபச் சரக்குகளை ஒட்டகங்கள் மூலமாக, ஒட்டக ஓட்டிகளையும், வணிகப் பொறுப்பாளர்களையும் அனுப்பி மக்காவில் இருந்தே நிர்வாகத்தை திறம்பட நடத்திய வணிகமேயாகத் திகழ்ந்தார். தைரியம் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உழைப்பு இந்த குணங்களை ஒருங்கே கொண்ட பெண்ணால்தான் வணிகத்தில் உயர்ந்து, செல்வத்தைப் பெருக்க முடியும்.*

அந்தக் காலத்திலேயே விதவைப் பெண்ணாக சமூகத்தில் இருந்து கொண்டே தன்னை நிலைநாட்டவது சாதாரண காரியமில்லை. காட்டரபிகளாக அரபிகள் இருந்த காலம் அது. வியாபார நீக்குப் போக்குகள், தன்னிடம் பணி செய்பவர்களைக் கட்டுக்குள் வைத்து தொழில்துறையில் திறம்பட செயல்பட்ட கதிஜா நாச்சியாரின் மனஉறுதியைப் பாராட்ட வேண்டும்.

கதிஜா நாச்சியாரின் நாற்பதாவது வயதின்போது அவரின் வணிகப் பணிகளுக்குப் பணிபுரிய முஹம்மது (நபி) அவர்களைப் புதியவராகத் தேர்ந்தெடுத்த பணிகளைச் சிறிய தயக்கத்தோடு ஒப்படைத்தார். முஹம்மதின் திறமை, உண்மை, நம்பிக்கை, உழைப்பு, நாணயத்தோடு செயல்பாடுகளைக் கண்டு மேலும் பல வணிகப் பொறுப்புகளை கதிஜா நாச்சியார் ஒப்படைத்தார்கள். தன்னிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை பொறுமையுடன் நிதானமாகக் கையாண்டு அதிகமனா தொழிலில் அதிகமான லாபத்தை முஹம்மது ஈட்டிக் கொடுத்தார்.

செல்வாக்கு நாளுக்கு நாள் பெருக, கதிஜா நாச்சியார் தனக்கான பாதுகாப்பும், தொழிலை மேலும் நிர்வாக விரிவக்கு துணை தேவை என்பதை உணர்ந்தாலும் மனதின் அடித்தளத்தில் ஒரு சின்னத் தள்ளாட்டம் ஏற்பட்டபோது முஹம்மதின் நம்பிக்கை நாணயத்தின் குணமறிந்து, தனது தனி உதவியாளர் மூலம் முஹம்மதைத் தான் திருமணம் செய்ய விரும்புவதையும் அவரின் விருப்பம், குடும்பத்தினர் விருப்பத்தைக் கேட்டுவரத் தூது அனுப்ப கதிஜா நாச்சியாரின் தனி உதவியாளரும் உங்களின் இந்த முடிவு மிகச் சரியானது. முஹம்மதுபோல் ஒரு மனிதரின் துணை உங்களுக்குக் கிடைத்தால் உங்களின் நிலை அதிகமதிகம் உயரும் எனக் கூறி மிகுந்த மகிழ்ச்சியுடன் தூது சென்றார்.

கதிஜா நாச்சியாருக்கு நாற்பது வயது, முகம்மதுவுக்கோ இருபத்தைந்து வயது, இப்படியானவயது வித்தியாசம் இருந்ததை முஹம்மது (நபி) பொருட்படுத்தவில்லை. முஹம்மதுவின் குடும்பத்தினரும் சம்மதித்து தங்களுக்கான சொத்தில் இருபது ஒட்டகங்களை மணக்கொடையாகக் கொடுக்கப்பட்டு திருமணம் சிறப்புடன் நடந்தது. முஹம்மதுவுக்கு முதல் திருமணம், கதிஜா நாச்சியாருக்கு மூன்றாம் திருமணமாகும். கதிஜா நாச்சியாரின் முதல் கணவர் இறப்புக்குப்பின் இரண்டாம் திருமணம் செய்யப்பட்டு அவரும் இறந்துவிட, 'முன்னால் கணவர்களைப் பற்றி எந்தவிதமான பேச்சுக்களே வரவிடாமல் கதிஜா நாச்சியாரின் குணநலன்களை மட்டுமே சிறப்புப்படுத்தி முஹம்மது (நபி) கதிஜா நாச்சியாருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்.

குடும்ப வாழ்விலும், வணிகத்திலும் கதிஜா நாச்சியாருக்கு உறுதுணையாக முஹம்மது (நபி) இருந்தார்கள். மனிதர்களின் குணநலக்ள், இறை வணக்க முறைகளைப் பற்றி இருவரும் மனம் விட்டுப் பேசுவார்கள். எதிலும் மாறுபட்ட கருத்துகள், சச்சரவுகள் இருவருக்கும் வந்ததுமில்லை, இல்லறம் நல்லறமாக குழந்தைகள் அடுத்தடுத்து பிறக்க ஒருவருக்கொருவர் மிகுந்த அன்பும், நேசத்துடன்

வாழ்ந்தனர். இந்தச் சூழலில் முஹம்மது (நபி) அவக்ரள் தன்னைத் தனிமைப்படுத்தி தியானத்தில் இருக்க ஆரம்பித்தபோது, தனது கணவரின் தனிமை விருப்பதைக் கேட்டறிந்த கதிஜா நாச்சியார் கணவருக்கு உறுதுணையாக இறைத் தேடலில் உள்ள கேள்வி ஞானங்களை விரிவாகப் பேசி, தன்னையும் அநத்த் தேடுதலில் இணைத்துக் கொண்டார்.

முதலில் வீட்டில் தனிமை, பின்பு அமைதியான இடம் தேடி ஊரை விட்டே தனிமை தியானம் என இருந்த முஹம்மது (நபி) சவுதி அரேபியாவின் ''ஜபல் அல் - நூர்'' எனப்படும் மலையில் உள்ள ஹிராக்குகையைத் தேர்ந்தெடுத்து அமைதியான தியானத்தைத் தொடர்ந்தார். வணிகம் பொருள் தேடுதல் என அனைத்திலும் விலகி இறைத் தேடுதலில் மூழ்கினார். ஹிராக்குகைக்கு உணவு தணணிர் எனக் கொண்டு சென்று, அந்த மலையில் கடும் வெயிலில் நடந்தே ஏறிச் சென்று கணவருக்கு கொடுத்து, தியானத்தின்போது இருக்கும் மனநிலை, மாற்றம் எனக் கணவரும் புரிந்துணர்வுடன் அளவளாவி கதிஜா நாச்சியார் வருவார்கள்.

ஒருநாள் அதிகாலை முஹம்மது (நபி) பதற்றத்துடன், கதீஜா நாச்சியாரிடம் வந்து என்னைப் போர்வையால் மூடுங்கள், எனக்கு உடல் நடுங்குகிறது எனச் சொல்ல கணவரை அமைதிப்படுத்தி போர்வையால் மூடி நடந்த விபரங்களை நிதானமாகக் கேட்டபோது, முஹம்மது (நபி) அவர்கள், தன்னை அதிகாலையில் ஒருவர் ஒளியுடன், வந்து ஆரத்தழுவி 'இக்ரா' - (படிக்கவும் - ஓதவும்) எனக் கூறினார்கள். எழுதப் படிக்கத் தெரியாத என்னை அந்த ஒளி - மனிதர் ஓதச் சொல்கிறார் என்று நடுங்கிய குரலை, சீர்படுத்திய கதிஜா நாச்சியார், ''இறையருள்'' உங்களை நோக்கி வந்துள்ளது. உங்களது தியானம், மனஓர்மை உண்மையானது. நான் நம்புகிறேன். உங்களுக்கு உறுதுணையாக இருக்கிறேன் என தைரியப்படுத்தி இஸ்லாம் மார்க்கத்தை ஏற்ற ''முதல் பெண்மணி'' கதிஜா நாச்சியார் ஆவார்கள்.

வாணிபத்தால் சம்பாதித்த தனது சொத்து சுகங்களை விற்று கணவரின் இறைத்தேடுதல், இறை வேதம் இறங்கியதை முஹம்மது (நபி) உலகுக்கச் சொல்ல அதற்கான செலவுகளை ஏற்று ''நான் இருக்கிறேன்'' என வாணிபத்தில் எத்தனை உறுதியுடன் உழைத்தார்களோ அத்தனை உறுதியுடன் ''இஸ்லாம் மார்க்கம் - உலகம் அறிய கடமையாற்றிய பெண்மணி கதிஜா நாச்சியார்.

ஆன்மீகத் தேட்டம் உள்ள கணவருக்கு தன்னையே அர்ப்பணிக்கும் விசுவாசம். தைரியம் கொடைத்தன்மை தியாகம், பலம் - ஒரு பெண்ணிடம் இருந்துதான் ஆரம்பமாகியுள்ளது. 'பெண்ணின் சக்தி' அளப்பரியது. சொர்க்கத்துப் பெண்களில் சிறந்தவர். பரிசுத்தமானவர் (தாஹிரா) புனிதமாவர் - என இரைத்தூதரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண் கதிஜா நாச்சியார்.

# வரலாற்றுத் தொல்லெச்சமான நீலிக்கண்ணீர்!

**தமிழ்மாமணி, புலவர். பூங்கொடி பராங்குசம்**

பெண்களின் கண்ணீர் பொய்யெனத் தெரிந்தால், அக்கண்ணீரை "நீலிக்கண்ணீர்" வடிப்பதாகக் கேலியாகவும் குத்தலாகவும் தமிழ்நாட்டு மக்களிடையே பேசப்படுவது உண்டு. ஆனால், இப்பேச்சு வெறும் வார்த்தையால் பிறப்பதன்று; இதற்கும் பின்னால் ஏதோ ஒரு வரலாற்றுத் தொல்லெச்சம் ஒளிந்திருப்பதை ஆய்ந்து பார்ப்பின் அறிந்து கொள்ளலாம்!

காலங்காலமாக ஆண், பெண் தெய்வங்களைக் குறிப்பிடும்போது ஆண்களை மட்டும் வீரம் பொருந்தியவர்களாகவும் ஊரைப்பாதுகாக்கும் காவல் தெய்வங்களாகவும் பேசப்படுகின்ற நிலையில், பெண் தெய்வங்கள் பெரும்பாலும் பழிவாங்குவனவாகவும், கொடூரத்தன்மை படைத்தவையாகவும் சித்தரிக்கப்படுவதைக் கண்கூடாகக் காணலாம். இதன் அடிப்படையில் தான் நீலிக்கண்ணீரில் ஒளிந்துள்ள நீலியின் கதையும் அமைந்துள்ளது!

## இலக்கியச் சான்றுகள்

நீலியின் கதையினைச் செவி வழியாகக் கேட்ட கதையாக ஒரு போதும் நினைத்தல் கூடாது. ஏனெனில், சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெரியபுராணம்

> நற்றிறம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்து உற்ற போதும் முயிரையும்
> வணிகனுக் கொருகாற் சொற்ற மெய்ம்மையும் தூக்கியச் சொல்லையே காக்கப்
> பெற்ற மேன்மையி னிகழ்ந்தது பெரும்தொண்டை நாடு!

என்று வாக்குத் தவறாத வேளாண்குடி மக்களின் சிறப்பினைத் தொண்டை நாட்டுப் பெருமையுடன் கூறுமிடத்துச் சேக்கிழார், நீலியைப் பற்றிய ஒரு வரலாற்றுக் கதையையும் குறிப்பிட்டுப் பாடியிருப்பதால், அக்கதையில் ஒரு வரலாற்றுத் தொல்லெச்சத்திற்குச் சான்றும் கிடைக்கிறது.

மற்றும், தொண்டைமண்டலப் பெருமையைப் பாடும் தொண்டைமண்டலச் சதகத்தில்:

தொண்டைமண்டலச் சதகம் - 8

> இன்னும் புக ழ்நிற்கவே ஓர் பழிக்கு ஆமற்று எழுப தின்மர் துன்னும் தழல்புக்கு
> ஒளித்ததெல்லு ஆய்வு அருதிப் பொருளாய் உன்னும் புரிசைத் திருவாலங் காட்டின்
> உரைப திகம் என்னும் தமிழில் வகுத்ததுஅன்று ஓதொண் டைமண் டலமே!

*என்னும் பாடலாலும் இக்கதையினை அறிந்துகொள்ள முடிகிறது! மேலும், இந்த வரலாறு பக்தி இலக்கியக் காலத்திற்கு மிக முற்பட்டதாகவே இருந்தது என்பதற்குக், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தரும் தம்முடைய தேவாரத்தில் பாடியுள்ளார்:*

*திருமுறை 1-45:1*

> *துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய் நெஞ்சம் புகுந்தென்னை*
> *நினைவிப்பாரு முனைநட்பாய் வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும்*
> *வகைகேட் டஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே!*

*அதாவது, முன்பொருகால் வஞ்சிக்கப்பட்ட பெண்ணொருத்தி நட்புடன் பேசி, உயிர்ப்பலி வாங்கிய கதையினைக் கேட்டுப் பயப்படும் பழையனூர் ஆலங்காட்டில் கோவில் கொண்ட அடிகளே என்று சிவபெருமானைப் பாடுகிறார் சம்பந்தர் அடிகள்.*

*இன்னும் மேலாக, இக்கதையின் வரலாற்றைத் தெளிவாக விரிவுபடுத்தி உமாபதி சிவாச்சாரியார் எழுதிய சேக்கிழார் புராணம் என்னும் இலக்கியத்திலும் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.*

*சேக்கிழார் புராணம் - 15*

> *மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிர் இழப்பத் தாங்கள்*
> *கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழு பதுபேரும் முழுகிக் கங்கை*
> *ஆரணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பர் அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின்*
> *கீழ்மெய்ப் பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால் பிரித்தளவிட் டிவளவெனப்*
> *பேச லாமோ?*

*இந்தப் பாடலில் நீலியின் கதை முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

## *நீலியின் வரலாறு*

*முன்பொரு காலத்தில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன், பரத்தையர் தொடர்பில் இருந்ததைக் கண்டித்த தன்மனைவியைக் கொன்றுவிட்டான். இறந்த அவள், பேயாகத் திரிந்து தன்னைக் கொல்லத் தொடர்வதை அறிந்த வணிகன், ஒரு மந்திரவாதியை அணுகித் தன்னைப் பாதுகாக்குமாறு வேண்டினான். மந்திரவாதி கொடுத்த ஒரு வாளை எப்பொழுதும் தன்னுடன் வைத்துக்கொண்டிருந்தான்.*

*ஒருமுறை வணிகம் தொடர்பாகத் திருவாலங்காட்டு வழியே சென்றபோது, அவனைப் பின்தொடர்ந்த நீலி என்னும் அந்தப் பேய் மனைவி தன்னைக் கொல்லப் பின்தொடர்வதை அறிந்த வணிகன், தான் வைத்திருந்த வலிமை வாய்ந்த கத்தியை எடுத்தான். அச்சப்பட்ட நீலிப்பேய் அங்கிருந்த ஒரு கரிக்கட்டையைக் குழந்தையாகவும், தன்னை ஒரு பெண் உருவம் ஆகவும் இடுப்பில் குழந்தையுடன் வணிகனைப் பின் தொடர்ந்து சென்றாள்.*

பயந்து போன வணிகனும், அந்த ஊரில் சென்று நிலைமையை எடுத்துச் சொல்லித் தன்னைப் பேய் கொல்ல வருவதாகக் கூறிக் காப்பாற்றுமாறு வேண்டினான். அவ்வூரில் எழுபதின்மர் கொண்ட குழுவினர் ஒன்று சேர்ந்து, நீலியை வழிமறித்துக் கேட்க, அவளோ வணிகன் தன்னுடைய கணவன் என்றும், பரத்தையர்பால் கொண்ட காமத்தினால் அவன் அவளைக் கைவிட்டதாகவும், மீண்டும் அவனுடன் தன்னைச் சேர்த்து வாழவைக்க வேண்டும் என்று அவர்களிடம் அழுது புலம்பினாள். ஆனால் வணிகனோ மறுத்தான்.

இந்நிலையில் நீலியின் இடுப்பிலிருந்த குழந்தையோ அவனைக் காட்டி "அப்பா" என்று கூறக் குழுமி இருந்தவர்கள், அவனே குழந்தையின் தந்தையாக இருக்க முடியும் என்று எண்ணி வணிகனிடம், "நாளைக்கு இதற்கு ஒரு முடிவு செய்யலாம்" என்று அடக்கினார்கள். மேலும், இரவு தங்குவதற்கு அவர்களே ஒரு வீட்டை ஏற்பாடு செய்தார்கள்.

வணிகன் பலமுறை மறுத்தும், நீலி வடித்த கண்ணீரை நம்பிய குழுவினர், அவனை வீட்டுக்குள் தள்ளி அடைத்தனர். அவன் வைத்திருந்த கத்தியால் தன்னைக் கொன்று விடுவான் என்று நீலி சொன்ன வார்த்தையை நம்பி, அவனிடமிருந்த கத்தியையும் அவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். வணிகனும் இவள் என்னைக் கொன்று விடுவாள் என்று அலறித் துடித்தான்.

ஊர் மன்றக் குழுவோ, "எதுவும் நேராமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம்; அப்படி ஏதாவது நேர்ந்தால், நாங்கள் எழுபதின்மரும் தீக்குளித்துச் சாவோம்; நாங்கள் சொன்னசொல் தவற மாட்டோம், எங்களை நம்பு" என்று வணிகனிடம் உறுதி அளித்து விட்டுச் சென்றார்கள்.

ஆனால் நீலிப்பேயோ வணிகனைக் கொன்று விட்டுச் சென்றுவிட்டது. மறுநாள் செய்தியறிந்த வேளாண் மக்கள், வணிகன் கூறியதை ஏற்காமல் விட்டதற்கு வருந்தினார்கள். இருந்தும், சொன்ன சொல் மாறாத வேளாண் குடிகள் நாங்கள் என்பதை மெய்ப்பிப்பதற்காக ஒரு பெரிய குழிதோண்டி அதனுள் இறங்கித் தீவைத்துக் கொண்டார்கள். இதைக் கேள்வியுற்ற மூவேந்தர்கள், வேளாளர் பெருமையைப் புகழ்ந்து 3 பாடல்கள் எழுதியதாகவும், அவற்றைத் "தமிழர் நாவலர் சரிதை" என்னும் நூலில் இருந்து எடுத்து, மு. இராகவையங்கார் தம்முடைய "பெருந்தொகைப் பாடல் தொகுப்பு" என்னும் நூலில் வெளியிட்டதையும் குறிப்பிடுகிறார்.

இதுதான் நீலி பற்றிய கதை ஆனாலும், அது கதைகளில் பலவாறாகப் பேசப்படுகிறது. கேரள, கன்னட இலக்கியங்களிலும் சிலசில மாற்றங்களுடன் நீலியின் கதை இருக்கிறது. மேலும், இசக்கி அம்மன் கதையுடனும் இணைந்து, பழையனூர் நீலிக் கதை வில்லுப்பாட்டு வடிவிலும் பாடப்படுகிறது. ஆனால் எல்லாவற்றிலுமே நீலி பழிவாங்கும் பேயாகவே பேசப்படுகிறாள்!

## சமணப் பின்னணியும் நீலிக்கண்ணீரும்

நீலியைப் பற்றிய தொன்ம வரலாறு ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சமணச் சார்புக் காப்பியமாம் குண்டலகேசியில், "நீலகேசி"யாக வருகின்ற சமணப் பெண் துறவியைக் குறிப்பதுதான் இந்த நீலிக்கண்ணீர் என்பதுவே!

## நீலிக்கும் அவள் கண்ணீருக்கும் ஏன் இப்படித் தொடர்புபடுத்தப்படுகிறது?

சமணக் கொள்கை என்பது, அனைத்துப் பொருட்களும் கடவுளால் படைக்கப்பட்டவை என்பதை மறுப்பது; உலகில் எதுவும் கடவுளால் படைக்கப்பட்டது கிடையாது. தோன்றுவது அனைத்தும் உருமாற்றம் அடைவதுதான் உண்மை; மண் சேர்ந்து இறுகும் நிலையில் மலையாகும்; அதேபோல் மலை தேய்ந்து மண்ணாகும்; இவற்றின் துகள்கள்தான் உருமாறுகின்றனவே தவிர, மலையோ அல்லது மண்ணோ அழிவது கிடையாது என்பதே சமணம் சார்ந்த கொள்கை! ஆனால், அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டவை என்று கூறுவது சுயம்பு வழிபாட்டுக் கொள்கையாளர் வாதம்! இரண்டிற்கும் முரண்பட்டதால் அடிக்கடி மோதல் ஏற்பட்டது.

இந்த வாக்குவாதத்தில் சமணத் துறவியான நீலிகேசி முறையாக எதிர்த்தும் சான்றுகள் கேட்டும் வாதித்ததால், எதிர்த்தரப்பினர் பதிலளிக்க முடியாமல் போகவே, அவர்கள் அரசரின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பி, அந்தச் செல்வாக்குடன் அவளைச் சிறைப்பிடித்தனர். உயிர்ப்பலியாக அவளுக்குக் கொடுத்த தண்டனைக்காக அவள் இழுத்துச் செல்லப்படும்போது, கண்ணீர் விட்டுக் கலங்கி இருக்கிறாள். எதற்குமே கலங்காத நீலி கண்ணீர் வடிக்கிறார் என்று சூழ்ச்சியால் வெற்றி பெற்றவர்கள் அவளைக் கேலிசெய்து சிரித்தார்கள். அதிலிருந்து இந்நிகழ்ச்சியைச் சமண வாதங்களின் போது தூற்றுவதும் பழிப்பதுமாகத் தொடர்ந்ததால், நாளடைவில் "நீலிக்கண்ணீர் நெத்தியிலே" என்னும் சொலவடை பழிப்பதற்காகவே பயன்படுத்தும் சொற்றொடராக மாறிவிட்டது!

உண்மையைச் சொல்லப் போனால், நீலி உயிருக்குப் பயந்து கலங்கவில்லை என்பதே முற்றும் சரியானது. ஆனால் கண் கலங்கியதற்குக் காரணம், உண்மையை உணர்ந்து கொள்ளாதவர்களிடம் சிறைப்பட்டுத் தோற்றுவிட்டோமே என்பதை எண்ணித்தான்!

## முடிவுரை

சிறந்த பண்பாட்டு மானுடவியல் ஆய்வாளரான தொ. பரமசிவம் ஐயா அவர்களின் ஆய்வில், "தெய்வம் என்பதோர்" நூல் பண்பாட்டுத் தொன்மக் கதைகள் அடங்கிய ஒரு நூலாக வெளியே வந்தது. இதில் அவர் இரண்டாம் கதையாக நீலியைப் பற்றி எழுதி இருக்கிறார். இக் கதையைப் பற்றி அவர் ஆழமான கருத்துக்களைக் கூறிப் படிப்பவர்களையும் சிந்திக்க வைக்கிறார். அதில் குறிப்பிடும்போது, இலக்கியங்கள் காலந்தோறும் பெண்களைப் பற்றிய ஒருதலை சார்பான கருத்துக்களையே வைப்பதாகத் தாங்குவதை உறுதியாகத் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

ஆனாலும் விதிவிலக்காக வரலாற்று நிகழ்வுகள் பலவற்றின் மையக்கருத்துகள், பண்பாட்டுத் தெய்வங்களிடையே காணப்பட்டாலும் நீலி போன்ற நம்முடைய பழையபெண்தெய்வங்கள் பழிவாங்குவதற்கே படைக்கப்பட்டதைக் குறிப்பிட்டும், காத்தவராயன், சுடலைச்சாமி, கருப்பண்ணன் போன்ற ஆண்தெய்வங்களை மட்டும் வீரமுள்ள தெய்வங்களாகவே

படைத்திருக்கும் நோக்கத்தினால், ஆணாதிக்கமும் அடிமைத்தனமும் மேலோங்கியிருக்கும் நிலையையையும் சுட்டிக் காட்டுகிறார்.

இதுபோன்ற பல வரலாற்றுக் கதைகள் பலவகைகளில் வடிவம் பெற்று இன்றும் வாழ்ந்து கொண்டே இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை முழுதும் கற்பனை என்று ஒதுக்கிவிட முடியாது. ஆனாலும், அவை ஏதோ ஒரு வடிவில் நம்மிடம் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை நாம் மறுக்க இயலாது. ஒரு சமயத்தைச் சாடுவதற்காக வேண்டுமென்றே பழிப்புப் பொருளில் பண்டையநாள் தொட்டு நீலிக்கண்ணீர் இடம்பெற்றாலும் நீலி என்னும் பெயர், இத்தனைக் காலங்கடந்தும் தொன்மை மாறாமல் மக்கள் பேச்சுமொழியில் கலந்திருப்பதே வரலாறு வழிவந்த சான்றாக வாழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை அறியமுடிகிறது!

## வரமான சுகந்தங்கள்

பால் வாசம் கூழ் வாசம்
நெய் பருப்புச் சாத வாசம்
எண்ணெய் வாசம் சோப்பு வாசம்
மென்மையான பவுடர் வாசம்;

பூ வாசம் தேன் வாசம்
வண்ணத் தூரிகை வாசம்
முதல் மழை வீழ்ந்த மண் போன்றதொரு வியர்வை வாசம்;

இவை யாவும் துயில் கலையா
அதிகாலை குளிர்ப் பொழுதினில்
சுழுத்தைக் கட்டிக் கொண்டுறங்கும்
குழந்தையின் அருகாமை தரும்
அன்னைக்கென்றே வரமான சுகந்தங்கள்;

ஆண்டொன்று போய் வயதொன்று கூடினும்
என்றென்றும் நினைவில் இதமாய்
கமழ்ந்திடும் இளந்தளிர் வாசமே
தெவிட்டாத பேரின்பம் தந்திடுமே!

**~கவிஞர் ஞனினி சுந்தரராஜன்.**
வட அமெரிக்கா.

# மருத்துவர் திலகம் பதம்பூஷன் பத்மாவதி

1917 ஆண்டு , பர்மாவின் ரங்கூனில் ஒரு நடுத்தர குடும்பத்தில் ஒரு தமிழ் இந்தியப் பெண் பிறந்தார், அவளுடைய தந்தை பிழைப்புக்காகச் சென்றிருந்த இடத்திற்கு அவர் அவளுக்கு சிவராமகிருஷ்ணா பத்மாவதி என்று பெயரிட்டார். பெண்கள் பாரம்பரியமாக சமையலறைக்குள் / படிப்பறிவில்லாதவர்களாக இருந்த காலத்தில், நடுத்தர வர்க்கப் பெண் ரங்கூன் மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் பட்டம் பெற்றார்.

ஜப்பானியர்கள் பர்மாவை ஆக்கிரமித்தபோது, அவர்கள் சிறிது காலம் கோயம்புத்தூரில் உள்ள தங்கள் பாரம்பரிய இல்லத்திற்குத் திரும்பினர். 1949 ஆம் ஆண்டில், ஒரு பெண் இந்திய மருத்துவரால் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு FRCP-ஐப் பெறுவதற்காக அவர்லண்டனுக்குச்சென்றார். அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் மேலும் படிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அங்கு அவர் புகழ்பெற்ற இருதயநோய் நிபுணர் ஹெலன் டவுசிக்கிடம் பயிற்சி பெற்றார் . அதன் பிறகு, அவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார், அங்கு அவர் இருதயவியலின் தந்தை பால் டட்லி வைட்டிடம் பயிற்சி பெற்றார்.

அமெரிக்காவில் ஒரு புகழ்பெற்ற இருதயவியல் பணி அவருக்குக் காத்திருந்தபோது, அவர் இந்தியாவுக்குத் திரும்பி இந்தியர்களுக்கு சேவை செய்வதில் உறுதியாக இருந்தார். 1953 ஆம் ஆண்டு லேடி ஹார்டிங் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, இந்தியாவின் முதல் பெண் இருதயநோய் நிபுணரானார்.

இந்தியாவின் முதல் கேத்லாப் & பிரத்யேக இருதய மருத்துவமனையை எஸ்.ஐ.பத்மாவதி தொடங்கினார். இந்தியாவின் முதல் டி.எம். கார்டியாலஜி

படிப்பைத் தொடங்கினார். ஏழைகளுக்கு சேவை செய்வதற்காக 1962 ஆம் ஆண்டு அகில இந்திய இதய அறக்கட்டளையை (AIHF) நிறுவினார். 1967 ஆம் ஆண்டு மௌலானா ஆசாத் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார், அந்த நேரத்தில் அவரது புகழ் பரவியது. இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு அவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கி கௌரவித்தது.

அவர் ஒரே நேரத்தில் 3 சிறந்த கல்லூரிகளின் இருதயநோய் நிபுணர் மற்றும் நிர்வாகியாக இருந்தார் - MAMC, GBPant மருத்துவமனை & லோக். நாயக் மருத்துவமனை. அவர் 1978 இல் எம்ஏஎம்சியின் இயக்குநராக ஓய்வு பெற்றார்.

1981 ஆம் ஆண்டு டெல்லியில் தேசிய இதய நிறுவனத்தை (NIH) நிறுவினார். 90 வயதில், பத்மாவதி 2007 ஆம் ஆண்டு ஐரோப்பிய இருதயவியல் சங்கத்தின் உறுப்பினரானார்.

95 வயது வரை, (ஆண்டு 2015), பத்மாவதி ஒரு நாளைக்கு 12 மணிநேரம், வாரத்தில் ஐந்து நாட்கள், அதிநவீன இருதய பராமரிப்புடன் ஏழை மற்றும் ஏழை இந்தியர்களுக்கு சேவை செய்ய உழைத்தார். அந்த ஆண்டு, அவர் செயலில் பயிற்சியில் இருந்து ஓய்வு பெற்றார். இந்திய அரசு இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த சிவில் விருதான 1992 இல் பத்ம விபூஷன் விருதை வழங்கியது.

பத்மாவதியும் அவரது சகோதரி ஜானகியும் ( நரம்பியல் நிபுணர்) திருமணமாகாமல் இருந்து ஜானகி-பத்மாவதி அறக்கட்டளையைத் தொடங்கினர், ஏழை மக்களுக்கு உயிர்காக்கும் இதய அறுவை சிகிச்சைகளுக்கு பணம் வழங்குவதற்காக ஒரு அறக்கட்டளையைத் தொடங்க தங்கள் முழு வருமானத்தையும் செலவிட்டனர்.

இருதயவியல் துறையில் ஏழைகளுக்கு சேவை செய்வதற்காக தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்த பிறகு, Padmavathi 2020 இல் 103 வயதில் கொரோனாவால் காலமானார்.

இந்தியாவின் முதல் பெண் இருதயநோய் நிபுணரின் எழுச்சியூட்டும் கதை இங்கே, அவர் தனது நாட்டிற்குத் திரும்புவதன் மூலம் இவ்வளவு சாதனை படைத்தார். தமிழ்நாடு மற்றும் இந்தியா தங்கள் மகள் சிவராமகிருஷ்ணா ஐயர் பத்மாவதி பற்றி மிகவும் பெருமைப்பட வேண்டும்.

முகநூல் பதிவு

# ஆத்திச்சூடி கதை -- அரனை மறவேல்

**முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி**
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

ஒரு காலத்தில் மதுரையில் அடியார்க்கு நல்லார் என்ர சிவ பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் எப்போது சிவ அடியார்களுக்கு உணவு அளித்த பின்பே தான் தன் குடும்பத்துடன் உணவருந்துவார். இவர் அன்ன தானம் அளிப்பது தெரிந்த நிறைய சிவனடியார்கள் இவர் வீட்டுக்கு வரத் தொடங்கினார். தினமும் இவர் சிவனடியார்களுக்கு உணவளித்தார். இதனால் இவர் வீட்டிலிருந்த நெல்லும் பணமும் செலவானது. இவரிடம் நெல்லோ பணமோ இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

ஒரு நாள் இவர் மனைவி இவரிடம் வந்து ''இன்று சோறாக்க அரிசி இல்லை. நம் பிள்ளைகள் பசியால் வாடுகின்றனர். யாரிடமாவது போய் கொஞ்சம் அரிசி வாங்கி வாருங்கள்'' என்றார். இவர் ''அப்படியா சிவனடியார்களும் வந்துவிடுவார்களே. அவர்களிடாம் நம்மிடம் அரிசி இல்லை என்று சொல்ல முடியாதே இரு இரு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு போனார். எங்கெங்கோ அலைந்தார்.

இறையருளால் ஒருவர் அடியார்க்கு நல்லாருக்கு பணம் கொடுத்து உதவினார். இவர் அங்கேயே சிவனடியார்களுக்கு உணவு சமைத்து பரிமாறினார்.. இவரது மனைவியும் குழந்தைகளும் இவரை காணாமல் தவித்து போய் இருந்தனர். இவரது சிவ பக்தியை மெச்சிய சிவபெருமான் தன் மனைவி பார்வதியிடம் ''பார்த்தாயா பார்வதி என் பக்தன் அடியார்க்கு நல்லான் தன்னையும் தன் குடும்பத்தையும் மறந்தாலும் என்னையும் என் பக்தர்களையும் மறக்கவில்லை. அவர்களுக்கு தினமும் அன்ன தானம் செய்துவிடுகிறானே'' என்று பாராட்டினார். பார்வதி சிவபெருமானிடம் ''அதனாலென்ன நாம் அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் உதவுவோம். நெல்லை அள்ள அள்ள குறையாத உலவாக் கோட்டையை அருளுவோம். அவன் அதில் இருந்து நெல்லை எடுத்து தன் குடும்பத்துக்கும் நம் அடியார்களுக்கும் உணவளிக்கட்டும்'' என்றார். சிவனும் அடியார்க்குநல்லானுக்கு காட்சி அளித்து உலவாக் கோட்டையை அருளினார்.

கோட்டை என்றால் செங்கோட்டை செஞ்சிக்கோட்டை போன்றது அல்ல. அந்தக்காலத்தில் வைக்கோலை தடிமனாகப் பரப்பி அதில் ஐந்து படி பத்து படி நெல்லைக் கொட்டி சுற்றிலும் வைக்கோலை திரித்து மேலே கொண்டு வந்து வளைத்துவிடுவார்கள். பார்ப்பதற்கு காம்பு நீண்டு வளைந்த கத்திரிக்காய்போல காட்சியளிக்கும். உள்ளே நெல் பாதுகாப்பாக இருக்கும். அழகர் கோயிலில் நெல் காணிக்கை அளிப்பவர்கள் இப்படித்தான் கோட்டை கட்டி தலையில் சுமந்து கொண்டுவருவார்கள். இறைவனை மறக்காமல் நாம் கோயிலுக்கு செல்ல வேண்டும். ஆலயம் தொழுவதெளசாலவும் நன்று அல்லவா. அது போல நாம் இறைவனின் பக்தர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்ய வேண்டும். இதனால் நாமும் நம் குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக வாழலாம்.

# விழியோரம் ஒரு வானவில்

வண்ணக்கோலங்கள் வரவேற்பறையை அழகாக்க...
வெண்ணிற தேவதைகள் பஞ்சுப்பொதிகளாய் வானவில் வளையமாய் சுயமிகள் எடுப்பதும்,
புன்னகைப் பூக்களாய்ப் பூத்துக் குலுங்க மருத்துவமனையே விழாக்கோலம் பூண்டது.

உயிர்காக்கும் சேவை செய்யும் பொற்கரங்களை, தூய உள்ளங்களை
உலகமெங்கும் ஒன்று சேர்ந்து வாழ்த்தும் நன்னாளான
உலக செவிலியர் தினமான இன்று மருத்துவமனையில் செவிலியர்கள்
அனைவருக்கும் ரோஜாப் பூக்களும் கேக்கும் வழங்கப்படுகிறது.

ஒரு இளைஞன் சாலை விபத்தில் அடிபட்டு மயக்கமான நிலையில் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிறது. உறவினர்கள் யாருமற்ற கோமாவில் இருக்கும் அவனைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பில் நர்ஸ் ரோஸி நியமிக்கப்படுகிறாள்.

அசைவற்றுக் கிடந்தாலும் ஏனோ அவன்மீது ஒரு பற்று இவளுக்கு.

ஒரு டிரஸ்ட் மூலமாக அவனைப் பராமரிப்பதற்கான கட்டணம் வந்து கொண்டிருக்கிறது. காப்பகத்தில் வளர்ந்த ரோஸிக்கு இவன் ஏதோ ஒரு உறவாய்த் தோன்றுகிறது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும் அவனிடம் அன்றாட நிகழ்வுகளைக் கூறிக்கொண்டே மருந்து கொடுப்பது கவனித்துக் கொள்வதென சுறுசுறுப்பாய் இருப்பாள்.

ரோஷன் எனப்பெயரிட்டு தினமும் அவனைப் புகைப்படம் எடுத்து வைத்துக் கொள்வது, அவனைப் பற்றிய கவிதைகள் எழுதுவது என ஓய்வு நேரங்களைக் கழித்தாள்.

ரோஷன் கண்விழிக்கும் நாளிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

செவிலியர் நாளான இன்றாவது அவன் கண்விழிக்க மாட்டானா என்ற ஏக்கத்தோடு ரோஜாப் பூவைக் கையிலேந்தி ரோஷனின் அறைக்கு ஓடுகிறாள்.

அங்கே அறையில் இல்லை என்பதையறியாமலே...

வெறிச்சோடியது அறை.

வார்டில் உள்ள அறைகள் மற்றும் வளாகம் முழுவதும் தேடிப் பார்த்து மருத்துவமனை வரவேற்பறைக்கு முச்சிரைக்க ஓடிவரும்போது...

கையில் சிவப்பு ரோஜாப் பூங்கொத்தோடு நாற்காலியில் சோர்வாக ஒரு நோயாளி எங்கோ பார்த்து அமர்ந்து கொண்டிருக்க...
அவன் அவன் ரோஸியின் ரோஷன்...

இவ்வளவு நாள் வரை தன்னைக் கவனித்துக் கொண்ட செவிலியர் ரோஸிதான் என்று விசாரித்து....
யாரந்தத் தேவதையென்று கண்கள்
பனிக்கப் போவோர் வருவோரை ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டிருந்தான்.
உறைந்து போன நினைவுகள் துளிர்க்கக் காரணமான ரோஸி கண்ணீர்மல்க அவனெதிரே ஓடிவந்தாள்.

**மு.செந்தாமரை**

# ARANYANI

**VIJENI**

## CHAPTER - 11

2017, Sivagangai, India

The shocking news of the close of Kiladi excavations has been flashed in the dailies on the tenth of October 2017. Sri Raman, who is in charge of the excavations, has announced to the media the work is over and they are going to close the trenches. Saravanan attended this press meeting. It was like burying history deep into the earth. He was angry. Swapna spoke to him. The press meeting started.

Saravanan shot out his question. Along with Kiiladi at Vadhnakar also the excavations started. It is the birthplace of prime minister Modi. Another two places in Rajasthan and VathNagar had received orders from the government to continue the excavations. But in Kiiladi it is refused. Why?

In Kiiladi we collected a good number of materials so we asked for a report from Amarnhath Ramakrishnan. He didn't submit the report on time.

Sources say it is an eyewash. The report was asked because Tamil activists conducted a demo.

I don't know that.

Due to continuous agitations and demos, the central government passed the order on the twentieth of February but didn't allocate the funds in the proper time. It allocated the funds only on the 17th of March, unfortunately, it transferred Amarnath Ramakrishnan to Assam on the 24th of that month. Is that right?

You can ask me about the things after I took up the charge.

You submitted a report that you started the work on the 24th of April and finished it by September

The officer replied in a different tone, ‘If it is completed, then it should be reported as completed. It is the fact. The excavation is over.’

Saravanan angrily said, 'No, you have come here to put an end to the work. It confirms the suspicion of the Tamil activists. If we compare the work previously done with yours; it is... [nothing]'

Why do you compare?

In two years, 2,500 square feet were dug but the last year after you took up the job, only 400 square feet were dug. In the previous period, they dug 102 pits but in your period only eight. So we have to compare the volume of work done, and the involvement shown in this research.

Do you want me to dig unnecessarily? It is not good for any archaeological research.

We know that Sir, but the eight pits were half done, and not dug up to the necessary depth.

Last year, the excavations showed a sign of an industry in the southern part of it. This time you must have continued the work in that direction, but you didn’t move that side, you have been working on the opposite side of it. Why?

If it is necessary, the pits will be dug.

Last time they dug many pits, He said if there is no use in one pit there will be another pit and he dug many pits and collected lots of materials. But you have dug all eight pits in the same, place and say ‘no use’. You have a hidden agenda in this work.

The officer irresponsibly replied, 'It rained so we couldn’t get anything.'

When Amarnath Ramakrishnan was working here, it rained. But he continued his work sincerely. In your supervision time, did it rain the entire period? Amarnath dug in 43 places, but you have done only eight,

This is not a public works department, replied Raman in an angry tone and left that place.

Saravanan gave the details to his media persons. ‘In the last period, eighty men worked, but in Sri Raman’s period, only 20 men worked. The central government had been involved in an eye wash this time. It has given permission for name’ sake to stop the agitation of the Tamil activists but silently it had discouraged the work with the help of this officer.

Last time, 6000 materials were unearthed. 90per cent of them were glass products. But this time the report is contradictory. It says no building is built in continuation with others. They are separate and individual. This statement damages the previous report.

In Kiiladi, we found the long rows of buildings and a city structure for the first time in Tamil Nadu. But this officer had spoilt the whole thing with his false report. He may even say only plastic bangles were there in the pits.

The press of people burst out in laughter. Saravanan continued his speech with the mike given to him.

Last time, Amarnath Ramakrishna identified twenty samples to be sent for the time analysis. But the central government permitted only two out of those twenty and they were proved to be between BC 200 to 195.

Last time they dug four and a half meters but the samples sent for analysis were from the two-meter depth only. If the things collected from the four-and-a-half meter depth were sent, the period may go even another hundred years back.

Now Sri Raman has told the collected things will be sent for the carbon time analysis, but none of them were collected from the required depth. They were all from the surface, so they will prove to be from the modern period. Then the archaeologists will say that Keeladi society is modern, and it belongs to the period of Karunanithi. So Tamil scholars are worried because their antiquity is pulled down to later centuries by the officers of the north. Then Saravanan concluded his speech with his name and the name of his photographer. This is for his TV channel.

Dev closed his All Tab after the meeting with MM was over. He can virtually see both MM city and Keeladi city. Keeladi was once in existence, but now no more. MM metropolitan is now not in existence but will arise in the future. His one eye looked at the past and the next viewed the future.

When the last drop of petrol was finished, the war between the Christians and Islams came to an end. They had placed their gods in front of them to fight against each other. When the war was over, they viewed the death of their Gods. Then no one needed faith in God. Society automatically came out from the clutches of religion and castes. Dev needed no God. He believed that he can live and die without the mercy of God.

If God listened to him, he wished to place a request to Him. Is there any chance of protecting these two cities?

# கார்ல் சாகனின் வெளிர் நீலப் புள்ளி

**தேமொழி**
**சான் ஃபிரான்சிஸ்கோ**

*கார்ல் சாகன் (1934-1996), ஒரு புகழ்பெற்ற அமெரிக்க வானியலாளர், வானியற்பியலாளர், அண்டவியல் ஆய்வாளர். சிக்கலான அறிவியல் கருத்துக்களை எளிய முறையில் தெளிவிக்கக்கூடிய வகையில் உரையாற்றக் கூடிய வல்லமை பெற்றிருந்த அறிவியல் உரையாளராக அறியப்பட்டதால் மக்களிடம் அவர் உரைகளுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது.*

*கார்ல் சாகனின் ஆலோசனையின் பேரில், 1990 பிப்ரவரி 14 அன்று விண்கலம் வாயேஜர் -1 புவியின் சுற்றுப்புறத்தை விட்டு சூரிய மண்டலத்தின் விளிம்புகளுக்குப் புறப்படும்போது, புவியை இறுதியாக ஒருமுறை சுற்றிவந்து படம் எடுத்தது. புவியின் இந்த வெளிர் நீலப் புள்ளி உருவப்படத்தைப் படம்பிடித்தபோது வாயேஜர்-1 விண்கலம் சுமார் 4 பில்லியன் மைல்கள் தொலைவில் இருந்தது, சிதறிய ஒளிக்கதிர்களின் இடையே சூரியனுக்கு மிக அருகில் படம் எடுத்ததன் விளைவாக, இப்படத்தில் பூமி, ஒரு சிறிய ஒளிப் புள்ளியாக, 0.12 பிக்சல் அளவுள்ள வெளிர் நீலப் புள்ளியாகத் தெரிகிறது.*



*கார்ல் சாகன் எழுதிய "பேல் ப்ளூ டாட்: எ விஷன் ஆஃப் தெ ஹியூமன் ஃப்யூச்சர் இன் ஸ்பேஸ்" (Pale Blue Dot: A Vision of the Human Future in Space by Carl Sagan) என்ற நூல் அதிகம் விற்பனையான நூல்களுள் ஒன்று. இது விண்வெளி ஆய்வின் தேவையை வலியுறுத்தியது. கார்ல் சாகனின் 'வெளிர் நீலப் புள்ளி: விண்ணை நோக்கிய பார்வையால் உணரும் மனிதர்களின் எதிர்காலம்' என்ற இந்த நூலின் கருத்து மிகவும் பரவலாக வாசிக்கப்படு பாராட்டப்படும் ஒரு கட்டுரை. அதன் மொழிபெயர்ப்பு கீழே தரப்பட்டுள்ளது.*

நாம் விண்வெளிக்குச் சென்று அங்கிருந்து புவியைப் பார்த்தால், அது ஒரு சிறிய புள்ளியாகத் தான் தெரியும்...

''மீண்டும் அந்தப் புள்ளியைப் பாருங்கள். அதோ அங்கே. அதுவே நம் வீடு. அதுவே நாம் இருக்குமிடம். அங்குதான் நீங்கள் விரும்பும் அனைவரும், நீங்கள் அறிந்த அனைவரும், நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்ட அனைவரும், இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு மனிதரும் தங்கள் வாழ்கையை அங்கேயே வாழ்ந்தார்கள்.

நமக்கு மகிழ்ச்சியும் துயரமும் தரும் அனைத்தும், நம்பிக்கை தருவதற்குத் தோன்றிய ஆயிரக்கணக்கான மதங்கள், கொள்கைகள், பொருளாதாரக் கோட்பாடுகள், வேட்டையாடியும் சேகரித்தும் வாழ்ந்த முன்னோர்கள் அனைவரும், ஒவ்வொரு வீரரும் கோழையும், ஒவ்வொரு பண்பாட்டை ஆக்கியவரும் அழித்தவரும், ஒவ்வொரு அரசரும் உழவரும், காதலிக்கும் இளவயது இணையர்கள் அனைவரும், ஒவ்வொரு தாயும் தந்தையும், வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு குழந்தையும், கண்டுபிடிப்பாளர்களும் ஆய்வாளர்களும், ஒவ்வொரு வாழ்வியல் நெறி வழிகாட்டியும், ஒவ்வொரு ஊழல் அரசியல்வாதியும், ஒவ்வொரு 'சூப்பர் ஸ்டார்' பிரபலங்களும், ஒவ்வொரு 'உயர்வாக மதிக்கப்பட்டத் தலைவர்களும்', ஒவ்வொரு புனிதரும் பாவியும் என நம் மனிதயின வரலாற்றில் வாழ்ந்த அனைவரும் அந்தச் சூரிய ஒளிக்கதிரில் மிதக்கும் தூசித் துகள் போலத் தெரியும் அந்தச் சிறு புள்ளியில்தான் வாழ்ந்தார்கள்.

பரந்த பிரபஞ்ச அரங்கில் பூமி என்பது மிகச் சிறிய மேடையே. இந்த ஒரு சிறு புள்ளியின் ஒரு மூலையில் வாழ்பவர்கள், தாங்கள் சென்ற இடத்தில் தம்மைப் போலவே இருக்கும் உலகின் மற்றொரு மூலையில் வாழ்பவர்களுக்கு இழைத்த முடிவில்லா கொடூரங்களை எண்ணிப் பாருங்கள். அவர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி எவ்வளவு தவறாகப் புரிந்து கொள்கிறார்கள், எவ்வளவு ஆவலுடன் ஒருவரையொருவர் கொல்லத் தயாராக இருக்கிறார்கள், எவ்வளவு தீவிரமான வெறுப்பை அவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதை நினையுங்கள். பெருமையும் வெற்றியும் அடைய வேண்டும் என்று, இந்தப் புள்ளியின் ஒரு சிறு பகுதியினைத் தற்காலிகமாக ஆதிக்கம் செய்யும் ஆசையில், எத்தனை தளபதிகளும்




**THE PALE BLUE DOT OF EARTH** "That's here. That's Home. That's us." *Image: NASA / JPL*

Copyright © 1994

பேரரசர்களும் இரத்த ஆறுகளை மண்ணில் ஓட்டவிட்டார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

நம்முடைய தோரணைகள், கற்பனையான நமது முக்கியத்துவம் என்ற உணர்வு, பிரபஞ்சத்தில் நமக்கு ஒரு தனிச் சிறப்பிடம் இருக்கிறது என்று கருதும் அறியாமை ஆகியவற்றை எல்லாம் இந்த வெளிர்நீலப் புள்ளி சவாலுக்கு உள்ளாக்குகிறது. இந்தப் பரந்த, அனைத்தையும் சூழ்ந்த பெரிய அண்டவெளி இருளில், நம் பூமி ஒரு தனிமையான சிறு துகள் மட்டுமே. இந்தப் பரந்த அண்ட வெளியில் நம்மிடமிருந்து நம்மையே காப்பாற்ற வேறு எங்கிருந்தாவது உதவி வரும் என்பதற்கு எந்த ஓர் அறிகுறியும் இல்லை.

இதுவரை உயிர் வாழத் தகுதியான உலகமாக அறியப்பட்ட ஒரே இடம் பூமி தான். வேறு எங்கும், நாம் எதிர்நோக்கும் குறைந்த அளவு எதிர்காலத்தில், மனித இடம் குடியேற வேறிடம் ஏதும் கிடையாது. ஆமாம். வேறு கோள்களுக்குச் சென்று வரமுடியும், —ஆனால் குடியேற இன்னமும் வாய்ப்பில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இப்பொழுது வாழ நமக்கு இருக்கும் ஒரே இடம் இந்தப் பூமிதான்.

வானியல் உண்மைகள் மனிதரிடம் பணிவு மனப்பான்மையை, பண்பை உருவாக்கும் அனுபவம் என்று சொல்லப்படுகிறது. நாம் காணும் நமது சிறிய உலகின் இந்தத் தொலைதூர உருவத்தை விட மனித அகந்தையை அறியாமையை உணர்த்தும் சிறந்த சான்று வேறொன்றும் இல்லை.

எனக்கு இது, நாம் ஒருவருக்கொருவர் மிகவும் அன்பாக நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பையும், இதுவரை நாம் அறிந்த ஒரே இல்லமான இந்த மங்கலான வெளிர் நீலப் புள்ளியைப் பாதுகாத்து, மதித்து, நேசிக்க வேண்டிய கடமையையும் வலியுறுத்துகிறது.''

— கார்ல் சேகன், பேல் ப்ளூ டாட்: எ விஷன் ஆஃப் தெ ஹியூமன் ஃப்யூச்சர் இன் ஸ்பேஸ்

**உதவிய தளங்கள் :**

- காணொளி: *https://youtu.be/tgQ1PtkZvGU*
- தகவல்: https://www.planetary.org/worlds/pale-blue-dot

# புதிய வெளியீடுகள்





சந்திரோதயம் பதிப்பகம், மதுரை-18.
போன் 7010997639